# அண்ணாவின் அறிவுக்கனிகள்



முல்லை பிஎல் முத்தையா

# அண்ணாவின்
# அறிவுக் கனிகள்

○ அரசியல் ○ சமூகம் ○ கலை ○ இலக்கியம்
○ அறிவியல் ○ வரலாறு ○ இசை ○ நாடகம்
○ பகுத்தறிவு ஆகியன பற்றிப் பல்வேறு பேச்சுக்களில் இருந்தும் எடுத்த சுவையான கனிகள்.

○

தொகுத்தவர்

**முல்லை. பிஎல். முத்தையா**

MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1

**தேன்மழைப் பதிப்பகம்**
34, கொத்தவால் தெரு, ஆலந்தூர்
சென்னை - 600 016

முதல் பதிப்பு : செப்டம்பர்-1995

© தேன்மழை பதிப்பகம்

விலை : ரூ. 25-00

48938

அச்சிட்டோர் : ஸ்ரீ வெங்கடேஸ்வரா அச்சகம்
7/40, கிழக்குச் செட்டி தெரு,
பரங்கிமலை, சென்னை-16.

## அண்ணா நடத்திய திராவிட இசை விழா!

நான் இந்த நிகழ்ச்சிக்கு வரும்பொழுது முல்லை முத்தையா அவர்கள் இப்பொழுது எப்படி இருப்பார். என்கின்ற அவாவுடன் வந்தேன். காரணம் 38 ஆண்டு களுக்கு முன்பு காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் ''திராவிடர் இசை விழா'' என்ற ஒரு விழாவை நடத்திய பொழுது டி. என் இராஜரத்தினம் அவர் களுடைய நாயன இசை நிகழ்ச்சி நடை பெற்ற பொழுது அந்த இசை விழாப் பந்தலின் ஒரு மூலையில் ஒரு துண்டை விரித்துப் போட்டு அதிலே அண்ணா அவர் களும், நானும், முல்லை முத்தையா அவர்களும் அமர்ந்து அந்த இசை நிகழ்ச்சியைக் கேட்டோம்.

அப்பொழுது முல்லை முத்தையா அவர்கள் பார்ப்பதற்கு மிக வசீகரமான தோற்றத்தோடு காண் போரைக் கவர்கின்ற தோற்றத்தோடு வாலிப மிடுக்கோடு அன்றைக்குத் திகழ்ந்தவர். அவரை நீண்ட நாட்களுக்குப் பிறகு பார்க்கப் போகிறோம் என்கின்ற ஆவலோடு இங்கே வந்தேன். அவருடைய தோற்றம் 38 ஆண்டு இடைவெளியை எனக்கு நினைவூட்டியது!

என்னும் அவர் பேரறிஞர் அண்ணா அவர்களிடத் திலும், பெரியார் அவர்களிடத்திலும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களிடத்திலும் கொண்டிருந்த அன்பும், இன்னமும் கொண்டிருக்கின்ற கொள்ளைப் பிடிப்பும் என்னை வியப்பிலே ஆழ்த்திக் கொண்டேயிருக்கின்றது? அப்படிப்பட்ட நண்பரை நீண்ட நாட்களுக்குப் பிறகு சந்தித்ததில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

**திராவிடர் கழக இலக்கிய அணி சார்பாக**
**30-4-82ல் பெரியார் திடலில் நடந்த**
**பாவேந்தர் விழாவில் கலைஞர் உரை.**

## சுவை மிக்க கனிகள்

- அறிஞர் அண்ணா அவர்களின் பேச்சும் எழுத்தும் தமிழ் மக்களை விழிப்புறச் செய்தன.

- அரசியல், இலக்கியம், சமூகம் ஆகியவற்றில் மக்கள் புத்துணர்ச்சி பெற்றனர்.

- இந் நூலில் காணப்படும் கனிகள் யாவும், அண்ணாவின் பேச்சுக்களிலிருந்தும், எழுத்துக்களிலிருந்தும் பல ஆண்டுகளாத் ஆர்வத்தோடு தொகுத்தவை.

- இதை வெளியிடும் தேன்மழைப் பதிப்பகத்தாருக்கு நன்றி.

*323/10, கதிரவன் காலனி,*
*அண்ணா நகர் மேற்கு,*
*சென்னை-600 040*

**முல்லை பிஎல். முத்தையா**

# அண்ணாவின் அறிவுக் கனிகள்

## 1. இன்ப ஊற்று

செந்நெல்லும், காய் கனிவகையும், பூவும், பிஞ்சும், கிழங்கு இனமும் உண்பனவும், உடுப்பன வும், பூசுவனவும், பூண்பனவும் இயற்கை அளித் திட்ட இன்பஊற்றன்றோ! எத்துணை உழைப்பினை நல்கி நம்மை மகிழ்வூட்ட அதன் ஆக்கசக்தி அளப்பரிதல்லவா!

## 2. வாழ்வின் அடித்தளம்

நல்ல தோழமை, நல்ல உரையாடல், இவை இரண்டுமே நல்லொழுக்க வாழ்வின் நாடிநரம்புகள்.

## 3. சுகபோகியும் சுகவாசியும்

சுகபோகிக்கு அடிப்படைத் தத்துவம் தெரிவ தில்லை. மன உளைச்சலை அடிமனதோடு அடக்கிக் கொண்டு, ஏழ்மை இருட்டில் இடறி விழுந்து கிடக்கும் சுகவாசியைக் கண்டு பிறந்த ஏளன உந்து சக்தியே அவனைச் சுகபோகி ஆக்கிவிட்டது.

## 4. வெஞ்சிறையில் இருப்போர்

மந்தமாருதத்தின் பாசறையில் மான உணர்ச்சியை விலை கூறி விற்ற விற்பன்னர்களைத் தவிர, மற்றையோர் வெஞ்சிறையில்தான் இருக்க முடியும்!

## 5. பாம்பு கடிக்காமல் விடுமா?

'சிங்காதனம்' என்பது ஒரு பாம்புப்புற்று. அதன்மீது அமர்வோரை அன்னார் ஏமாந்த நேரத்தில், புற்றிலிருந்து கிளம்பும் பாம்பு பொல்லாத பற்களால் கடித்துக்கொல்லும். கொல்லாமல் எப்படி இருக்க முடியும்?

## 6. முன்னணிக்கு வருவோர் யார்?

ஓய்வை விரும்புவோர் ஒதுங்கி நிற்கலாம். சாய்வு நாற்காலியினர் சாய்ந்து கிடக்கலாம். பதவிப்பிரியர்கள் பாதையை விட்டு விலகலாம். திராவிட இனத்தின் மானத்திற்காக உயிரையும் துறக்கும் மனப்போக்குடையோர் மட்டும் நம் முன்னணிக்கு வரலாம்.

## 7. கையில் உள்ள அளவு கோல்

இன்றையத் தமிழன் வாளேந்திய கரத்தோடில்லை. ஆரியனின் தாளேந்திக் கிடக்கிறான். அவனிடம் இன்று செங்கோல் இல்லை. ஒரு சாதிக்கு இன்னோர் சாதி எந்த அளவு மட்டம் என்பதைக் கண்டறியும் அளவு கோல் தானிருக்கிறது.

## 8. தமிழனின் இன்றைய நிலை

தரணி இழந்து, பரணி மறந்து, தாசனாகி ஏசுதலைத் தாங்கி நிற்கும் நிலை. வளமிழந்து,

களம் மறந்து, வாழ்வு கசந்து, தாழ்வடைந்துள்ள நிலை. அணைந்த விளக்காய், கவிழ்ந்த கலமாய், தூர்ந்த அகழாய்க் கிடக்கும் நிலை. இதுதான் தமிழனின் இன்றைய நிலை.

## 9. குற்றம் எங்கே உள்ளது?

விஞ்ஞானம் குழைத்துரைக்கப்பட்ட வண்ணச் சுண்ணம். அதனைக் கொண்டு அழகான பெண்ணின் உருவையும் தீட்டலாம்; கோரமான குரங்கின் உருவையும் வடிக்கலாம். குற்றம் கலர்க் கிண்ணத்தின் மீதா? அல்லது புனையும் ஓவியன் மீதா?

## 10. வடு இருக்கும்

சுவரிலிருந்து சிறு ஆணி பெயர்க்கப்பட்டால், ஆபத்து இல்லை என்றாலும், அது நன்றாக இராது.

## 11. மத்தாப்பூவும் அகல் விளக்கும்

மத்தாப்பூக் கொளுத்தும்போது எவ்வளவு வண்ணம்! எத்தனை ஒளி! ஆனால், எவ்வளவு சீக்கிரத்தில் தீர்ந்து போய்விடுகிறது! சிறு அகல் விளக்கானாலும் பரவாயில்லை. மத்தாப்பூப்போல அல்லாமல், நின்று நிதானமாக ஒளிவிட்டு இருளை அகற்றுகிறது.

## 12. நெருங்க நெருங்கத் தெரியும்

குழந்தை பிறக்கும்வேளை, நெருங்க நெருங்கத் தாயின் கூச்சல் அதிகமாக இருக்கும்.

## 13. ஏமாளியும் கோழையும்

என்றாவது ஒரு நாள் நமக்குச் சங்கடங்கள் வரும் என்று எதிர்பார்க்காமல் இருப்பவன்

ஏமாளி; ஆனால் சதா அதனையே எதிர்பார்த்து வருந்திக் கிடப்பவன் கோழை!

## 14. நிரந்தரமானது எது?

மதிப்பு ஒரு காலத்தில் மறையலாம்; மரியாதை ஒருநாளில் குறையலாம். ஆனால் அன்பு மட்டும் என்றும் நிரந்தரமானது.

## 15. கரியாகிவிடும் வண்ணம்

ஆகாயத்திலே கொளுத்தி வீசப்பட்ட மத்தாப்பு பல வண்ணங்களைக் காட்டி ஜொலிக்கும்; ஆனால் அது எரிந்து விழுந்தபின் கரிக்குச்சியாக விழும்.

## 16. இலட்சிய தீபம் அணையாது

வீசும் புயலுக்கிடையே, கொட்டும் மழையில், சரளைக்கல் மீது நடந்து, குன்றில் கொண்டுபோய் வைத்த அகல் விளக்கு ஏற்றி, இதனை அணையாமல் காத்து உச்சி நோக்கி ஏறி விடுகின்ற மன உறுதியும் கொள்கை ஆழமும் இருந்திடில், யாரும் அசைத்திட இயலாது நம்மை! அணைத்திட இயலாது நமது இலட்சிய தீபத்தை!

## 17. முறை மாறிய செயல்!

முரட்டுதனத்தினாலே மட்டுமே தீய காரியங்களைச் சாதித்துக் கொள்வது என்ற முறை இப்போது வெகுவாகக் குறைந்துவிட்டது; தீய காரியம் குறையவில்லை! முறை மாறிவிட்டிருக்கிறது.

## 18. குழப்பம் தரும் கேடு

தோல்விக்குக் காரணம் மனதினிலே தெளிவான திட்டமான கொள்கையும், அதைக் கடைப்பிடித்தாக வேண்டும் என்ற நேர்மையும் இருப்பதில்லை. அதனால் அடுத்து என்ன செய்வது என்பது பற்றி முடிவெடுக்க இயலாமல், குழம்பிக்கிடக்கிறார்கள். அந்தக் குழப்பம் அவர்களின் திறமையை மண் ணாக்கி விடுகிறது.

## 19. இளைஞர்களே காரணம்

சீனாவிலே சன்யாட்சென், இளைஞர்கள் உதவியால்தான் பழைய சீனாவை மடித்துப் புதிய சீனாவை உண்டாக்கினார். ஆண்களின் ஜடையைக் கத்தரித்தார். ஒரே ஆண்டவனை வழிபடும்படி செய்தார்.

## 20. இளைஞர்கள் செய்த உதவி

ஐரோப்பாவின் நோயாளியாகக் கருதப்பட்ட துருக்கி, இன்று தலை நிமிர்ந்து நிற்பதற்குக் காரணம் கமால் பாக்ஷா, இளைஞர்கள் உதவியைப் பெற்றதால்தானே!

## 21. ஒரே கட்சியில் இருப்பார்களா?

அழகப்பர்கள், டால்மியாக்கள், டாட்டாக்கள் ஆகிய பெரும்பணக்காரர்கள் எல்லாம் எப்பொழுதும் ஒரு கட்சியிலேயே இருப்பவர்கள் என்றா எண்ணு கிறீர்கள்? முதலாளிகளுக்கு நாளை காங்கிரஸ் பிடிக்காமல் போகலாம். வியாபாரிகளுக்கு வரிப்பளு அதிகமாக அதிகமாக, அவர்கள் காங்கிரசை வெறுத்து; வேறு கட்சியிலே சேரக்கூடும். தொழிலா

ளர்கள். பலருக்கு மனம் நோகலாம். இதன் காரணமாகத் தொழிலாளர்களும் வேறு கட்சியில் சேரலாம். ஆகவே, யாரும் ஒரே கட்சியிலேயே என்றைக்கும் இருந்து விடுவார்கள் என்று சொல்லிவிட முடியாது.

## 22. குற்றம் யாரிடம்?

வேலையில்லாத் திண்டாட்டத்தால் பலர் வாடியபோது, இதற்கெல்லாம் காரணம் வெள்ளையர்கள்தான் என்றோம். முன்பு ஒரு பகையாளி இருந்தான்; எதற்கும் நாம் அவனைச் சுட்டிக்காட்டி வந்தோம். ஆகஸ்ட் 15க்குப் பிறகும் நாம் இப்படிப் பழிசுமத்த முடியுமா? முடியாது. குற்றம் வெள்ளையனிடமல்ல. நம் அரசாங்கத்தாரிடமே இருக்கிறது.

## 23. தரும காணிக்கை எங்கே?

வியாபாரிகளில் பலர் தரும காணிக்கை வசூல் செய்கிறார்கள் வசூல் செய்து, கோயில்களுக்கு அளித்தீர்களே தவிர. யாராவது ஒருவர் உயர்தரப் பள்ளி கட்டியிருக்கிறீர்களா? ஆஸ்பத்திரி கட்டியிருக்கிறீர்களா? வாசகசாலை அமைத்திருக்கிறீர்களா? அதுதானே இல்லை!

## 24. ஆண்டவனுக்கு லஞ்சம்

இன்கம்டாக்ஸ் ஆபீசுக்குக் கணக்குக் காட்டுவதற்காக, மூன்று விதமான கணக்குகள், மூன்று விதமான கணக்குப்பிள்ளைகள். பொய்க் கணக்கு எழுதி வெற்றி பெற்று விட்டால், ஆண்டவனுக்கு உற்சவத்தைப் பரிசாக அளிக்கிறார்கள். சர்க்காரையும் ஏமாற்றுகிறார்கள்.

## 25. மடாதிபதிகள் செய்யலாம்

வல்லூறுக்குப் பயந்து வந்த ஒரு புறாவின் உயிரைக் காப்பதற்காக, தனது சதையை அறுத்துக் கொடுத்தானாம் சிபிச் சக்கரவர்த்தி. இது அந்தக் காலத்தில், இப்படி யாராகிலும் இந்தக் காலத்தில் செய்வார்களா? புறா பறந்து வந்தால், நாம் அதைப் பிடிக்க முடியுமா? அப்படி பறந்து வரும் புறாவை நாம் பிடித்தாலும் மண்ணடி கவுஸ் வீட்டுக்காரர் சும்மா இருப்பாரா? சிபிச்சக்கரவர்த்தி செய்ததைப் போலச்செய்ய நமக்கு எங்கே அவ்வளவு சதை இருக்கிறது, வேண்டுமானால், மடாதிபதிகள் அதைச் செய்யலாம்?

## 26. காவல் இருந்தும் திருட்டா?

நான் இருப்பது காஞ்சீபுரம் என்பது உங்களிலே பலருக்குத் தெரியும். அங்குள்ள பெரிய சிவலாய மாகிய ஏகம்பரநாதர் கோயிலிலே, ரிஷப தேவர் வாகனத்திலே சிவனார் புறப்பட இருந்த சமயம், திடீரென்று ரிஷபவாகனத்தின் வால் இருக்கிறதே, அந்த வாலில் இருந்த கற்றையாகிய வெள்ளியை யாரோ களவாடிக் கொண்டு போய்விட்டார்கள். காவல், போலீஸ் எல்லாம் இருக்கத்தான் செய் தது; ஆனால் திருட்டும் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கிறது. சிவனார் கோயிலில் மட்டும் தான் திருட்டு என்று எண்ணிவிடாதீர்கள்.

## 27. நாமம் கொள்ளை போயிற்று

வைஷ்ணவக் கோயிலாகிய வரதராஜப் பெருமாள் கோயிலுக்குச் சென்னை பிரபல வக்கீல் V. V. சீனிவாச ஐயங்கார் டிரஸ்டி. அவர் ஐந்து வருடங்களுக்கு முன், வரதராஜப்

பெருமாளுக்கு வைரத்தினால் வெள்ளை நாமமும், கெம்பினால் சிகப்பு நாமமும் செய்து அளித்தார். பெருமாளின் நெற்றியிலே அது அணியப் பட்டிருந்தது. பக்தர்கள் அதைப் பார்த்துப் பூரித்தார்கள். ஒரு பாகவதர் அந்த நாமம் நம்மிடமிருந்தால், நம்முடைய வறுமையெல்லாம் நீங்கிவிடுமே! வைரக் கற்கள் நமது மருமகளின் திருகுபில்லைக்கு ஏற்ற கற்களாகுமே! ஆண்டவனின் பிள்ளைதானே நாம்! தகப்பனாரின் சொத்து பிள்ளைக்குத்தானே பாத்தியம்! என்று இவ்வாறெல்லாம் எண்ணி இருப்பார் அவர்; ஒருநாள் நடு இரவில், மதிற் சுவரேறிக் குதித்து உள்ளே சென்றார். வரதராஜப் பெருமாளின் நெற்றியிலே கையை வைத்தார். உடனே நாமத்தை அபகரித்துக் கொண்டு போய் விட்டார். இது போன்ற பல திருட்டுக்கள் பல இடங்களிலே நடைபெறுகின்றன.

## 28. ஏன் அப்படி நடக்கவில்லை?

நாங்கள் கடவுளிடத்தில் அன்பைச் செலுத்துகிறோம். அவர் எங்களுக்கு அறிவையும் அருளையும் கொடுக்கிறார். நாங்கள் நாஸ்திகர்கள் என்று எங்களிடத்தில் விரோதமும் பகைமையும் இருக்குமானால், நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே எங்கள் மண்டை பிளக்க என்று சாபமிடலாமே! அல்லது பேசமுடியாமல் நாக்கு இழுத்துக்கொள்ளக் கடவது என்று சொன்னால் இழுத்துக்கொள்ளுமே! கைகால்கள் பிடித்துக் கொள்க என்று சொன்னால், பிடித்துக் கொள்ளுமே! சுலபமான வழிதான்! ஆனால் எங்கேயாகிலும், இந்தக் காலத்தில் இப்படி நடக்கிறதா? நடக்க முடியுமா? முடியாது!

## 29. அவர்களால் செய்ய முடியாதா?

அமெரிக்கா செல்வபுரி அல்லவா! அமெரிக்காவிலே ஏசுநாதருக்குத் தங்கத்தேர் செய்ய முடியாதா? இத்தாலியிலே முடியாதா? இதுவரை நம்மை ஆண்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நினைத்தால், ஏசுநாதருக்கு வைரக் கருடவாகனம் செய்ய முடியாதா? செல்வமில்லையா அவர்கள் நாட்டில்!

## 30. தமிழ்ப் புலவர்களுக்கு வேண்டுகோள்

தமிழ்ப் புலவர்களே! ஒரு வார்த்தை! தாராளமாக இலக்கியங்களை ஆராய்ச்சி செய்யுங்கள். ஆனால், ஆராய்ச்சியிலேயே மூழ்கி விடாதீர்கள். அடிக்கடி வெளியே வந்து ஆராய்ச்சியில் கண்டறிந்த அறிவுக் கருவூலங்களைக் கூறிச் சமுதாய வாழ்வை வளமாக்குங்கள்.

## 31. நம்பி ஏமாந்தோம்

உரத்த குரலோன் காட்டிய வழி நடந்தோம். அரசியலில், காப்டன் காட்டிய வழி நடந்தோம். சமூகத்துறையில் பூசாரி காட்டிய வழி நடந்தோம். அருள் பெறும் நெறியில்! எத்தன் காட்டிய வழி நடந்தோம். பொருளாதாரத் துறையில். முடிவு? வாழ வழியற்று, வஞ்சிக்கப்பட்டதுதான்.

## 32. உயர்வானவன் யார்?

எவன் பொது மக்களின் கைதட்டலைப் பெறுவதற்காகத் தன் கொள்கைகளை மாற்றிக் கொள்ளாமல் இருக்கிறனோ அவனே சிறந்த மனிதன். ஒப்புயர்வற்ற இலட்சியவாதி.

## 33. ஒண்ட வந்த பேய்

காடு இன்றி, நாடு ஏதும் சொந்தமின்றி, கால் நடையாக இங்கு வந்து, திராவிடர்களின் காலடியில் கிடந்தோர்கள். இன்று தங்கள் காலடியில் திராவிடர்களைக் கிடத்திக்கொண்டு பூதேவர்களாக உலவுகின்றனர். உலவலாமா?

## 34. இந்தப் பாகுபாடு ஏன்?

எந்த விதமான சடங்கு செய்தால் சூரிய தோஷம் நீங்கும்? இது நம்முடைய ஆராய்ச்சி. சூரியன் பூமியைவிட எத்தனை மடங்கு பெரியது? இது மேனாட்டாரின் ஆராய்ச்சி. இந்நிலையில் அவன் வளத்துடன் வாழ்கிறான். நாம் வாழ்விழந்து வதைகிறோம். எனின், இயற்கையின் இனப்பாகு பாடா?

## 35. எவனால் எதிர்த்து நிற்க முடியும்?

ஒருநாடு இன்னொரு நாட்டை அடக்கி வைக்க முடியாது.அடக்கினால் எரிமலை கக்கும் மக்கள் மன மென்னும் கடல் பொங்கி வழியும். புரட்சிப்புயல் வீசும் அந்தப் புயலின் முன்பு எந்தக் கொடியவனா லும் நிற்க முடியாது.

## 36. காண விரும்புவது எது?

இப்போதெல்லாம் பாற்கடலிலிருந்து தேவர் கள் அமுதத்தை எப்படிக் கடைந்தெடுத்தனர் என்பதைக் காண விரும்பவில்லை. தொழிலாளியின் இரத்தத்திலிருந்து முதலாளி எப்படி இரத்தினம் உண்டாக்குகிறான் என்பது போன்ற உண்மை களைக் காண விரும்புகின்றனர்.

## 37. அரசின் அடித்தளம்

மக்களின் ஒழுக்கம்தான் ஓர் அரசின் அச்சாணி போன்றது. ஒழுக்கம் நிறைந்த மக்களை சமதர்ம அரசால் மட்டுமே உருவாக்க முடியும்.

## 38. தேவை எது?

மாலைக்கு மலர் தேவை. மலருக்குத் தோட்ட வளம் தேவை இது போன்றே ஆரணங்களுக்குள்ள புன்னகையை ரசிக்க, கட்டழகனுக்குக் காதல் உணர்வு தேவை.

## 39. உழைப்பு உயிரைக் குடித்தால்

தண்டவாளத்தின்மீது சென்றிடும் ரயில் போகும் போதே தண்டவாளத்தையே தேய்த்து விடுமானால், பிறகு பயணம் எப்படி நடந்திடும்? அது போலவே, உழைத்து உருக்குலைந்து போனால், ஒருவன் வாழ்க்கையிலே இன்பம் பெற முடியாத நிலையினன் ஆனால் உழைப்பு அவனைப் பொறுத்த மட்டில் உயிர்குடிக்கும் நஞ்சு ஆகிறது. உழைத்த பிறகு, அவன் வாழ்வை அனுபவிக்கும் நிலையினன் ஆகவும் இருந்திட வேண்டும்.

## 40. அதுவும் உண்டு

கிளி கொஞ்சிடும் சோலையானாலும், நடுநிசி வேளையிலே ஆந்தையும் அவறத்தான் செய்யும்.

## 41. எத்தனை விதமான கடவுள்கள்?

பகலுக்கு ஒருதெய்வம். இரவுக்கு இன்னொன்று. பஞ்சம் தரும் தேவதை ஒன்று. அதைப் போக்கும் தெய்வம் மற்றொன்று; படைக்கும் தெய்வம் ஒன்று. இடி முழக்கும் தெய்வம் ஒன்று என்ற விதமாக

எண்ணற்ற கடவுள் கூட்டத்தை மக்கள் கும்பிட்டு வந்தனர். பல்வேறு நாடுகளில் மனமாசு நீங்கக் கூடிய பகுத்தறிவுக் கதிர் தோன்றிய பிறகு, பல தெய்வவழிபாடு என்பது உண்மையான ஆத்திக மாகாது—அருள் பெறும் வழியாகாது—மனமருள் கொண்ட மக்களை சூதுமதி மிகுந்த பூசாரிக் கூட்டம் பிடித்தாட்டவே கட்டிவிடப்பட்ட கற்பனை இது என்ற எண்ணம் வெற்றி பெற்றது. அந்த வெற்றியின் காரணமாகப் பல கடவுள்கள் மாஜி களாயினர்.

## 42. படிப்பதும் பார்ப்பதும்

பெண்களுக்குக் காதலைப் படித்தால் போதும்; பித்தம் பிறக்கும். ஆண்கள் அதுபோலப் படிக்கவே தேவையில்லை. அவர்களுக்குத்தான் பெண்ணைக் கண்டாலே பித்தம் தானாகப் பிறந்து விடுமே!

## 43. அனுபமே வழிகாட்டி

காலம் மாறுகிறது என்பதை அறிய மறுக்கும் சிலருக்குத் தமது சொந்த வாழ்க்கையிலேயே நேரிடும் சில பல சம்பவங்கள் மனமாற்றத்தை ஆச்சரியகரமான விதத்திலும் வேகத்துடனும் தந்து விடுகின்றன.

## 44. அப்படியே இருக்க முடியுமா?

எத்தனை நாளைக்குத்தான் செடியிலே இருக்கும் மலரைப் பார்த்து, மகிழ்வதோடு இருக்க முடியும்? ஒருநாள் பறித்தே விடுவது என்று தீர்மானமாகத்தானே மலரைப் பார்ப்பவர் நேரத்தை விழுங்கிக் கொண்டிருப்பார்கள்!

## 45. ரசிப்பதே இன்பம்

நிலவு காயும் மாடியில் நின்று அதன் அழகை ரசித்தால் இன்பம் உண்டாகும் ஆனால், அதைப் பிடித்து எப்போதும் அருகிலேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்றா எண்ணம் எழுகிறது?

## 46. எல்லோருக்குமே உரியது

இந்த நாட்களில், மேடைப் பேச்சு நாடாளும் நம் பணியிலே முக்கியமான கருவியாகி விட்டது. இந்தக் கருவி, ஒரு சிலருக்கு மட்டும் உரியதல்ல. அப்படி இருத்தலும் தகாது.

## 47. ஓய மாட்டேன்

நாயிலும் கேடாய், திராவிட நாட்டார் நலிவதை நான் கண்டே ஓயுதல் இன்றி, அவர்கள் நலம் எண்ணி, உழைத்திட நான் தவறேன். திராவிடரின் மேன்மையை இகழ்ந்தவனை விடேன்! என்னை நத்துவாய் என எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் விடேன்.

## 48. மோசடிக்காரர்கள்

அதோ பிரசங்க பூசணம் பேசுகிறார். காண்ப தெல்லாம் மாயை. பூண்பதெல்லாம் மாயையே காண் என்பது சரியே! எனினும், அவர் கைவிரலைக் கவனியுங்கள்; புஷ்ஜாக்கர் வைரம், பக்கத்திலே வெள்ளிச் செம்பு. இத்தகைய பித்தலாட்டக்காரர் களைச் சமுதாயம் ஒதுக்கிடவேண்டும்.

## 49. இருளும் இடரும் ஏன்?

இந்த உலகத்திற்கும் இல்லாத அந்த உலகத் திற்கும் இடையே பாதையை அமைப்பதில் நம்

முன்னோர் முனைந்திருந்தார்களே தவிர, உழைப்பிற்கும் வாழ்க்கைக்கும் இடையே பாதையை அமைக்கவில்லை. எனவேதான், இன்றளவும் இடரும் இருளும் நிரம்பியதாக உள்ளது மக்கள் வாழ்க்கை.

## 50. நம்முடைய வேலை என்ன?

இதுவரை விஞ்ஞானத்தின் விருந்தை நாம் சுவைத்தவர்களே தவிர, சமைத்தவர்களில்லை. வெளிநாட்டார் படைத்து அழைத்தால் போய் அருந்திவிட்டு, பிறகு குறையும் கூறி இருக்கிறோமே தவிர, நாமாக எதையும் கண்டு பிடிக்கவில்லை.

## 51. முரண்பாடு ஏன்?

திருக்கோயிலை வலம் வராத கால் என்ன காலோ என்று பஜனைகள் நடக்கின்றன. அதே நேரத்தில், அந்தக் கோயிலின் உள்ளே நுழையாதே என்று எட்டுக்கோடி ஆதித்திராவிடர்களை தடுக்கும் காரியமும் நடக்கிறது. நடக்கலமா?

## 52. விழித்து எழுவார்கள்

தமிழரின் இன்றைய நிலைமை தாழ்வுடையது தான்; இடர் மிகுந்ததுதான். ஆனால் தங்கள் இனததைக் கெடுக்கும் ஆரியக் கொள்கைகளை அவர்கள் நீக்கிவிட்டால், அதன்பிறகு, அவர்கள் விழித்து எழுந்த வேங்கையாகி விடுவர். நினைவிருக்கட்டும்.

## 53. முரண்பாடு ஏன்?

கதம்பம் மலர் குறைவாகவும் தழை அதிகமாகவும் இருப்பின் மாதர் கொள்ளார். அதுபோலவே

பேசும். கருத்துக்கள் அங்கொன்றும் இங்கொன்று மாக இருப்பின் எவரும் கொள்ளார்.

## 54. துன்பங்களுக்குக் காரணம்

உலகத்தில் உள்ள எல்லாத் துன்பங்களுக்கும் உலுத்தோர் கையில் உருளும் பணம்தான். சிறு குட்டையில் தேங்கிய நீரைப் போலத்தான் இருக் கிறது. குடிப்பதற்கு இந்த நீர் உபயோகமில்லை. ஊர்ந்து செல்லும் விஷக் கிருமிகளின் முட்டைகள் மட்டுமே இதில் நன்கு வளருகின்றன.

## 55. தவறான நம்பிக்கை

நாட்டின் நலிவைப் போக்கப் பாடுபடும் என் னிடம் உங்களிடம் தவறான நம்பிக்கை இருக்காது என்பதோடு அம்மாதிரியான புரட்சிக்கரமான எண்ணங்களை இங்கு தூவி விடமாட்டேன் என்ற திடமான நம்பிக்கை உங்களுக்கு இருப்பதை நன்கறிவேன்.

## 56. பெருமை கொள்கிறேன்

திராவிட முன்னேற்றக் கழகம் இன்று வளர்ச்சி பெற்றிருப்பதற்கு மூல காரணம்மானவர் நம் தியாகராயர். தியாகராயரின் குறிக்கோள்தான் திராவிட இயக்கத்தாரின் குறிக்கோள். திராவிட னாகிய நான் திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவன் என்பதிலே பெருமை கொள்கிறேன்.

## 57. எதையும் தாங்கும் இதயம்

இப்பொழுது ஏடுகள் எழுதுவது ஆபத்தான காரியம். ஏடுகள் எழுதினால், சட்டக் கல்லூரிகளால் குத்தப்படும். தியாகராயரைப் பற்றிய ஏடுகளை

நாங்கள் நிச்சயமாகத் தீட்டுவோம். ஒன்றை மட்டும் தலைவர் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். எங்கள் இயக்கம் எதிர்ப்பிலே வளர்ந்த இயக்கம். நாங்கள் எதிர்ப்புக்கு அஞ்சாதவர்கள். எதையும் தாங்கும் இதயம் எங்களிடம் உண்டு.

## 58. ஆகாத காரியம் உண்டா?

அறிவாலும் ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை. அறிவும் ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும்.

## 59. பல துறைகளிலும் உழைத்தவர்

நம்முடைய அடிமைத் தளைகள் நீங்க வேண்டுமானால், நம்முடைய அடிப்படைக் கட்டிடம் பலமாக இருக்கவேண்டும் என்று சர் தியாகராயர் அல்லும் பகலும் அரும்பாடு பட்டார். அவர் காலத்திலே தூவிய விதை நன்றாக வளர்ந்திருக்கிறது. திராவிட சமூகத்திலே தியாகராயர் ஒரு பெரிய விழிப்பு உணர்ச்சியை உண்டாக்கினார். பொருளாதாரத்துறை, அரசியல் துறை, சமுதாயத்துறை ஆகியவற்றில் நல்ல இடம் பெற்று உழைத்தவர்.

## 60. பண்டையப் பெருமை எங்கே?

கல்லூரி முதல்வர் பேசும் பொழுது குறிப்பிட்டார், "இனிமை, ஒளி (Sweetness and Light) இவை தாம் நிச்சயமான குறிக்கோள்" என்று நம்முடைய குறிக்கோளும் இதுவேதான். ஒளியின் பிம்பங்களாக நாம் திகழ்கிறோம். நமது பண்டைய பெருமைகளை நாம் உணரவேண்டும். நம்முடைய பரம்பரை பெரியது. நமது தமிழினம் மானமே பெரிதென மதித்த இனம், எவ்வுயிரையும் தன்னுயிரைம்போல் காத்து வந்தவன் தமிழன்.

பிறரை எதிர்பார்த்து வாழாதவன் தமிழன் பிறருக்குப் புறமுதுகு காட்டி ஓடாதவன் தமிழன். இமயத்தில் புலி பொறித்து, கடாரத்தை வென்று, ரோம் நகருக்குப் பொன்னாடை விற்றவன் தமிழன்.

## 61. ஏன் இந்த நிலைமை?

நான்கு கோடிப்பேர் எங்கேயாவது நயவஞ்சகரின் நாட்டியப் பொம்மைகளாக உள்ளனரா? இல்லை. திராவிடருக்கு மட்டுமே இக்கதி! இந்த இனம் இக்கதி பெற்றதன் காரணம் பூகோளப் பித்தலாட்டமின்றி வேறு என்ன?

## 62. வேதங்களும் லாபமும்

ஓநாய்க்கு இரத்த பானத்தில் சுவை இருக்கு மட்டும் ஜீவகாருண்யத்தை அது எப்படி வரவேற்க முடியும்? அதுபோல, வேதங்களுக்கு இலாபம் தரும் சாதனமாக இருக்கும் சாதியை ஒழிக்க எப்படி முன் வருவர் அந்த லாபத்தை உடையவர்கள்?

## 63. செயல்படும் பருவம் எது?

நெஞ்சில் உரமும், நேர்மைத் திறமும் கொண்ட பருவம்; அச்சம், தயை, தாட்சண்யம் அற்ற பருவம்; ஊக்கமும் உற்சாகமும் உணர்ச்சியும் நிறைந்து செயற்படும் கருத்துள்ள பருவம் மாணவப் பருவம்.

## 64. களிப்பும், கனவுக் காட்சிகளும்

சிலர் கனவுக் கண்காட்சியை நினைவுகளாக்கிக் களித்திருக்கும்போது, மற்றும் சிலர் தங்கள் ஆசைகளைச் செய்திகளாக்குகிறார்கள். இன்னும் சிலர், தீர்ப்புகளைச் செய்துகொண்டு ஆதாரங்களுக்காக அலைகிறார்கள்.

## 65. சரித்திரத்தை மறக்காதீர்கள்

நம்மைப் பிரிவினை வாதிகள் என்கிறார்கள். இனவாதிகள் என்று இழித்துப் பேசுகிறார்கள். இன-மொழி விடுதலை வேட்கைக்காக உயிரை அர்ப்பணித்த அருந்தகைகள் கணக்கிலடங்கா. இவர்களெல்லாம் சரித்திரச் சான்றுகளின் எச்சரிக்கைகள் ஆகும்.

## 66. எழுச்சி மறையுமா?

அசுத்த இரத்தத்திலிருந்து விஷக் கிருமிகள் வீறு கொண்டு எழுவது போல, மிதவாதத்திலிருந்து தீவிரவாதம் என்னும் எழுச்சி வாதம் பிறக்கிறது.

## 67. இவற்றிற்கான காரணம் என்ன?

இயக்கங்களில் தேசிய வாதம், உணர்ச்சி, அழுத்தம் வெகுஜன கண்ணோட்டத்தில் உருவாகும் விரிசல்தான் காரணம்.

## 68. மறையக் கூடியதல்ல!

தீவிரவாதம் பிஞ்சிலும் பழுக்கலாம், முதிர்ச்சியிலும் பழுக்கலாம். சிந்தனைக் கட்டுக் கோப்பையோ-தத்துவ விளக்கத்தையோ உன்னி உருகிப் பார்க்கும் எழிலோட்டம் மின்னி விடுவதில்லை.

## 69. குள்ள நரித்தனம்

ஒரு இயக்கத்தின் ஸ்தாபன அமைப்புச் சுவரை, குள்ள நரிகளால் துவாரமிடத்தான் முடியுமே தவிர, சரித்துச் சாய்க்க முடியாது.

## 70. அறப்போருக்குத் தேவை

ஒரு ஆட்சி பிறரால் போற்றப்பட வேண்டு மானால், அறப்போர் துவங்கப்படும் என்று கடமை யைச் செய்வதிலே எஃகு போன்ற உள்ளமும், நீதி வழங்குவதிலே துலாக்கோல் போன்ற மனோ நிலை யும் எளியோர் விஷயத்தில் இளகிய மனமும் இருக்க வேண்டும்.

## 71. திட நம்பிக்கை வேண்டும்

ஒரு இலட்சியத்தைப் பெறுவதும், அதனை ஈடேற்ற எத்தகைய தியாகம் செய்யத் தயாராகி விடுவது என்ற உள்ள உரம் பெறுவதென்பதும் சாமான்யமான காரியமல்ல! அந்தச் சாதனையில் நாம் வெற்றி வாகை சூடுவோம் என்ற திட நம்பிக்கை திண்ணமாக இருத்தல் வேண்டும்.

## 72. அடக்க முடியாத அச்சம்

கொடியில் கூத்தாடும் முல்லையைப் பறிக்கும் நேரத்தில், வேலிப் பக்கமிருந்து தோட்டக்காரன், "ஏ! யாரது? கொடியிலிருந்து கையை எடு!" என்று கூவினால், எவ்வளவு பயம் பிறக்கும்? தோட்டக்காரன் கூவாமல் முல்லை மலரே, "நில் பறிக்காதே! உனக்காக அல்ல நான் பூத்திருப்பது!" என்று கூவினால், பயம் எவ்வளவு இருக்கும்? அவ் விதமான அச்சத்தை அடக்க முடிவதில்லை. அடங் காமல் மலரினைப் பறித்து விடுகிறோம் அல்லவா?

## 73. அந்தச் செயலே களிப்பு

மதில் சுவரின்மீது ஓசைப்படாமல் ஏறி, வேட்டியை வீசிக் கிளையை இழுத்து, கிளையிலே கூத்தாடிய மாங்கனியை மெல்லப் பறித்தெடுத்து,

முகர்ந்து பார்த்துத் தின்னும்போது, அதன் சுவையிலே லயித்து விடும் கள்ளனுக்குக் கனி திருடினோம் என்ற கவனம் கூட வருவதில்லை. மீறி வந்தாலும், தன் சாமர்த்தியத்தைத் தானே புகழ்ந்து கொள்வானே தவிர, சேச்சே! எவ்வளவு சூதாக நடந்து கொண்டோம் என்று எண்ணிச் சோகிக்க மாட்டானல்லவா! கனியைக் களவாடுபவனை விடக் கன்னியரைக் களவாடுபவன் கட்டுதிட்டம், சட்டம், சாத்திரம், பதிகம், பாசுரம் போன்றவைகளின் பிடியிலா சிக்குவான்! முள்வேலியைத் தாண்டி விட்டோம் என்று கருதிக் களிப்பான்!

## 74. நாகரிகமா? விஷமா?

நாகரிக நாட்கள் மலிந்து விட்டதாக கூறுகிறோம். ஆனால், இன்னும்கூட நடையிலே உடையிலே நாகரிகத்தைக் காண்கிறோமே தவிர, எண்ணத்திலே பேச்சிலே பழைய விஷம் அப்படியே இருந்தபடியேதான் இருக்கிறது.

## 75. உதய சூரியனின் பெருமை

பாழாய்ப் போன சூரியன் ஏன் இப்படிப் பாடுபடுத்துகிறானோ தெரியவில்லையே. நெருப்பிலே போட்டு வாட்டுவதைப் போல் வாட்டி விடுகிறான். கால் கொப்பளித்து விடும்போல இருக்கிறது என்று காலை முதல் மாலை வரை கூறுபவரிடம், அதே சூரியன் மாலையிலே மறைகிற நேரத்திலே, ஒரு அரைமணி நேரம், அளவு கடந்த புகழ்ச்சியைப் பெற்று விடுகிறது. வானத்தில் சூரியன் மறையும் போது, கிளம்பும் அந்தச் செந்நிறம் எவ்வளவு சொகுசு. கண்களுக்கு அது தரும் குளிர்ச்சி எவ்வளவு! காவியக் காரரையும், சூனியக் காரரையும் அந்தக் காட்சி தூண்டிவிடுகிறது. காதலர்கூட

அவ்வேளையில் மிக மிக 'குஷாலாக' இருப்பதும் உண்டு. பிறர் இகழ்ந்து பேசும் வாயாலே ஒரு நாள் பொழுதிற்குள் அவர்கள் புகழ்ந்து பேசும் அளவிற்கு உருவாக்கி விடுகிறது அந்த உதய சூரியன்.

## 76. இழுக்காறு நிலைக்குமா?

மிதவாத, தீவிரவாத, சித்தாந்தக் கோட்பாடுகள் அடிமட்டத்திலிருந்து மேல்மட்டம்வரை எல்லா மட்டத்திலும் பிளவு; இந்தக் கீழ் மட்டத்திலுள்ளோர் 'திரிபுவாதிகள்' என்றும் மேல்மட்டத்திலுள்ளோர் 'வக்கரிப்பாளர்' என்றும் தங்களைத் தாங்களே இனம் கண்டு, இழுக்காறு பேசும் பாங்கினை வளர்ப்பது எப்படி ஆகும்?

## 77. எதுவுமே நிலைக்காது

அசிங்கமான அங்கலாய்ப்புகளால், விரக்தி நிறைந்த ஏளனங்களால், தனிமனிதப் போராட்டமோ, அதிகாரப் போராட்டமோ கொள்கைப் போராட்டமோ நிலைத்து நிற்பதில்லை.

## 78. உறுதி வாய்ந்த கோட்டை

மக்கள் சக்தியை மட்டும் மூலதனமாகக் கொண்ட இயக்கங்கள் மட்டுமே இன்று உருக்குலையாமல், துருப்பிடிக்காமல், தேய்ந்து விடாமல், மாய்ந்து விடாமல், அசைக்க ஒண்ணாத கோட்டை கொத்தளமாகப் புத்தொளி வீசுகிறது.

## 79. நார் இல்லாத பூமாலையா?

குறைந்த சிராய்ப்புகளுடன் குறுமதியாளர்கள் உருவாகலாம். ஏன் நாருடன் சேர்ந்த கதம்பத்துக்கு மட்டும் புகழாரம். நாருக்குப் புறக்கணிப்பு.

கதம்ப அணியைத் தொகுத்து பூமாலையாக பெயர் நாமம் சூட்டித் தருவதில் அதன் பங்களிப்பு.

## 80. உறுதிமிக்க கட்டுக் கோப்பு

வெளியே உள்ளவர்கள் போடும் ஆர்ப்பரிப்பும், கிளர்ச்சியும் மக்கள் கோபுரத்தின் ஒரு கல்லைத் தானும் பெயர்த்தெடுக்க முடியாது. இதைக் கட்டுக் கோப்பான அமைப்பிற்குக் கட்டவிழ்ந்த நெல்லிக்காய் மூட்டை சவால் விடுவதைப் போலாகின்றது.

## 81. கயமையே அற்ப ஆசை

அற்ப ஆசை என்பது ஆந்தையின் கண்ணுக்கோ பூனையின் கண்ணுக்கோ ஒப்பாக இருப்பதில்லை. கண்களை மறைத்து, கருத்தை இருட்டாக்கும் கயமைத்தனமே அற்ப ஆசையின் பெட்டகம்.

## 82. வர்ண பேதமே மூடக் கொள்கை

சலவைக் கல்லினால் எழுப்பப்பட்ட சிலையை விட, வெண்கலத்தினால் செய்யப்பட்ட சிலை சிறந்ததா என்றறியும் பேதைமையைச் சிலைகளாக நிற்கும் மனிதக் கடவுள்களை வர்ண பேதத்தில் வகுத்துக் கூறும் மூடக் கொள்கை நமது இனத்தி லிருந்து முற்றாக ஒழிய வேண்டும் என்பதே என் கருத்தாகும்.

## 83. குதர்க்க வாதம் நிலைக்காது

கொசுவின் இருதயமும் யானையின் இருதயமும் உருவ அமைப்புக்குத் தகுந்தபடிதான் உண்டு என்கிறான் பகுத்தறிவுவாதி. கொசு என்ன கொசு என்கிறான் குதர்க்க வாதி. முடிவு முற்றுப் பெறாத விதண்டா வாதம்.

## 84. அலங்காரங்கள் முக்கியமா?

நீடுயர்ந்த நெடுமரத்தை மேனோக்கிப் பார்க்கிறோம். அம்மரத்தை தாங்கி நிற்கும் அடிப்புற வேரை அவதானிப்பதில்லை. அலங்கார அற்புதங்களைக் கண்டு அதிசயிக்கும் அளவிற்கு அடிப்படை உண்மைகளை ஆராய்ந்து தெளிய நமக்குத் தெரிவதில்லை.

## 85. இது தேவை தானா?

திருமணக் காலங்களிலே, பட்டப் பகலிலே பகலவன் ஒளியிலே நம்மவர் விளக்கு ஏற்றி வைக்கின்றனர். இந்த விளக்கு ஏன்? எதற்காக என்று கேட்கிறோம்? ஆண்டவன் அளித்த அருணன் இருக்கும்போது ஏன் இந்த விளக்கு என்று கேட்கிறோம். சீர்தூக்கிப் பாருங்கள் என்று; சீர்தூக்கிப் பார்த்து உங்கள் சொந்த முடிவுக்கு வாருங்கள்.

## 86. இனக்கொலை இலக்கியம்

நமக்கிருக்கும் இலக்கியமெல்லாம் ஆழ்வார்கள், நாயன்மார்கள் முதலியோரின் அற்புத லீலைகளைப் பற்றியவைகளாகவும், ஆண்டவனின் பத்தவதாரங்களை விளக்கி, அதிசய அநாகரிகமான அற்புதங்கள் நிறைந்தவைகளாகவும் கலையின் பெயரால் இனக்கொலை செய்பவைகளாகவுமே தான் இருக்கின்றன.

## 87. மடமையைப் புகுத்துகிறது

அறிவுக்குப் பொருந்தாதவையும், ஆராய்ச்சிக்கு ஏற்காதவையும், அறியாமையை அகற்றி, மடமையை மக்கள் மனதில் புகுத்தும் போலிகளாகவே நமக்கிருக்கும் இலக்கியங்கள் உள்ளன.

## 88. நம் கடவுள் எத்தகையவர்

கிறிஸ்துவனுக்கோ ஒரே ஒரு பிதா பரமண்ட லத்திலே உண்டு. இஸ்லாமியனுக்கோ ஒரே கடவுள், அதுவும் உருவமற்ற அரூபி. ஆனால், நமக்கோ மூலக் கடவுளர் மூவர். அவருக்குக் குடும்பங்கள் பல; அதிலும் நிரந்தரக் குடும்பங்கள் சில; தற்காலிகக் குடும்பங்கள் பல; உதாரணமாக, சிவனாருக்குப் பார்வதியும் கங்கையும் நிரந்தரக் குடும்பங்களாகும். தற்காலிகக் குடும்பங்களோ தாருகாவன ரிஷி பத்தினிகளைப் போல சமய சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு இருக்கும்.

## 89. உங்கள் தீர்ப்பு என்ன?

நம்முடைய கடவுட் தன்மை கயமைத் தனமாக உள்ளது. கபோதித் தனமாக உள்ளது என்பதை உறுத்திக் காட்டத் தான்; இவ்விதக் கயமைத் தனத்தையும் கபோதித் தனத்தையும் விடுத்து, கடவுளைச் 'சர்வ வியாபகன்' உருமற்ற அரூபி. அருளுடையவன், என்று மட்டும் ஏன் கூறலாகாது? இதற்குப் புராணம் ஏன்? மதம் ஏன்? மக்களிடை மாற்றம் (சாதி பேதம்) ஏன்? கடவுளைப் பற்றிய இந்தத் தீர்ப்பு "நல்ல தீர்ப்பா" நவிலுங்கள் நாட்டோரே!

## 90. இப்போது அது செல்லாது

கண்ணகி காலத்தில், கோவலன் நடத்தை நீதி யாகஇருந்திருக்கலாம்; ஆனால் அது இக்காலத்திற் குச் செல்லாது. இக்காலம் கண்ணகி கோவலனை சும்மா விடமாட்டாள், அல்லது அவள் தாய் தகப்ப னும் சும்மாவிடார். அதுபோலத்தான் ராமன்-சீதை, நளாயினி, நளன்-தயமந்தி முதலியோர் காலத்து

நீதி அவ்வக் காலத்திற் கேற்றதாக இருந்தது. அது இப்போது செல்லாது. நீதியின் சக்கரம் சதா உருண்டு கொண்டே இருக்கும். அதனை நாம் நம் அறிவைக் கொண்டு நம் நிலைமைக்கேற்பத் திருப்ப வேண்டும்.

## 91. அவசரமும் நிதானமும்

ஊசியில் நூலைக் கோர்க்கும்போது அவசரப் படாதே! நிதானம் தேவை. வீடு பற்றி எரியும் போது அவசரப் படு. அத்தோடு மதியும் தேவை.

## 92. மாளிகையில் எல்லாமும் உண்டு

மனம் எனும் மாளிகையின் மந்த மாருதம் எத்தனை ரம்மியமானது. இம் மனம் எனும் பெருமாளிகையில் அந்தியின் அழகொளிரும்-காலை யின் கவர்ச்சித் தென்றல் வீசும். நள்ளிரவின் குளிர் மயக்கம் கொப்பளிக்கும்-நண்பகலின் வெந்திக் கொதிப்பும் உண்டு.

## 93. உறுதியும் உள்ளத் தூய்மையும்

நிர்வாகம் அரசின் வாயிற்கதவு போன்றதாகும். இலஞ்சம் அரசின் கொல்லைப்புற புழக்கடை வழி யாகும். அரசின் வாயிற் கதவாம் நிர்வாகம் என் னும் செங்கோலினால் கொல்லைப் புறமாக நுழைந் திருக்கும் இராட்சத இலஞ்சப் பேயை விரட்ட நெஞ்சுறுதி மட்டும் அல்ல, உள்ளத் தூய்மையும் இருக்க வேண்டும்.

## 94. இவற்றையெல்லாம் நாம் காண்கிறோம்

ஆடிடும் பூங்கொடி, பாடிடும் அருவி, கொஞ்சி டும் கிள்ளை, துள்ளிடும் வெள்ளிமீன், மருண்ட விழி

மான், ஒளிவிடு விண்மீன், சிரித்திடும் முல்லை, பேசிடும் புறாக்கள், பழமுதிர் சோலை, வளமிகும் வயல்கள்— இவை யாவும் நம்மைச் சுற்றியிருக்கும் எழில் ஓவியங்கள்.

## 95. இன்னலுக்கு என்ன காரணம்?

நாட்டு வளம் பற்றி, அற நெறி குறித்து, தாழாத தமிழகம் என்ன கருத்துக் கொண்டிருந்தது என்பதனைக் கண்டறியும் ஆர்வம் மிகுந்துள்ளது. இந்த ஆர்வத்தையும் ஆவலையும் மீண்டும், மீண்டும் பெற்றிடச் செய்ய வேண்டும். இயற்கைச் செல்வம் இத்தனை பெற்றிருந்தும் இன்பத் தமிழகத்தில் இன்னல் கப்பிக் கொண்டிருக்கக் காரணம் என்ன?

## 96. எல்லோரும் இன்புற்று வாழ வழி

தமிழர் தம் நல்வாழ்வுதனைக் குலைக்கும் நச்சரவு போன்ற நினைப்புக்களும் நிலைமைகளும் நிகண்டுகளும் அமைப்புகளும் நீடித்திருக்க விடல் நன்றல்ல— நலம் மாய்க்கும் என்பதறிந்து அறிவுக் கதிரினையே அறுவடை செய்து எல்லோரும் இன்புற்று வாழ்ந்திடவே இயற்கை நீதியெனக் கொண்டு பணிபுரியும் ஆர்வம் பெற்றிட வேண்டும்.

## 97. களிப்புறும் நாள் எந்நாளோ?

முற்றிய கதிர் நிரம்பிய வயலின் ஓரத்தில் சென்றிடும் உழவனுக்குக் காற்றால் அசைந்தாடும் இளம் பயிர் களிப்பூட்டி, உள்ளம் பூரிப்படைவதைப் போல, கன்னித் தமிழன் ஆற்றொழுக்கு மிகையூட்டி நர்த்தனமாடினால் கலைஞனும் காமுற்றுக் களிப் படைவான்.

## 98. விஞ்ஞானமும் இன எழுச்சியும்

பூகோளப்படி இந்தியா ஒரு நாடாக இருக்கலாம் ஆனால், பூகோளத்தை விஞ்ஞானமும் இன எழுச்சியும் மாற்றி இருப்பதை யார் மறுக்க முடியும்? பூகோளத்துடன் விஞ்ஞானம் இணையவில்லை எனில், சூயஸ் கால்வாய் ஏது?

## 99. எவர் சொல்லுவதை ஏற்பது?

சைவம் தழைத்தோங்கத் தொண்டாற்ற வந்த சமயாச்சாரியார்களுள் ஒருவரான திருநாவுக்கரசரால் உருவம், நிறம், அற்றவகை (இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் என்று எடுத்து இயம்ப ஒண்ணாதே) காணப்படும் கடவுளை, மற்றொரு சமயாச்சாரியாரான சம்பந்தர், 'தோடுடைய செவியனாக்கி, விடையேற்றி, தூவெண்மதி சூட்டி, காடுடைய சுடலைப் பொடி பூசி, உள்ளங்கவர் கள்வனாக்கிக்' காண்கிறார். இதில் எவருடைய தீர்ப்பு நல்ல தீர்ப்பு? இதில் எவருடைய தீர்ப்பைப் பின்பற்றுவது, கூறுங்கள்!

## 100. இவற்றால் நன்மை உண்டா?

நமக்குக் கடவுள் உணர்ச்சி வேண்டும்; அது மாற்றி அமைக்கப்படல் வேண்டும். கயமை-கண் மூடித்தனமற்றதாக இருக்க வேண்டும். எல்லாம் வல்ல எம்பெருமானுக்குக் கோயில் ஏன்? குளம் ஏன்? குடும்பம் ஏன்? கூத்திகள் ஏன்? காணி ஏன்? பூமி ஏன்? மதம் ஏன்? சாஸ்திர சம்பிரதாயச் சடங்குகள் ஏன்? என்று நான் கேட்கிறேன். இவைகளால் எவ்வளவு பணம் பாழ்! பகுத்தறிவு பாழ்! கருத்துப் பாழ்!

## 101. வீண் பெருமை

"நம் நாட்டில் எல்லாம் உள்ளது. நமது அதர்வண வேதத்தில் இருந்துதான் ஜெர்மானியன் பறக்கும் குண்டு, ஆகாய விமானம் முதலியவற்றை தெரிந்து கொண்டான். நம் நாட்டில் இல்லாத விமானமா? என்னென்ன அஸ்திரங்கள் இருந்தன. அக்கினியாஸ்திரம், வாயுவாஸ்திரம், வருணாஸ்திரம் என்று! இன்று என்ன புதுமையாய் வந்து விட்டது!" என்று நாட்டைப்பற்றி பெருமையோடு பேசுகின்றனர். ஆனால் அந்தப் பழம் பெருமை எங்கே இப்போது? ஏன் அன்னியனுக்கு நாட்டை விட்டு ஆந்தைபோல் விழிப்பது? இதனால் உண்மையிலேயே நமக்குப் பெருமையா? இல்லை சிறுமைதான்; சுயமரியாதைக்குப் பங்கம்தான். இது அன்னியனுடன் கொஞ்சிக் குலாவும் அழகிய அணங்கைக் கண்டு, அருகில் இருப்பவரிடம், இவள் யாரோ என்று எண்ணாதேயும்; இவள் நம்முடைய மனைவியாக இருந்தவள்தான்! இப்போது இவளை அவன் ஏமாற்றி அழைத்துச் சென்று விட்டான். ஆனாலும் என்னிடம் இருந்தவள்தானே! இதனால் எனக்கு எவ்வளவு பெருமை?' என்று கூறுவதற்குச் சமமாகும் என்பது திண்ணம்.

## 102. இளைஞர்களால்தான் முடியும்

மக்கள் சமுதாயத்தைச் சீர்திருத்தப் பலப்பல அறிஞர்கள் அரிய பெரிய வேலை செய்தனர். ஆனால், அவர்கள் யாவரும் தோற்றனர். அடிப் படையை ஆராயத்தான். எனவே, இளந்தோழர் களே! வருங்கால உலகம் உங்களைத்தான் நம்பி யிருக்கிறது. ஆகவே, நீங்கள் உங்களுக்கு அளித்துக் கொள்ளும் 'நல்ல தீர்ப்பால் இனத்தை எதிர் காலத் திலே எழுச்சியுறச் செய்வீர்களாக! பெரியோர்களை

நம்பின காலம் போய்விட்டது. புதுமை, இளைஞர் களால்தான் நிகழ வேண்டும். நிகழ முடியும்.

## 103. விஞ்ஞானம் அளித்த வாழ்வு

ஆறாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள லண்டனில் அட்லி பேசுகிறார் என்றால், கும்ப கோணத்தில் இருக்கும் கும்பேசுவரர் கோயிலில் கேட்க முடிகிறதே. இது மனித விஞ்ஞானத்தால் தான் முடிந்தது.

## 104. விபசாரம் ஒழிய வழி

காதல் மணங்கள் நிகழ்ந்து, ஜோடி சரியாக இணைந்து, காதலுக்கு சாதியோ பீதியோ, மற்ற ஏதோ தடையாக இல்லையெனில், உள்ளபடி நாட்டில் விபசாரம் தலை தூக்காது.

## 105. சுதந்திர இந்தியாவின் நிலைமை

நம்மைச் சுற்றி என்ன காண்கிறோம். இன்று மெருகு குலையாத மோட்டாரில் உல்லாச சீமான் செல்கிறான் ஒருபுறம். மாட்டுக்குப் பதில் மனிதன் மார்பு உடைய இழுக்கிறான் பார வண்டியை மற்றோர் புறம்! இந்த முரண்பட்ட காட்சி சுதந்திர இந்தியாவில் இருக்கலாமா?

## 106. எவன் அறிவாளி?

சந்திரனை, தன் குருபத்தினியுடன் கள்ளக் காதல் நடத்திய கயவனாகச் சித்திரித்து அத்துடன் திருப்தி அடைந்து விட்டான் புராணிகன். ஆனால், சந்திர மண்டலத்தில் உள்ள மலைகளையும் காட்சி களையும் கண்டறிந்து கூறுகிறான் விஞ்ஞானி. இருவரில் யார் அறிவாளி?

## 107. திராவிடம் தேய்ந்தது ஏன்?

அவள் அதரம் நச்சுநீர் ஊற்று என்றறியாது இன்பவல்லியின் இதழைச் சுவைத்துக்கொண்டே கீழே சாய்ந்தவன் போலாயிற்று திராவிட நாட்டின் கதி, தீயோர் கூட்டுறவால் திராவிடம் தேய்ந்தது. ஆரியனின் அரியணை ஆட்சியில் உள்ளம் உருக் குலைந்து விட்டது.

## 108. விஞ்ஞான வளர்ச்சியின் வேட்கை

கோளங்களை ஆராயும் மேனாட்டார்கள் கொசுவைப் பற்றியும் ஆராய்கிறார்கள். வானத்தை வட்டமிட்டுப் பார்த்துவிட்டு, ஆழ்கடலில் மூழ்கியும், விஞ்ஞானத்தின் வளர்ச்சியின் வேட்கை மிகுந்திருக் கிறார்கள். ஆனால் நாமோ உண்டவன் வீட்டையே உருக்குலைக்கச் சதிதிட்டம் தீட்டுகிறோம்.

## 109. ஏன் வழுக்கி விழுந்தார்கள்?

கபடன், வஞ்சகன், பொய்யன், சூதாடி, விபச்சாரி, திருடன் கொலைகாரன் இவர்களெல் லாம் யார் என்று கருதுகிறீர்கள்? வாழ்க்கையில் வழுக்கி விழுந்தோர்கள். பாதையைச் சமுதாயம் சீராக அமைத்திருந்தால் இந்த பட்டியல் ஏற்பட் டிருக்குமா?

## 110. மதியைப் பெருக்கி விதியை ஒழி

விதி விதி என்று பேசி மக்களின் மதியை மாய்க் கும் ஏடுகளல்ல நமக்குத் தேவை. தமிழ் பேசும் சமூகத்தைத் தட்டி யெழுப்பும் தன்மான இலக்கியங் கள் தேவை. தன்னம்பிக்கை ஊட்டும் ஏடுகள் தேவை. மதியைப் பெருக்கி விதியைத் தொலைக் கும் விளக்க ஏடுகள் தேவை.

## 111. நடைமுறை இதுவே!

மாடிவீடு கட்டுவதற்கு முதலில் மரம் கொண்டோ வெறும் மண்மேடாகக் கொண்டோ, கட்டட அமைப்போர் பணிபுரிவர். ஆனால் அடுக்கு உயர உயர அந்த முறை மாறும். மாடி வீடு கட்டியானதும், முதலிலே நிறுத்திய மரக்குவியல் அல்லது மண் குவியல் இதனை வைத்துக் கொண்டிரார். நீக்கி விட்டு மாடி சென்று உலவுவார். கதிர் முற்றியதும் பயிரை அழிப்பதோ, இப்பயிரன்றோ கதிர் அளித்தது என்று எண்ண மாட்டார்கள் அறுவடை செய்பவர். எந்தப் பயிர் செந் நெல்லைத் தந்ததோ அதனை மிதிப்பர். துவைப்பர். அடிப்பர்.

## 112. மதிப்பே காரணம்

மாட்டு வண்டி ஓடும்போது 'கடகட' என்ற சப்தம் எவ்வளவு பெரிதாக எழுந்தாலும், யாரும் கவனிப்பதில்லை. ஆனால், மோட்டார் வண்டி ஓடும்போது ஒரு சிறு சப்தம் கிளம்பினாலும் உடனே அது என்ன என்று கவனிக்கிறார்கள். காரணம் என்ன? மாட்டு வண்டி விலை குறைந்தது. மோட்டார் வண்டி விலை உயர்ந்தது.

## 113. நினைப்பை காட்டும் நடவடிக்கை

மழையாம் மழை! மழை நம்மை என்ன செய்யும்? என்று எருமை கூறுவதில்லை. அதன் நடவடிக்கை, அதனுடைய நினைப்பைக் நமக்குக் காட்டுகிறது.

## 114. பலி கொள்ளும் ஆரியம்

மற்ற மக்களுக்குத் தெரியாதது தங்கட்குத் தெரியும் என்றும், மற்றவர்களால் சாதிக்க முடியா ததைத் தாங்கள் சாதிக்க முடியும் என்றும் கூறிடுப வனை ஆராய்ச்சி உடையோர், அவன் ஒரு புரட்டன் என்று ஏசி ஒதுக்குவார். ஆராயுந் திறனற்றாரோ, 'அப்படியா' என்று ஆச்சரியத்தால் வாய்பிளக்க நின்று கேட்பர். கை கூப்புவர். இந்த முறையிலே ஆரியம் தமிழரிலே தன்னுணர்வு அறிவு நுணுக்கம் கற்றவர்களைப் பலி கொண்டது.

## 115. இழக்க நேரிட்டது ஏன்?

வீராவேசம் கொண்ட வேங்கையானாலும், சதுப்பு நிலத்திலே படுகுழியிலே வீழ்ந்துவிட்டால் சாகத்தானே வேண்டும்! நீள்வையம் எதிர்த்தாலும், எமக்கு நிகர் இல்லை என்று கூறிப் போரிடும் மறத் தமிழரும், ஆரிய மதக் குழியிலே வீழ்ந்தால் அறிவு, ஆற்றல், ஆண்மை, மானம் எனும் பண்புகளை இழக்க நேரிட்டது அன்றும் இன்றும்!

## 116. தமிழின் நிலைமை என்ன ஆகும்?

இப்பொழுது ஆங்கிலம் ஒன்றாலே நமது தமிழ் மொழி எவ்வளவு சீர்குலைந்திருக்கிறது என்பதைப் பாருங்கள். நாட்டுப்புறங்களில் இருப்பவர்கள் கூடத் தாம் பேசும் பொழுது ஆங்கிலச் சொற்களை வலிந்து பொருத்திப் பேசி விடுகின்றனர். எடுத்துக் காட்டாக, இன்று காப்பி (Coffee) பஸ்டாய் (First) இருந்தது. உனக்குக் கொஞ்சம்கூட சென்ஸ் (Sense) இல்லை. ''பிளீஸ் (Please) ஜானகி இந்தப் பென்சிலை (Pencil) மெண்ட் (Mend) பண்ணித்தா'' என்றெல்லாம் பேசுவது

கண்கூடு. இந்த நிலைமையில் இந்தியும் பொது மொழியாக மாறி விட்டால் நம் தமிழ் மொழி என்ன வாகும்? என்பதைச் சற்றே உணர்ந்து பாருங்கள்.

## 117. மாற்றான் தோட்டத்து மலர்

மலர்கள் பலவகை — வண்ணத்தில், மணத்தில், இவைகளில் மணமுள்ள மலர், மாலையாக்கப் படலாம். செண்டு ஆக்கப்படலாம். சரம் ஆக்கப் படலாம். மலர் கொண்டு மாலை தொடுத்தலிலே கைத்திறன் இருக்கத்தானே செய்கிறது. ஆனால் கைத்திறன் முழுவதும் காட்டி, காகிதப் பூ மாலை தொடுத்தால் பயன் என்ன? மாலைக்கு முதற் பொருள் மணமுள்ள மலர். மாற்றான் வீட்டுத் தோட்டத்திலே பூத்திடினும் மல்லிகைக்கு மணம் உண்டல்லவா. ரசிக்கத்தானே செய்கிறோம்?

## 118. பாவபுண்ணியத்தின் நிலைமை

ஒரு டைரி வைத்துக் கொண்டு, யார் புண்ணிய வான்? யார் பாபி? என்று கண்டு பிடிப்பதற்காகக் குறிப்பு எழுதி வந்தால், நீங்கள் 6ந்தேதி புண்ணிய வான் என்று யாரை எழுதினீர்களோ அவரைப் பற்றி 7ந்தேதி பாவி என்று எழுதுவீர்கள். 7ந்தேதி யன்று பாபி என்று எழுதியவரை 8ந்தேதி புண்ணிய வான் என்று எழுதுவீர்கள். 3-ம் 3-ம் 6; 4-ம் 4-ம்8; இரண்டும் இரண்டும் பெருக்கினால் நான்கு என்று நிர்ணயிக்கப்பட்ட முடிவைப் போல், பாவ-புண்ணி யங்கள் நிர்ணயிக்கப்பட முடியாதவை.

## 119. இடர் இல்லாத இன்பமா?

ஜிலு ஜிலுவென்ற காற்றும் சிறு தூறலும் இருந்தால்தானே பூஞ்சோலை பூத்துப் பூரித்து

நிற்கும், அதைப்போல, காதலில் சிக்குண்டவர் முன்பு காதலை ஊட்டியவர் நின்று பேசினால் தானே அவர்களுக்கு இன்பம். எனவே, இன்பம் வேண்டும். ஆனால் அதைப் பெற இடர் மட்டும் வரக்கூடாது என்ற எண்ணம் ஒரு சிலருக்கு இளமை யாக இருக்கிறது.

## 120. இப்படிப்பட்டோரும் உள்ளனரே

சுயநலத்தைப் பற்றி துளி நினைப்பும் இல்லாத மனப்பான்மையும், சபலத்துக்கு இடம் கொடுக்காத தன்மையும், வீரமும் இருப்பின் கோடி ஈட்டிகள் தமிழரின் மார்புக்கு நேரே நீட்டப்பட்டாலும், எதிரி வெல்ல முடியாதே! எங்கே காண்கிறோம் அந்த உறுதியை? எவரிடம் கேட்கிறோம் இத்தகைய வீரப் பேச்சினை? 'நமக்கென்ன' என்று கூறும் சுயநலமி களும் 'நம்மால் ஆகுமா!' என்று பேசும் தொடை நடுங்கிகளும், 'ஏன் வீண்வம்பு?' என்று சொல்லும் கோழைகளும், 'எனக்கு இது பிடித்தமில்லை' என்று மிடுக்காகக் கூறும் கோடாரிகளும் தமிழகத் திலே உலவக் காண்கிறோம்.

## 121. இந்தியால் பிளவு தீர்ந்து விடுமா?

ஒருமொழியையே பேசும் ஒரு நாட்டவரிடையே பல வகைப்பட்ட பிளவுகளும் சச்சரவுகளும் காணப் படும் நிலைமையில், பல மொழிகளைப் பேசும் பல நாட்டவரையும் ஒரு பொது மொழி கற்பதனால் ஒற்றுமையாக்கி விடலாம் என்று கருதிப் பாடுபடு வது 'உமி குற்றிக் கை சலித்த' பான்மையாக முடி யுமேயல்லாது அதனால் யாது பயன் விளையும் என்று சொல்ல முடியுமா? இந்தி மொழியை இந்தியா முழுவதுக்கும் பொது மொழியாக்குவ

தினின்றும் மக்களிடையேயுள்ள பிளவுகள் நீங்கி ஒற்றுமை உண்டாக்கும் என்னும் கூற்றுக்கும் யாதாயினும் சான்று காட்டி அதனை மெய்ப்பிக்க இயலுமா?

## 122. ஏன் நலிந்தோம்?

உண்மை, அறிவு, ஆராய்ச்சிகள் உடையோரை நம்மவர்கள் புறக்கணிக்கத் தலைப்பட்டார்கள். பொய்யர்களுக்கும், புளுகுணிகளுக்கும் காலட்சேபம் தலைப்பட்டதால்தான் நாளெல்லாம் நலிந்தோராய் கத்திக் கிடக்கிறோம்.

## 123. செஞ்சொல் கருத்தோவியம்

மாலைக்கு முதற் பொருள் மணமுள்ள மலர். அதுபோல, பேச்சுக்கு முதற் பொருள் சொற்சுவையும் கருத்தாழமும் நிறைந்த செஞ்சொற் கருத்தோவியங்கள்.

## 124. வாழ்வு அளித்து தாழ்ந்தது

வந்தோரை வாழவைக்கும் வளத்திருநாடே! இருந்தோரைத் தாழவைக்கலாமா?

## 125. திராவிட அரியணை எப்போது?

நாமிருக்கும் திராவிடம் நமது என்பதறிந்தோம். இது நமக்கே உரிமை என்பதும் அறிந்தோம். இதனை இந்தியாவுடன் இணைந்திடும் சூதினை வெறுத்தோம். திராவிட அரியணையைப் பெற உயிரையும் தருவோம்.

## 126. பேதத்தால் வி[illegible] பிழைப்பு

சாதி பேதம் வெறு[illegible] மன உ[illegible]ச்சியினால் மட்டுமே ஏற்படுவதல்ல. இனிய [illegible]ச்சியாலும்

48938

மறைமலையடிகள் நூல் நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

ஏற்படுகிறது. பேதம் இலாபம் தருகிறது. எனவே தான் அதனை விட்டுவிட மனம் இல்லை, பேதத்தால் பிழைப்பவர்களுக்கு.

## 127. சக்தி இல்லாத கடவுள் சிலை

ஒரு மனிதன் எந்த வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தாலும், கோயிலுக்குள் வரக்கூடாது எனத் தடுக்கப்படும் வரை, அந்தக் கோயிலுக்குள் இருக்கும் கடவுள் சிலையும் சக்தியற்றது தான்.

## 128. அது குற்றமா?

பொன்னும் மணியும் கொழுத்த காலம், வீரமும் தியாகமும் உலவிய தேசம், வாழ்க்கையே ஒரு விருந்தாக இருந்த வேளை, அந்தக் காலத்தில் திராவிடம் தனி. அந்தத் திராவிடத்தைத்தான் மீண்டும் உருவாக்கப்பாடுபடுகிறோம். பாடுபடுவது குற்றமா?

## 129 எதைக் கண்டு பிடித்தோம்?

இதுவரை விஞ்ஞானத்தினில் விருந்தைச் சுவைத்திருந்தவர்களே தவிர, சமைத்தவர்களில்லை. விருந்தை வெளிநாட்டார் படைத்து அழைத்தால்,போய் அருந்திவிட்டுப் பிறகு குறையும் கூறி இருக்கிறோமே தவிர, நாமாக எதையும் கண்டு பிடிக்கவில்லை.

## 130. காலத்திற்கேற்ற கருத்து

காலத்திற்காகத்தான் கருத்துக்கள். கருத்துக்களுக்காக காலம் அல்ல. ஆகவே, காலத்திற்கேற்பக்

கருத்துக்களை மாற்ற வேண்டும். காலத்திற்கு ஒவ்வாத கருத்துக்களை ஒதுக்கித் தள்ள வேண்டும்.

## 131. திராவிடத்தின் விடுதலை

பரங்கிக்கும் பனியாவுக்கும் இடையே நடைபெற்ற போர் முடிந்து விட்டது. ஆனால், பீடம் எனும் பனியாவின் பிடியில் சிக்கியுள்ளது திராவிடம். அந்தத் திராவிடத்தின் விடுதலைக்காகப் போரிடுவதே நம் கடமை

## 132. சேவையும் தன்னல மறுப்பும்

உலகின் செல்வம் அனைத்தையும் குவித்து ஏழைகளுக்குப் பகிர்ந்து அளித்தாலும், மீண்டும் தொல்லையும் துயரமும் தலைவிரித்தாட அதிக காலம் பிடிக்காது. தன்னலம் தலைதூக்கும். பேராசை பேயாட்டமாடும். ஏழைகளுக்குக் காசு வீசிடும் கருணாமூர்த்திகள் பன்னெடுங்காலமாகவே இருந்து வருகிறார்கள். ஏழைகள் தொகையோ வளர்ந்து கொண்டே இருக்கிறது. பணம் சர்வ ரோக நிவாரணியல்ல! சேவை தன்னல மறுப்பு இவைகள் மூலமாகவே பலன் காணமுடியும்.

## 133. காதகர்கள் ஒழிக!

வேரிலே கொதிநீர் ஊற்றும் காதகர்கள் இருக்கும்போது, இதழின் அழகுபற்றிப் பேசிமகிழ்வது பலன் தராது! எனவே, தமிழ்மொழிக்கு, தமிழ்ப் பண்பாட்டுக்கு ஆபத்து என்பதை அஞ்சாது எடுத்துரைக்க முன் வரவேண்டும்.

## 134. மயக்கத்தால் விளைந்தது

கடவுள் மனிதனின் சிருஷ்டி! மதம் மனிதனிடம் ஏற்படுத்தப்பட்ட மன மயக்கம்!

## 135. அதுவே வாழ்க்கை

விளக்கு இருக்கும் இடத்தில் ஒளி இருக்க வேண்டும். அதுபோலவே ஆடவர் இடத்திலே அணங்குகள் இருக்க வேண்டுவது அவசியம் என்பது தான் வாழ்க்கை.

## 136. குற்றம் சாட்டும் மடமை

ஒரு ஆள் — தனிப்பட்ட ஒருவரின் கெட்ட எண்ணத்தை ஆதாரமாகக் கொண்டு, அந்த ஆள், எந்த இனத்தவரோ, அந்த இனத்தையே அக்குற்றச் சாட்டுக்கு இலக்காக உள்ளாக்குவது மடமை.

## 137. ஓய்வு ஒரு மாமருந்து

ஓய்வு என்பது ஒரு உரிமை! வேலை செய்தவன் தன் அலுப்பைப் போக்கிக் கொண்டு, இழந்த உற்சாகத்தை மீண்டும் பெற்று, மறுபடியும் வேலையிலே ஈடுபடுவதற்கான மாமருந்து! தூக்கத்தால் மட்டும் பாட்டாளியின் மனத்திலே உள்ள சோர்வு போய்விடுவதில்லை.

## 138. உழைத்து உருக்குலைவதா?

உழைத்துத்தான் வாழவேண்டும் — வாழ்வு, உரிமை, உழைப்பு, கடமை; ஆனால், உழைத்தும் வாழமுடியவில்லை யென்றால், அது சமூகத்தில் உள்ள கொடுமையைக் காட்டுகிறது. வாழ்வதற்கு உழைக்கிறான்; பிறருக்கு வாழ்வு அளிக்கவும்

உழைக்கிறான். ஆனால்,அந்த உழைப்பே அவனை உருக்குலையச் செய்து, வாழ்வை நுகரவே முடியாதபடி ஆக்கிவிடுமானால் அவன் உழைத்து என்ன பயன்?

## 139. துணிவு தேவை

நமக்கு இடையில் ஏற்படும் சபலங்களை விரட்டிடும் துணிவு மட்டும் வந்து விட்டால், நாம் நிச்சயம் வெற்றியடைவோம்

## 140. அதற்கும் விலை உண்டு

லட்சியத்தை அடைய கஷ்ட நஷ்டம் அடைதல் எனும் விலைகொடுத்தாக வேண்டும்

## 141. அழகின் இலக்கணம்

'அழகு', 'அழகு' என்கிறோமே எது உண்மையான அழகு?' 'இதுதான் அழகு' என்று இதுவரை இலக்கணம் வரையறுக்கப்படவில்லை.

## 142. வீரத்தின் இலக்கணம்

'வீரம் என்றால் இதுதான் வீரம்' என்று அறுதியிட்டு உறுதிப்படுத்த இலக்கணம் சொல்ல முடியாது.

## 143. தேசீயம் இருவகை

தேசீயம் என்று காங்கிரஸ் காரர்கள் சொல்கிறார்கள். திராவிட தேசீயம் என்கிறோம் நாம். 'இல்லை, இல்லை' 'தமிழ்த் தேசீயம்' தான் இருக்கிறது என்கிறார்கள் ஒருசாரார்.

## 144. சர்வ தேசீயம் எது?

'இந்தியத் தேசீயம்' என்று வடநாட்டில் இருப்பவர்களும், இந்தியாவுக்கு வெளியே இருப்பவர்கள் 'ஆசிய தேசீயம்' என்றும், ஆசியாவுக்கு வெளியே இருப்பவர்கள் 'தேசீயம் என்பதே இல்லை! எல்லாம் சர்வ தேசீயம்தான்' என்றும் சொல்லுகிறார்கள்.

## 145. வடநாட்டினர் கொடுமை

கொடுமைப் படுத்துவோர் வடநாட்டினராகவும், கொடுமைப் படுத்தப்படுவோர் தென்னாட்டினராகவும் இருந்தார்கள்.

## 146. வடநாட்டினரின் சுரண்டல்

வடநாட்டினர் சுரண்டுபவராகவும், தென்னாட்டினர் சுரண்டப்படுபவராகவும் இருந்தார்கள்.

## 147. வடக்கும் தெற்கும்

ஆட்டிப் படைப்பது வடக்காகவும், ஆடி அழிவது தெற்காகவும் இருந்தன.

## 148. கொழுப்பதும் அழுவதும்

வடவர் அரசு சுரண்டிக் கொழுக்கிறது. அங்கே கொட்டிக் கொடுத்து விட்டுத் தேம்பித் தவிக்கிறது தெற்கு இங்கே.

## 149. இதுவும் ஒரு தேசீயமே!

வடக்கால் நாம் கஷ்டப்படவில்லை என்றால், அப்படிச் சொல்பவர்கள் வடக்குப் பக்கமே இருக்கட்

டும். நாங்கள் அவர்களைத் தடுக்கவில்லை. ஆனால், வட நாட்டால் நாம் சீரழிக்கப்படுகிறோம் என்ற நம்பிக்கை இருப்பவர்கள் இருக்கிறார்கள். அவர் களைத் திராவிடர் என்கிறோம். அதனால் இந் நாட்டைத் திராவிடம் என்கிறோம். இப்படிச் சொல்லிச் சொல்லி உள்ளத்தில் பதிந்துவிட்டால், இது ஒரு தேசியமாகிறது.

## 150. தானாக எதுவும் வருமா?

ஒரு கிண்ணத்தில் சந்தனம் இருக்கிறது. அதை எடுப்பதற்குக் கையும் இருக்கிறது. பூசிக்கொள்ள மார்பும் இருக்கிறது. அதை எடுத்துப் பூசிக்கொண் டால்தான் மணக்கும். கிண்ணத்தின் அருகில் அமர்ந்து கொண்டு 'வாவா என்றால், சந்தனம் தானே வந்தா மார்பில் ஏறும்? எடுத்துப் பூசிக் கொள்ளாமல், சந்தனம் வரவில்லையே, எதைப் பூசிக்கொள்வது? என்றால் அதற்கு நான் என்ன செய்ய?

## 151. பகுத்தறிவு தேவை இல்லையா?

பகுத்தறிவைப் பயன் படுத்துவதில்லை என்று முடிவு செய்து விட்டபிறகு, மனிதனிடம் வாதிடுவது செத்துப்போன மனிதனுக்கு மருந்து ஊட்டுவதற்கு நிகராகும்.

## 152. இசையிலும் சந்தேகமா?

அலுத்துப் போய்ச் சற்று நேரம் இசை கேட்க லாம் என்று வானொலியைத் திருப்பினால், என்ன கேட்கிறோம் "ஏன் பள்ளி கொண்டீர் ஸ்ரீரங்க நாதரே" என்ற பாட்டு. சந்தேகம் இசைக்குக்கூட

வந்து விட்டது. இன்னும் ஐயப்பாட்டிலேயே வாழ்கிறோம்.

## 153. என்ன விநோதம்?

சரசுவதி தாண்டவமாடுகிறாள் அவன் நாவில் என்று புகழ்வதும், தம்பி என்னடா சண்டப்பிரசண்டம் அடிக்கிறாய் என்று ஏசுவதும் ஏக காலத்தில் நடைபெறும் விநோதபுரி மேடை.

## 154. இழந்தோம் மறந்து விட்டோமா?

நாம் நமது எல்லையை இழந்து விட்டோம். ஆனால், மறந்து விடவில்லை. நமது பழம் பெரும் வீரம் மங்கி வருகிறது. ஆனால், மறைந்து விடவில்லை. எனவேதான் வீர முரசு கொட்டுகிறோம்.

## 155. காட்டுமிராண்டித்தனம் ஏன்?

அர்த்தமற்ற சம்பிரதாயங்கள் பகுத்தறிவுக்கு ஒவ்வாத காட்டுமிராண்டித்தனங்களால் மனிதன் அடிமைப்படுத்தப்பட்டிருக்கிறான். இந்த அடிமை விலங்கொடிக்க, வன் செயல்களை மடியவைக்க பகுத்தறிவு தலை தூக்க வேண்டும்.

## 156. காமச் சேற்றிலே புரளாதீர்

உண்மைக் காதலின் இன்பத்தைச் சுவைத்தறியாத ஆடவரும் பெண்டிருமே, காமச் சேற்றிலே புரள்கிறார்கள். அந்தச் சேற்றிலே விளையும் முட்புதரே விபச்சாரம்.

## 157. ஆணவம் இருந்தது உண்டா?

இன்று தாசர்களாக உள்ள தமிழர்கள், ஒரு காலத்தில் தரணியாண்டவர்கள். தரணியாண்ட

காலத்தில், தன்மானத்தைத் தன்னடக்கமாகக் கொண்டவர்களிடம் சாதிப் பித்து, வைதீக நெறி, அடக்கியாளும் ஆணவம் அறவே இருந்திருக்க வில்லை.

## 158. இவை எதனால்?

மணிமேலே மாசு! மடுமேலே பாசி! வயலினி டையே களை! தமிழர் அவர்களுக்குள் தகாதாரின் உறவு.

## 159. தொல்லை - துயரம் - துவேஷம் ஏன்?

தோழமை சமபலம் உள்ள இருவருக்குள்தான் இருக்கமுடியும். சுரண்டும் சுபாவம், சுரண்டப் படுகின்ற பழக்கம் ஆகியன நிரந்தரமாக இருக்கு மானால் தொல்லையும் துயரமும் துவேஷமும் வளருமேதவிர தோழமை எங்கிருந்து முளைக்கும்?

## 160. கருத்துக்கள் மாறாதவையா?

பழைய இலக்கியங்களில் காவியச்சுவை ததும் பலாம்; நடையழகு நனி சொட்டலாம். அவற்றைத் தீட்டியவர்கள் வல்லவர்களாகக் கூட இருக்கலாம். ஆனால், அதற்காக அவற்றில் காணப்படும் கருத் துக்கள் என்றும் மாற்ற முடியாதவை என்று கூறமுடியுமா?

## 161. இளம் தலைமுறையினரின் தீர்ப்பு

சர். சி. பி. இராமசாமி ஐயரை நோக்கி, 'பட்டை நாமம் போட்டுக் கொள்வது நல்லதா?' என்று கேட்டால், 'பட்டையாகப் போடுவதில் தான் நாமத்தின் மாண்பு இருக்கிறது' என்று சொல்லு

வார். இடத்திற்கு ஏற்ப அவர் பதில் சொல்லுவார். உங்கள் தலைமுறையிலேதான் இதுபோன்ற பிரச்சினைகளுக்கு நீங்கள் தீர்ப்புக் கூறவேண்டும்.

### 162. புதுப் புதுக் கருத்துக்கள் தேவை

புதிய கருத்துக்கள் பல தோன்ற வேண்டிய நேரம் இது! வேறு லோகத்திலே இருப்பதைப் பற்றிய சந்தேகங்களை இந்த லோகத்திலே. கேட்பது தவறாகும்.

### 163. சுவையும் பயனும் தேவை

மானத்தோடு வாழ, ஒருவனை ஒருவன் தாழ்த்தாமல், வாழ்வதற்குரிய ஏடுகள் தேவை. சுவையும் பயனும் எதில் இருந்தாலும் எடுத்துக் கொள்ளுங்கள். பயன் மட்டும் இருந்து சுவை இல்லாமல் இருக்கக் கூடாது. சுவைமட்டும் இருந்து பயன் இல்லாமல் இருக்கக் கூடாது. இரண்டும் ஒருங்கு சேர்ந்து இருக்க வேண்டும்.

### 164. அரிச்சுவடி தெரியாதவர்கள்

இசை, இன்பத்தைத் தரவேண்டும் என்றால், அதைக் கேட்போரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ள வேண்டுமானால், யார் முன்னால் பாடல் பாடப்படுகிறதோ, அதை அவர்கள் புரிந்து கொள்ளக் கூடியதான மொழியில் இருக்க வேண்டும். இது அறிவுத் துறையில் அரிச்சுவடி! இதனை, 'ஆரிய மேதாவிகள்' மறுக்கின்றனர். என்ன அறிவீனம்!

### 165. பொருள் புரிய வேண்டாமா?

பெரும்பாலும் தியாகராஜ கீர்த்தனங்களையே பாடுகிறார்கள். அதிலே அடிக்கடி ராமா ராமா

என்று வருவதைத் தெரிந்து கொண்டிருப்பார்களே ஒழிய, அதன் கருத்தை அறிந்து கொண்டவர்கள் அதிகம் பேர் இருக்க முடியாது. தமிழ் நாட்டிலே தெலுங்குக் கீர்த்தனங்களுக்குப் பொருள் விளங்க முடியுமா? ஆந்திர நாட்டிலே 'அரவம்' தெரிகிறதா?

## 166. கொடைவள்ளலின் பேருதவி

இசையில் ஆரியம் புகுந்து இழுக்கு செய்வதைத் தடுக்க, தமிழ் நாடு தமிழ்ப்பாடல் கேட்பதைத் தர, கொடை வள்ளல் ராஜாசர் அவர்கள் செய்த இந்தப் பேருதவிக்குப் பார்ப்பனர்கள் எதிர்ப்புக் காட்டுகிறார்கள். தமிழரின் எண்ணம் ஈடேறச் செய்வது கண்டு சீறுகின்றனர். தெலுங்குக் கீர்த்தனங்களுக்கும், இந்துஸ்தானி துக்கடாக்களுக்கும் வக்காலத்து வாங்கிக்கொண்டு வாதாடுகின்றனர். தமிழர் மறுமலர்ச்சி கண்டு ஆத்திரமடைந்து ஆர்ப்பரிக்கின்றனர்.

## 167. காரணம் அறியீரோ?

செடியும் கொடியும், தளிரும் இலையும், மலரும் கனியும் ஆடும் காரணம் அறியீரோ! அதோ வீசும் காற்றுடன் கலந்து வரும் இசை கேட்டே அவைகள் ஆடுகின்றன நடன சுந்தரிகள் போல!

## 168. ஆடலும் பாடலும் எது வரை?

சோலை இருக்கும் வரைதான் குயிலும் கூவும். மயிலும் ஆடும் — தளிர்ப்பருவம் மாறிவிட்டால், சோலைக்கே சிறப்பு இருக்காது. மயிலும் குயிலும் உலவிடுமா?

## 169. புதிது புதிதாக தோன்றுவர்

தனிமனிதன் வழிபாடு நாட்டில் பெருகிக் கொண்டே செல்கிறது. பழைய கடவுள்கள் தூக்கி எறியப்பட்டு, புதுக்கடவுள்கள் முளைத்துக் கொண்டிருப்பார்கள்.

## 170. எல்லாம் பிழைப்புக்காகவே

கடவுளின் பெயரால் அற்புதங்களைச் செய்து காட்டி, மதத்திற்குத் திருப்பும் வைதிகர்களிடம். இதையும் கேளுங்கள். பிழைப்புக்காக மாயாஜாலம் செய்யும் வித்தைக்காரனின் 'பிழைப்பு' என்னும் கடவுள் நாகரிகமான தொன்றா?

## 171. அது ஒரு தொற்று நோய்

சோம்பேறியிடம் நாம் எதை எதிர்பார்க்கலாம். 'தலைவிதி' என்னும் தோல்வியின் அழுத்தமான— ஆணித்தரமான — அசிங்கமான — அருட்சிறப்புக் களைத்தான். அவன் உள்ளத்தில் மட்டுமல்ல, உடலெங்கும் வியாபித்து விட்ட தொற்று நோயாகும்.

## 172. பலவீனத்தைக் கண்டு இன்புறுதல்

நம்மைச் சுற்றியுள்ள உயிர்ப்பிராணிகளில் பலவீனத்தால், செத்துச் செத்துப் பிழைக்கும் ஜீவ ஆத்மாக்களின் தோற்றத்தைக் கண்டு இரக்க சிந்தைக்கு ஆளாகி இன்புறும் இயல்பு பெரும் பாலாரிடம் பரவிக் கொண்டே வருகிறது.

## 173. கம்பலைக் கண்ணீர் வடிப்பது ஏன்?

சூலிருந்து பாலூர் சென்று, வேலையூர் சென்று, சோலையூர் சென்று, மனிதன் முதிரம் அடைகிறான்,

அவனைவிட்டு ஆன்மா எப்படி பிரிந்து சென்று விட்டது என்பதைக் கற்பனை செய்து பார்த்தோமா? மாறாக கம்பலைக் கண்ணீர் வடிக்கிறோம். இது நியாயமா?

## 174. மூளையின் பலமும் பலவீனமும்

வேதாந்த விசாரத்தில் மூழ்குகிறோமே தவிர, வேதாந்த விசாரத்தைத் தொட்டுத் தழுவும் மூளையின் பலத்தையும் பலவீனத்தையும் இறைமைப் படுத்திப் பார்க்கிறோமா?

## 175. கொடுமைகளின் ஒருமைப்பாடு

கடவுளின் பெயரால் நடத்தப்படும் வன்முறைகள்தான் நாட்டில் பெருக்கம் — கடவுளே கொடுமைகளின் ஒருமைப்பாட்டுக்கு உடந்தையாக இருந்தால், உலக ஒருமைப்பாடு, மக்கள் ஒருமைப்பாடு எங்ஙனம் நியாயத்தோடு இருக்கும்?

## 176. உண்மைக்குப் புறம்பானது ஏன்?

கற்பனைக் கருத்தோட்டம்தான் இராமாயணம். சுவைதரவல்லது. வரவேற்கிறேன். ஆனால், உண்மைக்குப் புறம்பாகத் திராவிடரை இழிவுபடுத்தித்தான் காப்பியம் படைக்க வேண்டுமா?

## 177. வக்கரிப்பாளரின் வாய்த்துடுக்கு

அடுக்குமொழி குறித்து நம்மீது சாணத்தை அள்ளித் தெளித்தோர் ஓராயிரம். வக்கரிப்பாளர்களின் வாய்த்துடுக்கு நொடிப் பொழுதில் ஓடி ஒளிந்ததை நாடறியும்.

## 178. பயனற்ற இலக்கியங்கள்

புராண இலக்கியம், பொழுதுபோக்கு இலக்கியம், அறிவை அகலப்படுத்தும் இலக்கியம், அப்பாவியாக்கிடும் இலக்கியம், கற்பனை இலக்கியம், காவியம், கதை, கட்டுரை, ஆராய்ச்சி, முன்னேற்றம், சிந்தனை, சீர்திருத்தம் பற்றிய முற்போக்கு இலக்கியம், மறுமலர்ச்சி இலக்கியம் என்று இயற்றமிழ் எத்தனையோ. சுவையும், சுவையற்றதுமான, பயனும் பயனற்றதுமான இலக்கியங்களைக் கொண்டிருக்கிறது.

## 179. ஆய்ந்து தெளிவடையுங்கள்

மாங்கனிகளை, நன்மை பயப்பவை, தீமை தருபவை, உபயோக முள்ளவை, உபயோக மற்றவை என்ற முறையிலே, பிரித்து, பாகுபடுத்தித் தெளிந்து, தேர்ந்தெடுத்து உண்பதுபோல, இயற்றமிழில் அடங்கிய இலக்கியங்களையும் ஆய்ந்து தெளிந்து கற்றிடவேண்டும். காலத்திற்கும் கருத்திற்கும் ஒத்த, உபயோகமான இலக்கியங் களையே படிக்க வேண்டும்.

## 180. பரவசம் அடையச் செய்கிறது

இசையில் தேர்ந்திட, இராகம், தாளம், ஆலாபனம் இன்னும் எத்தனையோ முறைகளைத் தெரிந்து, புரிந்து கொள்ள வேண்டிய நிலை! இவை யெல்லாம், இத்தகைய கட்டுதிட்டங்களெல்லாம் முதலில் சுவையைத்தராது. இசைத் தமிழில், எல்லோருக்கும், ஆனால், இசைவாணர்கள் இனிய குரலில் பாடக்கேட்கும் பொழுது பரவசமடை

கிறோம்! கேட்டுக் கேட்டு இன்புறுகிறோம் இசைத் தமிழை, முள் நீக்கிய பலாச்சுளைபோல!

## 181. கூத்து எத்தகையது?

வாழைப்பழத் தோல் சற்றுக் கனமாக இருந்தால், உரிபபதிலே சற்றுத்தயக்கம் பின்னியிருக்கும். தாமதமுமேற்படும். அதைப் போலவே கூத்து! அரங்கேற்றத்திலும் நடிகர் பொறுக்குதல், பயிற்சிக் காலம், பின்னணி, எல்லாம் முதலில், ஒன்று சேர்த்து அமையச் சற்று சிரமமாகவே இருக்கும். அமைந்தபின், தோல் உரிக்கப்பட்ட வாழைப் பழந்தான். சுலப வேலைதான் உண்ண. இப்படிப் பட்டதே கூத்து.

## 182. நாட்டைச் செம்மைப் படுத்தும்

தோலைக் கண்டகண்ட இடத்திலே வீசி எறிந்தால், வழுக்கிவிழுந்து காயமேற்படுத்திக் கொள் கிறோம். நாடகமும் அப்படித்தான். இறுதியிலே சற்றுக் கவனப் பிசகாக, குறைவாக நடந்துகொண் டால், தொல்லை நம்மை வட்டடுமிம். கவனமாக நடந்து கொண்டால், நாடகத்தின் மூலம் நற்பணி கிடைக்கும்! நாட்டைச் செம்மைப் படுத்தி அறிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லலாம்.

## 183. முக்கனியும் முத்தமிழும்

முக்கனி, கனி வகைகளில் சிறந்து விளங்கு கின்றன! மொழிகளில் சிறந்து விளங்குகிறது முத்தமிழ்!

### 184. எண்ணங்களை வளர்ப்பவை

இலக்கியங்கள் மனிதனது எண்ணங்களை வளர்க்கின்றன! எண்ணங்களை ஏற்படுத்து கின்றன! கருத்துக்களை, பலதரப்பட்ட பிரச்சினை களைப் பற்றிய விளக்கங்களைத் தருகின்றன!

### 185. சிந்தனைகளைக் கிளறிவிடுகிறது

இலக்கியம் மனிதனது அறிவை வளர்க்கிறது! மனிதனுக்குத் தெளிவை ஏற்படுத்துகிறது! நன்மை தீமைகளை எடுத்துக் காட்டுகிறது! மனிதனது சிந்தனையைக் கிளறி விடுகிறது!

### 186. எண்ணமும் செயலும் காட்டும் வழி

இலக்கியங்கள், எந்த முறையில் அமைகின்ற னவோ, இலக்கியங்கள் எந்த முறையைப் போதிக் கின்றனவோ, எந்தெந்த ஏற்பாடுகளை எடுத்துக் காட்டுகின்றனவோ, அந்தந்த முறைகளிலே, ஏற்பாடுகளிலே மனிதனது எண்ணமும் செல்லும், செல்லுகிறது.

### 187. அவசியமும் முக்கியமும்

இலக்கியங்கள், நல்லமுறையில், நல்ல கருத்துக்களைப் போதித்திடும் வழியில், மனிதனது எண்ணங்களைப் பண்படுத்தும் வகையில் அமைக் கப்பட வேண்டியது அவசியமாகிறது! முக்கியமுமா கிறது!

### 188. பழமையையே போதிக்கின்றன

இலக்கியங்கள் என்ற வரிசையிலே, இன்று, காணப்படுபவை பெரும்பாலும் மக்களுக்குத் தேவை

யான, வாழ்க்கைக்கு வேண்டிய கருத்துக்களைத் தருபவைகளாகக் காணப்படவில்லை! எல்லாம், ஒரே கருத்தை, பழமையைப் போதிப்பவைகளாகவே இருக்கின்றன!

## 189. படித்தவர்களிடையே குறைகள்

என்றோ, யாராலோ, வேதம், ஆகமம், இதிகாசம், புராணம் என்ற முறையிலே ஏற்பட்டு எழுதப்பட்டவைதான் முடிந்த இலக்கியங்கள். அவற்றில் கூறப்படும் கருத்துக்களே நாட்டினருக்குத் தேவை; அவற்றை ஏற்க வேண்டும், போற்ற வேண்டும், ஏன் என்று கேட்காமல் பின்பற்றிடவும் வேண்டும் என்ற எண்ணம், கொள்கை, கோட்பாடு நாட்டில் படித்த புலவர்களிடையேயும் பெரிதும் காணப்படுகிறது.

## 190. அந்தக் காலக் கருத்துக்கள் தேவையா?

பழைய இலக்கியங்கள், பழைய காலத்திற்கேற்றவையாக, சிறந்தவையாக இருக்கலாம்! ஆனால் அதே கருத்துக்கள், அந்தக் காலத்துக் கருத்துக்கள், அப்படியே முழுதும் இன்று ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று கூறுவது, திட்டம் வகுப்பது. தீர்மானங்கள் செய்வது தகுதிதானா? தேவைதானா? கூறுங்கள்!

## 191. மாற்ற முடியாதவையா?

பழைய இலக்கியங்களிலே, காவிய ரசம் ததும்பலாம். நடையழகு நன்றக இருக்கலாம். அதைத் தீட்டியவர் பெரிய புலவராகவும் இருக்க

லாம். அதற்காக அவற்றில் காணபபடும் கருத்துக் கள், கதைகள், நீதிபோதனைகள் அத்தனையும் தேவை, தீர்மானமானவை என்றும், மாற்ற முடியாதவை, மாற்றக் கூடாதவை என்றும் கூறுவதை எப்படி ஒப்ப முடியும், முழுதும்!

## 192. கையாளாத மொழி

துடுக்குத்தனமாக அடுக்குமோழி பேசுவோரை மடக்குவதற்கு வெடுக்கு மொழிபேசி முடுக்கும் பண்பை நாம் கையாண்டதில்லை.

## 193. கண்ணாடிப் பேழைக்குள் அடக்க முடியுமா?

இருளைக் கீறிக்கொண்டு செல்லும் போது தான் மின்மினியே அழகொளிருகிறது. மின்மினி ஒளிதருவது கண்டு அதனைக் கண்ணாடி பேழைக் குள் அடுக்கிவைத்து அழகு பார்க்கத் தேவையா?

## 194. பெருமையுறும் பாங்கு

நிறைவாழ்வு கனிச்சுவை போன்றுளது. அதனை நித்தம் பற்றிடும் வாய்ப்புக் கிடைக்கப் பெறாதோரும் இன்னொருநாள் எழில் மாளிகை தனை எட்டிப் பார்த்துக் களிப்படையும் இல்லாத வன்போல் மிகையூட்டிக்காணும் நகைப்புகளையும், பொலிவகன்ற எழில் கண்டு பெருமையுறும் பாங்கன்றே?

## 195. உழைப்பு என்னும் ஆற்றல்

நாட்டின் பெருவளங்கள் நிலமகளின் சூல் முதிர்ந்த பூங்கெழில். இவ்வெழில் யாவும் நித்தில வெண் முத்துக்கள். இந்த எழிலினைப் பயன்தருவன

வாகப் பாங்குடன் பற்றிடவும், சுவையினை நுகர்ந்திடவும் ''உழைப்பு'' என்றும் ஆற்றலினைப் பெற்றிடல் வேண்டும்.

## 196. நல் முத்துக்கள்

செந்தமிழர் செம்மைபெற அறிவாற்றல் என்னும் சூல் முதிரும் நல்முத்துக்கள் உருவாகிட வேண்டும். இவ்வாற்றால் கூட்டு முயற்சியினால் மிகுந்த சிறப்பெய்தும். இருள் நீங்கி ஒளிகாண்போம்.

## 197. பக்குவமான கருத்தோட்டம்

வார்த்தைகளில் கருத்தாழம் தங்குதடையின்றித் தானாக மலரவேண்டும். மணமுள்ள மலர்களைப் பதமாகப் பறித்துப் பக்குவமாக மாலை தொடுக்க வேண்டியது எப்படியோ அந்த நிகண்டிலேயே கருத்தோட்டம் அமைய வேண்டும்.

## 198. மொழிக்குத் தீங்கு எது?

ஓசைநயத்தில் இயல்பாகவே அமைந்து, பொருள் செறிந்து பொலிவு தருபவையே தேவை. பொருளும் பொலிவும் வலிந்தகன்று கொண்டு வருவன மொழிக்கு நாமே நம்மையும் அறியாமல் செய்து விடும் தீங்காகும்.

## 199. மகிழ வைக்கும் புத்தழகு

எழிலோவியம் நிரம்ப உள்ளது நம்மைச் சுற்றி! ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வகையான அழகு ததும்புகிறது! ஆனால், அந்தப் புத்தழகு மட்டும்தான் அவை நமக்கு அளிக்கின்றன என்றால்

அவை பெருமைக்கு உரியன ஆகா. புத்தழகு காட்டி நம்மை மகிழவைப்பதுடன் அவை தமது நன்மையின் காரணமாக நமக்குப் பயனையும் வழங்குகின்றன.

## 200. இப்படி இருக்கலாமா?

விழியுண்டு பார்வை இல்லை! வாயுண்டு பேசும் திறனில்லை! வளமுண்டு வாழ்வில்லை. இத்தனை நலிவுகளும் நம்மைச் சுற்றி கிடக்கின்றன — இருக்கலாமா?

## 201. மாணவர்களின் கூட்டு முயற்சி

இக் கல்லூரி மாணவர்கள் அனைவரும் சேர்ந்து கூட்டு முயற்சியில் ஈடுபடவேண்டும். உங்களுக்கு இடைவிடாத உழைப்புத் தேவை. இந்தக் கல்லூரியிலே நீங்கள் சேர்ந்து கல்வி பயிலும் வாய்ப்புக் கிடைத்ததற்காகப் பெருமிதம் அடையுங்கள். அன்று தேய்ந்து வந்த திராவிடர்களுக்கு ஆறுதல் அளித்து, அவர்களுக்குப் புத்துயிர் ஊட்டக் காரணமாகக் காட்சிதந்த பூமான் தியாகராயர். அவர் பெயர் கொண்ட கல்லூரியில் கல்வி பயிலும் வாய்ப்புக் கிடைத்ததே என்று பெருமை அடையுங்கள் என்று அடிக்கடி சொல்லி வருகிறேன். தியாகராயர், தொண்டு மிகப் பெரியது. தம்முடைய சமூகத்தொண்டைத்தான் தியாகராயர் பெரிதாக மதித்தார். அன்று தியாகராயர் திராவிடப் பெருங்குடிமக்கள் முன்னேற வேண்டும் என்று பாடுபட்டதன் பலனை இன்று நாம் காண்கிறோம்.

## 202. வேண்டாததைத் தூக்கி எறிக

இன்று தேவைப்படுகிற கருத்து அந்த நாளிலே தேவைப்படாமல் இருந்திருக்கலாம். செஞ்சிக்

கோட்டையின் உள்ளே பகைவர்கள் யாரும் புகமுடியாதபடி அந்தக் காலத்துக்கு ஏற்பச் கோட்டை கட்டப் பட்டது. ஆனால் அந்தக் கோட்டையை வைத்துக் கொண்டு இந்தக் காலத் திலே யாரும் போர் செய்ய முடியாது. அந்தக் காலத்து நிகழ்ச்சியையும் இந்தக் காலத்து நிகழ்ச் சியையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். எதையும் சரியா? தப்பா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும், சரியில்லாததைத் தூக்கி எறிய வேண்டும்.

## 203. புராணப் பித்தர்களின் கைவரிசை

நம் நாட்டு மக்களில் பலருக்கு இமயமலை எங்கிருக்கிறது என்று தெரியாது. இமயமலை என்றால் என்ன? என்று கேட்போர் அதிகமாக இருப்பார்கள். ஆனால் நம் நாட்டு மக்களில் பெரும்பாலோர்க்கு பரமசிவம் தெரியும்; கைலயங்கிரி தெரியும். நம்மவர்களில் பெரும்பாலோர்க்கு சைனா, ஜப்பான், அமேரிக்கா நம்முன் இருப்பது தெரியாது. கிரகங்களைப் பற்றி நன்கு தெரிந்து வைத்திருப்பார்கள். அந்தக் காலப் புராணப் பித்தர்கள் தங்கள் மனம் போல் தங்களுக்குட்பட்ட கருத்துக்களை எல்லாம் புராணங்களாக எழுதி விட்டார்கள்.

## 204. உள்ளம் ஒரு காட்சியகம்

நம் மனம் ஒரு மியூசியம்போல் இருக்கிறது. எது கொள்ளத்தக்கதோ அதை ஏற்றுக் கொள்ளுங் கள். எது தள்ளத்தக்கதோ அதைத் தள்ளிவிடுங்கள்.

## 205. பலம் வாய்ந்த பகுத்தறிவு

தமிழ் என்றால் தமிழ்மக்கள் அனைவரையும் குறிக்கும். தமிழ்மக்கள் அனைவரும் ஒன்றுகூட வேண்டும் என்ற உயர்ந்த கருத்தை நன்கு வரவேற்கிறேன். அறிவுத் தெளிவோடு எதைத் தள்ள வேண்டுமோ அதைத் தள்ள வேண்டும். புலவர் மணிகள் என்னதான் திறமையோடு, எதுகை மோனையோடு, உவமை கற்பனை நயத்தோடு இராவணனுக்கு பத்துத்தலைகள் என்று சொன்னாலும் இந்தக் காலத்து மாணவர்களாகிய நீங்கள் ஏற்றுக் கொள்ளுவீர்களா? தமிழ்ப் புலவர்கள் என்ன சொல்லியும் உங்களை நம்ப வைக்க முடியாது. பகுத்தறிவுப் பிரச்சாரத்தால் நீங்கள் இப்பொழுது பலம் பெற்றிருக்கிறீர்கள். சொன்னவற்றை யெல்லாம் ஏற்றுக் கொள்ளும் காலம் இதுவல்ல! அதுவும் இந்தக்கால மாணவர்களை எவரும் எளிதில் ஏமாற்றி விடமுடியாது.

## 206. எண்ண எண்ண இனிக்கும்

இயற்கைச் செல்வம் நமக்கு அளித்த இன்ப ஊற்றுக்கள் எத்தனை? இவற்றில் கனியெல்லாம் சிலருக்கு — காய் சருகுகள் பலருக்கு — ஒளியில் சிலர் — பாழிருளில் பலர் — வாழ்வர் சிலர் — வதைபடுவார் பலர் — எனும் நிலைகாண வல்ல இத்தனை கோலம் எண்ணற்றனவற்றை ஈந்து என்றும் இளமையுடன் இயற்கையாள் கொலுவீற்றிருப்பது இயற்கையன்னை தீட்டித் தந்துள்ள கோலம் எண்ண எண்ண இனிப்பதாக உள்ளது.

## 207. ஏற்றம் கொடுத்திடல் வேண்டும்

நிலக்கள்ளியாய்த் தமிழர் வாழ்வில் படர்ந்திருக்கும் கோத்திர ஆசாரங்களை நீக்கிட உள்ளத்தை மாசறு பொன்னாக்கி, ஒளிவிடு முத்தாகத் துளிர்விடத் தகுந்தனவாகவும் மிகுந்தனவாகவும் எழிலார் கருத்தோட்டம் எங்கிருந்தேனும் ஏற்றம் கொடுத்திடல் வேண்டும்.

## 208. அக்கறை உள்ளவர்களே தேவை

நம்மைப் பற்றியும், நமது வாழ்க்கையைப் பற்றியும் அக்கறை காட்டும் நண்பர்களைத்தான் நாம் அழைக்கிறோம். அப்படிப்பட்டவர்தானே நாம் முன்னேற வழிவகைகளைக் காட்டமுடியும் கூறமுடியும்!

## 209. ஒருமையுடன் உழைக்க வேண்டும்

நாடு முழுவதிலும் இன்றுள்ளதோர் நலிவு நிலை குறித்துக் காரணம் கண்டறிய, கேடு களைந்திட, நலம் விளைந்திட, உருக்குலைந்து கிடப்போர் ஒருமைப்பட்டு உழைத்திட வேண்டும்.

## 210. அத்தகைய துணிச்சல் எதற்கு?

துணிச்சல் வாதம் என்பது ஒருமுனை வாதம். விட்டில் பூச்சியின் துணிச்சலால்தான் அது சாகடிக்கப்படுகிறது.

## 211. வேதனையின் கசிவு

வெறுமையாக்கப்பட்ட நெஞ்சங்களில் தான் வேதனையின் கசிவு உண்டு. இழுக்காறும், அழுக்காறும் அதன் இரட்டைக் குழந்தைகள்.

### 212. சூழ்ச்சியில் சிக்கி விடாதீர்கள்

கரைபுரண்டோடும் காட்டாறு, இந்தி அரக்கி தீந்தமிழோரைக் காட்டாற்றுப்படுகுழியில் சிக்குண்டு மூழ்கடிக்க அரசோச்சும் கோலேந்திகள் வீழ்த்தும் சூழ்ச்சியில் சிக்கி விடாதீர்கள்.

### 213. ஏறியவன் இறங்குவான்

உயரே ஏறியவன் கீழே இறங்கித்தான் ஆக வேண்டும்.

### 214. சிந்தனையின் தெளிவு

அறிவுச் சிந்தனை எங்கிருந்தும் பிறக்கலாம். சிந்தனையில் உருவாகும் தெளிவில்தான் ஏக்கம் நிறையா இன்ப வாழ்வு நிலைத்திருக்கும்.

### 215. எல்லாமே கட்டுக் கதைகள்

இயற்றமிழ் இலக்கியத்தில், பெரும் பகுதி, நாட்டு மக்களுக்குத் தெரிந்துள்ள தெரியப்படுத்தப் பட்டுள்ள பலவும், புராண ஏடுகளாகவும், புண்ணிய கதைகளாகவும் இதிகாசங்களாகவும், பகவத் லீலைகள் பற்றியதாகவுந்தான், இருக்கின்றன!

### 216. இந்தக் கருத்து தேவையா?

'வாழ்வாவது மாயம், இது மண்ணாவது திண்ணம்', தேவைதானா? இந்தக் கருத்து, இன்றும்?

### 217. வாழ வழி காட்டும் பாடலா?

''காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா, மாயனார் குயவன் செய்த மண்ணு

பாண்டம் ஓட்டா', பாடுகிறார்களே, பக்தியோடு, என்ன நினைப்பது? வாழ எண்ணம் எங்கிருந்து வரும்? வாழ்வை நம்பாவிடில்.

## 218. சுகம் எப்படி வரும்?

'வாழ்வை நம்பாதே! எதைத்தான் நம்புவது? வாழ்ந்தால் தானே, எதையும் நம்ப முடியும், வாழா விட்டால், வாழ வழி தேடாது சும்மா இருந்தால் சுகம் வருமா? சோம்பேறி என்ற பட்டம் அல்லவா கிடைத்து விடும் சுலபத்தில்.

## 219. இது முறைதானா?

நமது முன்னோர் கருத்து, முற்காலப் புலவர்கள் பாடியவை, எழுதியவை என்ற ஒரே காரணத்திற்காக, பண்டைய இலக்கியங்களைப் பற்றிக் கேள்விகள் எழுப்பக் கூடாது. அதிலுள்ள கருத்துக்களைப்பற்றிய, எதிரான கருத்துக் கொள்வது கூடாது, பேசுவது குற்றம், எழுதுவதற்குத் தடை, மாபாவி என்ற பட்டம், பழி, ஏசல், தூற்றுதல்! சரியா? முறைதானா?

## 220. அறிவு தரும் இலக்கியங்கள் தேவை

அறிவுக்கு அப்பாற்பட்ட இலக்கியங்கள் அப்பாலேயே நிற்கட்டும். மனிதனது அறிவுக்கு வேலை தரும் அறிவு இலக்கியங்களே தேவை என்ற நிலைமை, சூழ்நிலை, உண்டாகித் தீரும் நாள் வெகுவிரைவில் வந்தே தீரும் என்பது நிச்சயம் உறுதி!

## 221. சங்கடமான கேள்விகள்

ஆண்டவனைப்பற்றிய அருள் நூல்களைப் பற்றிய ஆராய்ச்சியா? மகேஸ்வரனைப்பற்றிய மதநூல்களிலே மாற்றமா? புண்ணிய கதைகளிலே, புதிய பாதையைத் தேடுவதா? மறுமலர்ச்சிக் காண வில்லையே என்ற மனச் சங்கடமான கேள்வியா? தகாது! ஆகாது, கூடாது! என்பது ஏன்! எதனால்!

## 222 நல்ல சூழ்நிலையை உண்டாக்குவது

'சூழ்நிலை!' காலவேகம், மனிதனது முன்னேற்றம் எண்ணப் புரட்சியின் வேகமான முன்னேற்றம், விஞ்ஞான அறிவு, ஆராய்ச்சி, வாழ்க்கை முறையை அதற்கான சுற்றுச் சார்பை, சூழ்ந்துள்ள தன்மைகளை, தரப்படுத்தி, வளப்படுத்தி, நல்ல சூழ்நிலையை உண்டாக்கித் தருகிறது. உருவாக்கிக் கொடுக்கிறது.

## 223. செயலாற்றும் வலிமை எது?

ஏக்கம் மேலிட்டு ஏதும் செய்ய இயலா நிலையியினராகிவிடின் நாடு காடாகும். மக்கள் பேடும் மாக்களாவர். எனவேதான், அந்த ஏக்கம் நம்மை செயலாற்ற வைத்திடும் வலியாக மாறிட வேண்டும்.

## 224. உலகில் கண்ட காட்சிகள்

உலகிலே பல்வேறு நாடுகளில் இடர்பட்ட மக்கள் இழிவு நிலையினில் தள்ளப்பட்ட மக்கள் துக்கத்தால் துவண்டு ஏக்கத்தால் நெருக்கப்பட்டு இதயம் வெந்து, இடுப்பொடிந்து, ஏதும் செய்ய இயலாத நிலையினராகி விட்டவர் போக, ஒரு சிலர் துணிந்து எழுந்தனர். எதிர்த்து நின்றனர். வெற்றி கண்டனர். பெருமூச்சிலிருந்து புன்னகை பிறந்தது!

சிறைக் கோட்டங்களிலிருந்து மக்களாட்சி மன்றங்கள் உருவாயின. வெட்டுண்ட சிரங்களிலிருந்து கொட்டிய செங்குருதித் துளிகள் கொடுமையை வெட்டி வீழ்த்தும் கூர்வாளாயின.

## 225. கோட்டைகள் தூளாகி விடும்

கொடுமைக்கு ஆளான மக்களின் கொடிய கண்ணீர் ஆதிக்கக் கொடுமைக்குக் கோட்டைகளைத் தூளாக்கி விடும் வெடிகுண்டுகளாயின. இது வல்லூறை விரட்டிய சிட்டுக்குருவிகளை ஒத்திருக்கிறது.

## 226. இது நம்முடைய நிலைமை

கனி பறித்துச் சாறு எடுத்துப் பருகிடுவார் உண்டு. இங்கு நாமோ வெம்பிப் பழுக்கவைத்து வேடிக்கை பார்க்கிறோம்.

## 227. மாளவே மாளாது

புத்தறிவின் புரையோட்டம் இன்றுள்ள அறிவு ஜீவிகளின் கணையாழி! நம் ஆன்றோர் வடித்துத் தந்திருக்கும் வழுவோசை மரபுகள் சந்தநடை சிந்து மாள்வதில்லை.

## 228. ஆற்றலின் வெளிப்பாடு எது?

வித்துவச் செருக்குத்தான் ஒரு எழுத்தாளனின் ஆற்றலின் வெளிப்பாடு. அவனது புலமையின் சாஎரம்.

## 229. சிந்தனைத் தெளிவு

சமகால இலக்கியத் திறனாய்வுச் சிந்தனைகள் வாழ்வின் அடிப்படைத் தூண்டுதல்களை மைய மாகக் கொண்டுள்ளன.

## 230. தரம் நழுவி விடும்

இலக்கியத்தின் இங்கிதம் இலக்கியத்தின் இலக்கணம். இலக்கியத்தின் வழுக்கள் வடுக்கள் கடுகளவேனும் கலக்க நேரிடின் அது இலக்கியத் தரத்தை விட்டு நழுவிவிடும்

## 231. நாம் கேட்பது எது?

நாம் இழந்து விட்ட பாரம்பரியச் சொத்துரிமைகளைக் கேட்கவில்லை. மண்டியிட்டுக் கெஞ்சவிலலை. எங்கள். எழிலார்ந்த செந்தமிழை எங்களிடமிருந்து பிரித்துக் கொடுமைக்கு ஆளாக்காதீர்கள் என்றுதான் அதிகார வர்க்கத்தைக் கேட்கிறோம்.

## 232. நீங்கள் என்ன செய்வீர்கள்?

மொழிவெறி வக்கரிப்பாளர்களே! கூச்சலிடாதீர்கள்! எங்கள் நிலையில் இருந்தால், கோஷமிடுவீர்களா? கும்பி எரிந்து கிடப்பீர்களா? என்று சிந்தியுங்கள்.

## 233. விலகிப் போங்கள்

ஆற்றொழுக்கு நடையில் சொற்செறிவும் பொதிந்து கிடக்கும் தீந்தமிழைப் பிறமொழி கலக்கி நாசப்படுத்தும் கனவான்களே விலகிப் போங்கள்.

## 234. போர் தொடுத்து மாள்வோம்

உள்ள உயிர் ஒன்றுதான் அது ஒருமுறைதான் — பிரியப்போவதும் உறுதிதான். வறுமைத்தேள் கொட்டியோ— பூகம்பம், வெள்ளம், தொற்றுநோய் என்பன போன்ற தாக்கங்களாகவோ போயிடும் இவ்வுயிர் எங்கள் தாய்த்திரு நாட்டை மீட்கப் போர் தொடுத்து மாளுவோம்

## 235. எழில்மிகு அழகோவியம்

பூம்பொழில் புனலாடி, தன்னழகை வாரி வீசு கிறது. எழிலார்ந்த அழகோவியம். அந்த ஒளிப் பிம்பத்தில் உறவாடி எழிற்கோலம் காட்டட்டும்.

## 236. ஆதிக்கம் செலுத்துபவை

உருட்டும் கண், மிரட்டும் சொல், எப்போதும் ஆதிக்கக் கருவிகள்.

## 237. விதிக்கப்பட்டது யாரால்?

சடங்கு சம்பிரதாயம், குலம், கோத்திரம் என்பன போன்ற பிரம கோட்பாடுகளை இந்த மனிதன் உருவாக்கிவிட்டு ''அங்கு விதிக்கப்பட்டது'' என்று இடம் ஏவல் தெரியாமல் தப்பித்து விடுகிறான்.

## 238. காவி உடை ஏமாற்றுதல்

காவி உடையைக் கண்டு மயங்காதீர்கள். கள்ளனும் காமுகனும் கூடத்தான் காவியுடை அணிந்து சமுதாயத்தை வஞ்சிக்கிறான். சீலராக இருக்கின்றனரா? எனக் கண்டறியச் செயலைக் கவனியுங்கள்.

## 239. சட்டத்தால் இயலுமா?

எச்சில் கனிகளாக்கப்பட்ட எழிலரசிகள் மறு வாழ்வுக்கு விலக்களிக்கப்பட்டவர்கள் என்னும் சமுதாயக் கட்டுப்பாடு இருக்கும் வரை, விபச் சாரத்தை வெறும் சட்டங்களால் போக்கடிக்க முடியாது.

## 240. ஜாதகம் மெய்யாகுமா?

ஜாதகக் கணக்குப்படி பிறந்த குழந்தை மூளி யாக்கப்பட்டோ, முண்டமாக்கப்பட்டோ, முடமாக்கப் பட்டோ. இருந்தால், அந்த ஜாதக கணக்கு பிழையே தவிர, வேறு என்ன இருக்க முடியும்?

## 241. நம்முடைய முத்திரை

தடியடித் தழும்புகள் நாங்கள் பெறற்கரிய பொற் பதக்கம் — பூச்செண்டு!

## 242. அதுவே பன்னீர்த் துளி

கண்ணீர்ப் புகை — அது எங்களுக்கு பன்னீர்த் துளி!

## 243. எப்படி உருவாயிற்று?

சிறுமைப் படுத்தப் பட்டவர்களின் உணர்ச்சிக் கொந்தளிப்பில் உருவானதே பாகிஸ்தான்.

## 244. விவேகியும் வீணனும்

விவேகியின் வாழ்வும், வீணனின் வாழ்வும் ஒன்றாகத்தான் இருக்கமுடியும். விவேகி வாழ்வுச் சக்கரத்தின் வீணையை மீட்டுகிறான். வீணன் மீட்டும் வீணையின் நுகத்தடியில் சிக்கி இதிகாச பாத்திரமாகிறான்

## 245. வெற்றியும் தோல்வியும்

தோல்வியின் திருப்பம் வெற்றியெனில், வெற்றியின் திருப்பமும் தோல்வியாகத்தானே இருக்க முடியும்.

## 246. அதிகாரம் என்றால் என்ன?

அதிகாரம் ஒரு மீட்டல்: அதற்கு அடங்கி யிருப்பது கூட்டல்; அதற்கு அத்துமீறிப்போதல் கழித்தல்.

## 247. நாத்திகம் பரவுவது ஏன்?

ஆலயம் ஆயிரம் இருக்க, அடியார்கள் பாடி வைத்துவிட்டுப்போன பதிகங்கள் பல இருக்க, அதிர்வேட்டும், ஆகாச வாணமும் ஆர்ப்பரித்த வண்ணமிருக்க, தங்கப்பாதக்குறட்டுக் குருமார்கள் முதற்கொண்டு தணலைப் புனலாக்கும் அற்புதம் புரிபவர் என்று விளம்பரப்படுத்திக் கொள்ளும் கோவணாண்டிகள் வரை கொலு வீற்றிருக்க, நாத்திக கருத்துகள் மக்களிடம் பரவிக் கொண்டிருக் கிறது. இது சிந்திக்கப்பட்டதன் விளைவுதானே!

## 248. தட்டையா? உருண்டையா?

சிருஷ்டித் தன்மையில்தான் எத்தனை கோளாறு கள். சிருஷ்டிகர்த்தா வேறுபாடற்றுச் சீராகப் படைத்திருந்தால், உலகம் உருண்டையாக இருக்க முடியாது. தட்டையாகத்தான் இருக்க முடியும்.

## 249. அது இயல்பே!

மயிலாசன மகுடம் தாங்கிகளே! உங்களின் தலையோடுகளும் கபால ஒடுகளாய் உருமாறும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

## 250. ஆட்சியாளரின் கொடுமை

அரசோச்சும் மரபினர் இத்தரணியைத் தீக்காடாக்கிவிட்ட வரலாற்றுச் சான்றுகள்தான் மிகுதம்.

## 251. எவ்வளவு பொருத்தம்!

நடை பாதையிலும் மனித உணர்வுகள் சிலிர்த்து நிற்பதால்தான் நடைப்பிணம் பெயர் பெற்றது.

## 252. கலக்கத்தால் எழுவது

அங்கலாய்ப்புகள் முழுமை பெறும்போது உருவாகும் பொருளே எழுச்சி எனப்படும்.

## 253. ஏதாவது ஒரு பெயர்

சித்தாந்தத்திலிருந்து வேதாந்தம் பிறக்கிறது. வேதாந்தத்திலிருந்து வைத்தியம் பிறக்கிறது. இதிலிருந்து பிறப்பதற்கு எது பெயரோ?

## 254. வலிமை மிக்க உள்ளம்

பசி, பட்டினி, வறுமை, இழிவு, பழி, புறக் கணிப்பு, கொடுமை, மரணம் எதுவும் எங்கள் மன உறுதியைக் குலைக்காது.

## 255. அதுவே மக்களாட்சி

அதிகாரம் கோடிக்கணக்கானவர்களின் இதயங் களிலே கோலோச்ச ஜனநாயகம் வித்திடுகிறது.

## 256. உத்தமன் அவனே!

இழிமொழிகள், ஏளனம், பழிச்சொல், புறக் கணிப்பு, நயவஞ்சகரின் நாசகாரச் செயல்கள் அத்தனையும் தாங்கிக் கொள்கிறவன்தான் முழுமை யான மனிதன்.

## 257. மனிதத் தன்மை

தோல்விகளால் நாம் துவழ மாட்டோம். கபடரின் கல்நெஞ்சத்தால் கவிழமாட்டோம்.

## 258. இரண்டுக்கும் வரவேற்பு

கைதட்டல்களும் கரகோஷங்களும் ஒரு அரசியல்வாதியின் எதிர்காலத்தை உருவாக்கு கிறது. கல் வெறிகளும், சொல் வெறிகளும் ஒரு அரசியல்வாதியை மயக்கநிலை தெளிய வைக் கிறது.

## 259. உயர்வதும் தாழ்வதும் ஏன்?

ஜனநாயகம் பரவலாக்கப்பட்டபோதுதான் தோட்டியும் துரைமகனாக முடிந்தது. பரம்பரை அரசு கட்டில் சரியத் தொடங்கியது

## 260. எங்குமே இதே கதைதான்!

''வைதீகச் சடங்கு'' என்ற புரட்டல் வாதத் தால், தமிழகம் மட்டுதான் தாழ்ந்து கிடக்கவில்லை. நவீன ரோமாபுரியிலும் இத்தகைய இலச்சணைகள் உண்டு.

## 261. நன்மை விளைந்தது

உலுத்தர் தன் உறவால் போர்ப் பறையை மறந் தோம். உப்பரிகையில் உழல்கிறோம்.

## 262. துடிப்பும் இளமையும்

மலையருவிகளிலும், ஆழ்கடல் அலைகளிலும், கொடும் வனத்திலும் தமிழன் ஒருங்கே அச்சமின்றி ஓயாது அலைந்து திரிந்தான். இயற்கையின்

எழிலார்ந்த வீறுமிக்க தோற்றங்களிலே அவன் இடையறாப் பாசம் உடையவன். கழுகின் குலைகளிலும், தெங்கின் பாளைகளிலும், வாழையின் இளங் குருத்துகளிலும் பிறர்காணும் அதே அழகை அவன் அவற்றில் மட்டுமின்றி, மலைபாம்புகளின் ஒய்யார வண்ண வளைவுகளிலும் சிறுத்தையின் ஒயிலார்ந்த வீறுநடைகளிலும் காணமுடிந்தது. அத்துடன் புதுநிலவும் புதுவழியும் காணும் துடிப்பில் அவன் என்றும் தளராத புத்திளமையும் புதுமுறுக்கும் எய்தினான்.

## 263. வடிவத்தைப் பொறுத்தது

வாழ்க்கை என்பது ஒரு ஆராய்ச்சி. இந்த ஆராய்ச்சியின் படிமங்களைப் பொறுத்தே வாழ்க்கையும் அமையும்.

## 264. ஆராய்ச்சியில் உண்மையா?

சிலர் தங்கள் கொள்கைளிலே ஞான ஒளியைப் பாய்ச்சி ஊன்றி நிற்குமிடத்து நடைமுறைகளை மாற்றிக் கொள்கின்றனர். இந்த மாறுதல்களை நினைவில் கொண்டு அவர்கள் வாழ்க்கையை ஆராய வேண்டும்.

## 265. வன்முறைக்கு வரவேற்பு

வன்முறையாளர்களுக்கு வாயிற்கதவு எங்கே திறக்கப்படுகின்றதோ—எங்கே இல்லாமை நெளிகிறதோ—எங்கே சிலர் வாழ, பலர் வதைக்கப்படுகிறதோ—எங்கே உழைப்பவன் உருக்குலைந்து, உயர்ந்தவன், மேலும் மேலும் உயர்ந்து கொண்டு போகிறனோ—எங்கே வறுமையின் ஆதிக்கம் கொடி கட்டிப் பறக்கின்றதோ—அங்கெல்லாம் நெருப்புக் கேற்ற பஞ்சு மெத்தை போன்று, வன்முறையாளர்

களுக்கேற்ற வாயிற் கதவுகள் திறந்த வண்ணம் இருக்கும்.

## 266. கதாபாத்திரங்கள் எங்கே உள்ளனர்?

தமிழன் மரபினது புத்தம் புது எழுச்சி வரலாற்றுக் காப்பியங்களுக்குக் கதாபாத்திரங்கள் தேவை. கோழைத்தனமான கூழாங்கற்களைப் போன்ற கதாபாத்திரங்கள் அல்ல. வீரம் செறிந்த பளிங்குக் கற்களையுடைய கதாபாத்திரங்கள் தேவை.

## 267. நாடகத்தின் சிறப்பு எது?

நாடகத்தின் தனிச் சிறப்புக்குக் காரணம், கதாபாத்திரங்களின் உணர்ச்சி பாவமே. உணர்ச்சி பாவம் கெட்டுவிட்டால், நல்ல கதையும் பொல்லாத கதையாகி விடும்.

## 268. அறிவே மின்னொளி

கற்பனாவாதிகள் அறிவு நெகிழ்ச்சி மின்னொளிகளாகின்றன.

## 269. புரட்சியும் நெகிழ்ச்சியும்

சிந்தனை நெகிழ்ச்சியில் உருவானதே சாக்கிரட்டீசின் நச்சுக் கோப்பை. சிந்தனைப் புரட்சி இல்லாதிருப்பின் சாக்கிரட்டிஸ் கதாபாத்திரமே இருந்திருக்காது.

## 270. படிக்காத குற்றமே!

ஹிட்லரும், நெப்போலியனும், முசோலினியும் சர்வாதிகாரி என்று தெரிந்திருக்கும். நாம் கரிபால்டியையும், கமால்பாட்சாவையும், அலெக்சாந்தரையும் தெரியாமல் இருப்பது—சரித்திரத்தின் குற்றமல்ல!

## 271. பேதங்கள் பலவகை

பேதங்கள் உருவத்தில் இல்லை. இதயத்தில் உண்டு. மனபேதம் உருவ பேதத்தைவிடக் கொடியது. பல்வேறு உருவில் இந்த மனபேதம் விசுவரூபம் எடுத்து ஆட்டிப் படைக்கும்.

## 272. எத்தனையோ சான்றுகள் உண்டு

அமைதியின் அடித்தளத்தில்தான் ஆர்ப்பாட்டமும், கலவரமும் அரும்புகிறது. இவற்றின் அந்திமத்தில்தான் அமைதியும் பிறக்கிறது. தரணியின் அதிர்வு — தென்றலின் சீற்றம் — கடலின் கொந்தளிப்பு — சான்று பகரப் பொருந்தும்.

## 273. மக்கள் மனதில் உருவானதே

உபசாரம் இல்லை நன்றி நவிலல்தான் இருக்கிறது பொக்கிஷதார் மறைந்தார். பொருளாளர் பவனி வருகிறார். நமஸ்காரம் மறைந்தது. வணக்கம் தான் எங்கும் நிறைந்திருக்கிறது. இந்த எழுத்து மாற்றத்திலிருந்து மக்களின் எண்ணத்தில் உருவானதே இந்த மாற்றங்கள்.

## 274. காலமா? கருத்தா?

காலத்துக்கேற்ற கருத்துக்களே தேவை! கருத்துக்களுக்கேற்ற காலம் அல்ல காலத்திற்கு ஒவ்வாத கருத்துக்களை ஒதுக்க வேண்டும். போக்க வேண்டும்.

## 275. ஒப்பிட்டுப் பாருங்கள்

கறையான்களிலிருந்து 'புற்றீசல்கள்' அவதாரம் எடுப்பதையும், மாமிசப்பிண்டத்திலிருந்து நெளியும்

புழு உருவெடுப்பதையும், கல்லிலிருந்து கடவுள் அவதாரம் எடுப்பதையும், ஒப்பிட்டுப் பார்க்கும் போது, முன்னது இயல்பு. பின்னது பிறழ்வது.

## 276. ஓவியனின் கைத்திறன்

கோயில்களுக்குள் இருக்கும் சாமிக்கு சக்தி உண்டோ இல்லையோ, கட்டடக் கலையின் சித்திர வேலைப்பாடு ஓவியனின் கைத்திறனைப் புகழ்பாடு கிறது.

## 277. ஆழமாகப் பதிந்துவிட்டது

ஆசாரத்தில் பூனூல் விசாரம், மூடக் கொள்கையை ஒட்டி பதிந்த ஆலவட்ட விழுதுகள் சல்லிவேர் முதல் ஆணிவேர் வரை ஆழமாகப் பற்றி விட்டது.

## 278. தலைவனின் சிம்மாசனக் கிரீடம்

தொண்டனின் வீரச் செங்குருதிக் கொப்புளமே ஒரு தலைவனின் சிம்மாசனக் கிரீடம்.

## 279. தமிழர் பண்பாட்டின் சிறப்பு

இயல், இசை, கூத்து ஆகிய முத்தமிழும் செந் தமிழர் பண்பாட்டின் நிலைக் கண்ணாடியாகும்.

## 280. பொலிவு மாறாத மெருகு

'கூத்து இலக்கியம்' முத்தமிழ் வாயிலாக வடிவம் காட்டுவதால் மட்டுமே அதன் தன்மையும் தகைமையும் பொலிவு மாறாது மெருகூட்டுகிறது.

## 281. எங்கும் உருவாகலாம்

தாழ்வுச் சிக்கல் என்பது ஒரு மனிதனை எவற்றையும் துணிந்து செய்யத் தூண்டும் பயங்கரவாதச் செயலாகும். இவற்றிற்கு அடிகோலி நிற்கும் முட்புதர்கள், பளிங்கு மண்டப வாசற்படியில் மட்டுமல்ல; குச்சு வீட்டின் சாக்கடையோரத்திலும் உருவாகலாம்.

## 282. தாவரத்தின் இயல்பு

கொம்பிலே மலர்கள் மலர்ந்தாலோ கிளை நெளியும். மலர் மகரந்தம் சேர்ந்தாலோ மலர் பிஞ்சாகிவிடும். பிஞ்சு காயாகி கனியாகி விட்டாலோ வளைந்த கிளை நாணம் மேலிட்டு தாழ்ந்தே விடும்.

## 283. அதில் அலாதி ஆர்வம்

தேன் கூட்டுக்கு கல்லெறியும் கரங்களின் துணிவும், குளவிக் கூட்டுக்குக் கல்லெறியும் கரங்களின் பளுவும் வேறுபட்டிருப்பதில்லை மாறாக, முன்னதில் துளிரசமும், பின்னதில் ரகளை ரசமும் பொதிந்து ததும்பும். இதய ஓட்டத்தின் நோக்கமே கரங்களின் ஏவலில் தரமறியாது எதையும் செய்யத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பதில் அலாதி ஆர்வம் போலும்!

## 284. கண்ணீருக்கு உள்ள ஆற்றல்

ஓசை எழுப்பாமல் அழுகின்ற ஊமை உள்ளங்கள் பல. அவற்றின் விம்மல்கள் விளம்பரம் ஆவதில்லை. கண்களிலிருந்து பீறிட்டுப் பாயும்கண்ணீர் காட்டாறாக சீறிட்டுப் பாய்ந்தோடும்போது மட்டும் துன்பத்தின் சுமைகளின் ஆழம் இதய ஓசையை நாதம் எழுப்புகிறது.

## 285. கருத்துக்கே முதல் இடம்

வண்ண ஒளியின் தீச்சுடர் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கலாம். காற்றோடு கலந்து நாட்டியப் பதுமையாய் சுழன்று வரும்போது-அங்கு கண்ணுக்குக் குளிர்ச்சி இருக்காது. கருத்துக்குத் தேன் சுளையாக இருக்காது.

## 286. அது தியாகம் இல்லையா?

'தியாகம்' 'தியாகம்' என்று அரசியலில், கலை, இலக்கியத்தில் புனைந்திருக்கும் ஏட்டின் எழிலார்ந்த திருப்பம் தேடித்தந்துள்ளன அத்தியாயங்கள் அநேகம்—தெருவோரத்தில் பிச்சை எடுக்கும் பிச்சைக்காரனின் வாழ்க்கையும் தியாகமாகத்தானே இருக்க வேண்டும்.

## 287. எல்லாமே தியாகம்தான்

எது உண்மையான தியாகம்—விட்டில் பூச்சி விளக்கொளியில் மயங்கி சுழன்று மடிவதும் தியாகம் தான். கூண்டுப் பறவை இறக்கை ஒடிந்து, குரல்வளை நசுக்கப்பட்டு மரணிப்பதும் தியாகம் தான். சிற்றெறும்பாய் சிறுத்தையின் காதில் நுழைந்து செத்து மடிவதும் உண்மையான தியாகம் தான்.

## 288. பழிக்கு அஞ்ச வேண்டும்

மக்கள் என்று சொல்லாமல், மகாஜனங்கள் என்று சொல்வதால் என்ன குற்றம் ஏற்பட்டு விட்டது என்று கேட்கிறார்கள்—குற்றம் ஏதும் வந்து விடவில்லை. தமிழர்கள் தமிழை மறந்துவிட்டனர் என்கின்ற பழியைப் பிற்காலம் நம்மீது சுமத்தும் அவ்வளவுதான்.

## 289. சமூக சேவையாளர்கள் எங்கே?

நாட்டின் நலிவகற்ற, அரசு மும்முனைப் போராட்டத்தை நடத்தும் காலகட்டத்தில், தானியக் களஞ்சியங்களில் அகவிலையையும் பதுக்கலையும் வணிகனும், பாவனையாளனும் உரமூட்டி வளர்த்திடத் துணியும் விந்தையைச் சட்டங்களால் மட்டும் சீராக்குவது என்பது கடினம். இருபாலாரும் ஏழை பங்காளர்களாக மாறவேண்டும். அதற்கான மனப் போக்குகளை, சமூக சேவையாளர்கள் போதிக்க வேண்டும்.

## 290. உதவ வேண்டும்

நமது நாட்டிலே கலைவளம் குன்றிவிட வில்லை கவிதா ஊற்றும் வற்றி விடவில்லை, பழமை புகைந்து போகவில்லை. இந்தக் கலைவளமும், கவிதா ஊற்றும் புலமைப் பெருக்கும், தூய்மையான எண்ணக் கருத்துகளைப் பக்குவமாகப் புகுத்த உதவ வேண்டுமே தவிர மேலிட மறைவிட வர்ணனைக்குக் கருவியாக அமையக் கூடாது.

## 291. பகுத்தறிவின் இலக்கணம்

நாம் எங்குச் செல்லுகிறோம் என்பதல்ல சிந்தனை. எல்லோரும் ஓரிடம் நோக்கியே செல்கிறோம். செல்லும் பாதைகள்தான் பல கோணங்களில் இருக்கின்றன. பேராறும், சிற்றாறும் ஒரு குறித்த எல்லைக்குள் சங்கமிப்பதைப் போன்று நாமும் கால் நடையாகவும் கட்டை வண்டியிலும், பேருந்துகளிலும் விமானமூலமாகவும் செல்கிறோமே இந்த ஏற்றத் தாழ்வுப் பயணத்தின் விளைவுகளை அனுமானிப்பதே பகுத்தறிவின் இலக்கணம்.

## 292. மடமையைப் போக்க வழி

எதிர்ப்புக்களைத் தாங்கிக்கொள்ளும் வலுவான நெஞ்சுறுதியைக் கொண்டு ஒரு மனிதனின் காழ்ப்பு உணர்ச்சியை குறைத்து மதிப்பீடு செய்யும் மடமையைப் போக்குவோம்.

## 293. கருங்காலிகளும் உண்டு

எங்கு போராட்டத்தின் துடிப்பான கோஷம் எழுப்பப்படுகின்றதோ, அங்கு எதிர்நீச்சல் போடும் கருங்காலிகளும் இருக்கத்தான் செய்வார்கள். எழுப்பப்படும் சுலோகத்தை முறியடிப்பதற்கென்று முளையிலேயே அரும்பி விடுவதில்லை. தேவைகளைப் பகிர்ந்து கொள்வதில் ததும்பி நிற்கும் திறனாற்றலின் வெளிப்பாட்டு உணர்வே இல்லை.

## 294. அவமானச் சின்னங்கள்

விலையை ஏற்றிடுவோர் விளைந்ததைப் பதுக்கிக் கொள்வோர் நாட்டை நாசமாக்கும் நடமாடும் நோய்கள், ஊழல், ஊதாரித்தனம், லஞ்சம் வாங்குதல் ஆகிய கேடுகளைச் செய்வோர் நாட்டின் அவமான சின்னங்கள். உற்பத்தித் துறைக்கு முட்டுக்கட்டையிடுவோர் உற்பத்திக்காகப் பாடுபடுவோரின் வயிற்றில் அடிப்போர் சமுதாயத்திற்கே விரோதிகள்.

## 295. இவை எல்லாம் ஏன்?

திருவாவடுதுறைத் தம்பிரானுக்குப் பத்து விரலிலும் மின்னும் வைர மோதிரம் ஏன்? கையில் கமண்டலம் ஏன்? காதில் குண்டலம் ஏன்? குண்டலத்தின் நடுவே தங்கம் ஜொலிப்பது ஏன்?நெஞ்சிலே

வஞ்சகம் ஏன்? பக்கத்திலே பாடும் குயில்கள் ஏன்? ஆடும் மயில்கள் ஏன்? இதுவா துறவறம்?

## 296. உண்மைத் துறவிகள் யார்?

''பசித்தால் புசி'' என்றுதானே துறவிகளுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது! பசித்தால் புசி என்றால் என்ன? காயேனும் செங்கனியேனும், கந்தமூல மேனும், உதிர் சருகேனும் பசிக்குத் துறவிகள் உட் கொள்ளலாம் என்றுதானே சொல்லப்பட்டிருக்கிறது மணிமுடி துறந்து அரசை உதறித்தள்ளி நடு நிசியிலே குழந்தையையும், ஆசைக்கினிய மனைவி யையும் பிரிந்து கபில வஸ்துவை விட்டு, புத்தர் துறவு கொண்டார் என்றால், அதிலே அர்த்தமிருக் கிறது. சமணர்கள் துறவு கொண்டார்கள் என்றால் அர்த்தமிருக்கிறது. ஆனால், மனித உருவிலே தோன்றி, மக்களை ஏய்த்து வாழுவதற்குத் துறவு பூண்டவர்களை நாம் எப்படி உண்மைத் துறவிக ளாக ஏற்க முடியும்?

## 297. ஆணவ பரம்பரை

மனித பரம்பரையிலே தோன்றி, மக்கள் என்பதையும் மறந்து, எந்தப் பரம்பரை என்று கேட்டால், நாங்கள் திருக்கயிலாய பரம்பரை என்று ஜடை முடிதரித்துக் கொண்டு, இந்த மடாதிபதிகள் ஆணவத்தோடு சொல்லக் கேட்டிருக்கிறோம்.

## 298. உதவி உண்டா?

ஏழைகள் வாழும் இடத்தருகே வந்த பொழுது, இந்தத் திருக்கயிலாய பரம்பரைகள் அங்கே சென்று ஏழைகளுக்கு ஏதாகிலும் உதவி செய்திருக் கிறார்களா! பிளேக் வந்த பொழுது, களஞ்சியத்திலே

இருந்த நெல்லை வாரி வழங்கியிருக்கிறார்களா? பாபி! பாபி! என்று உலகிலே சிலரைப் பார்த்து மடாதிபதிகள் கூறுகிறார்களே, அவர்கள் பாபி என்று சொல்லப்படுபவர்களுக்கு, ஏதாகிலும் உபதேசம் செய்திருக்கிறார்களா?

## 299. கொழுத்த மடாதிபதிகள்

கொழுத்துப் பழுத்துத் திரியும் மடாதிபதிகளுக்கு ஒரு மடம் ஏன்? கமண்டலமேன்? குண்டலமேன்? சேல்விழி மாதரேன்? அந்தத் தையலின் மையலிலே மயங்கித் திரிந்து, மது அருந்துவதேன்? தமிழ்நாட்டிலே துறவிகளின் இலட்சணம் எப்படியிருந்தது என்பதைப் பல ஆண்டுகளுக்கு முன்னே "சந்திரகாந்தா" மூலம் காட்டினார்களே!

## 300. அது அந்தக் காலம்

மடாதிபதிகளைப் பற்றிப் பேசினால் அந்தக் காலத்தில் தலையைச் சீவி விடுவதுகூட உண்டு. அப்படி இந்தக் காலத்தில் யாரும் செய்துவிட முடியாது. அப்படிச் செய்தாலும், ஆயிரம் தலைகள் பேசத் தயாரா யிருக்கின்றன!

## 301. தூண்கள் சரிந்தால்

பெரும்பான்மை பலம்தான் ஒரு அரசு கட்டிலின் தூண்கள். சிறுபான்மை படுக்கை விரிப்பாக மட்டுமே இருக்கும். படுக்கை விரிப்பை தூக்கி எறிந்து விட்டால், பாதிப்பு இருப்பதில்லை. தூண்களைப் பெயர்த்து எறிந்து விட்டால் நிலைமை என்ன ஆகும்?

## 302. காலராவை விட மோசம்

வகுப்புவாதம் காலராவைவிட வேகமாகப் பரவும் ஒரு தொற்று நோய். பிஞ்சு உள்ளங்களிலே இது பரவத் தொடங்கிவிட்டாலோ, எதிர்கால இன ஐக்கியத்தை, சீராக்குவது என்பது மிகக் கடினம். பொறுப்பற்ற சிலர் தூவிய இத்தகைய விஷவித்துக் களைப் பிடுங்கி யெறிந்து நிவாரணம் பெறமுடியாத ஒன்றுஎன உலகம் கண்டறிந்த பெரும் உண்மை.

## 303. நக்கீரனின் பூரிப்பு

நக்கீரன் தீட்சண்யத்தின் ஒய்யாரச் சுடரொளி யில் நெற்றிக்கண்ணை ஒப்பிட்டு, உவகை பூரித்து ஒளிர்ந்தான். தன் குற்ற வடுவைப் பெரிதாக்கி, பேரின்பம் கண்டான்.

## 304. அழகோவியம்

உத்திகள் உமிக்கொப்பாக இருந்தால், உதிரி கள் உருவாகும். படிந்திருக்கும் படிமத்தைக் கொண்டே புனைப்புகள் பரிசுத்தமும், தூய்மையும் ஒருங்கு சேர்ந்து அழகோவியமாக அமைந்து விடுகிறது.

## 305. பௌதிக மாற்றமா?

தேளின் கொடுக்கில் சுரந்து கிடக்கும் ஒரு வகைத் திராவகம் அதற்கு உயிர்ச்சத்தாம். பிற உயிர்களுக்கு, அது தீண்டிவிட்டாலோ நஞ்சாகி விடுகிறதே, இதைப் பௌதிக மாற்றம் என்பதா?

## 306. அலங்கார வார்த்தையா?

ஒய்யார மயிலாட்டம் என்கிறோமே. வெறும் வார்த்தை அலங்காரம் என்று நினைத்து விடாதீர்கள். இந்த ஒயிலாட்டத்தில்தான் அது கருக்கொள்வது. உடலிணைப்பு அற்ற தூய்மையான உறவால், கருத்தரிக்கும் பாங்கு எதுவாக இருக்க முடியும்?

## 307. சொல் அலங்காரம்

எழிலார் திருமேனி மெல்லிடையின் இறுக்கம்! ஏந்திழையின் இதழமுதத்து முத்துப் பல் வரிசையின் முத்தாரம். செந்தேன் அவள் அதரம் தோய்த்து, கொடியிடையை ஆர அரவணைத்துப் பெறும் இன்பத்துக்கோர் எல்லையுண்டோ? என்ப தெல்லாம் சொல்லலங்கார வர்ணிப்பில் மட்டுமே சுவை ததும்பும்.

## 308. தப்ப முடியாது

என் தம்பி தருகின்ற எழிலார் ஏடு, தேங்கிக் கிடக்கும் தடாகத்துத் தண்ணீரல்ல. விடுதலைக் கனல் பரப்பும் பெருக்காறு! செந்நெருப்பு! மூண்டிடும் தீக்காடு! தீயோர் இதிலிருந்து தப்பமுடியாது.

## 309. மதப்புரட்சி ஏது?

மதப் புரட்சி என்பது தெய்வ நிந்தனை யன்று! சிந்தனையில் தெளிவு, அறிவாற்றலின் பரிபக்கு வம், இவைகளின் வேளிப்பாடே மதப்புரட்சியின் அடித்தளம்.

## 310. தனித்தன்மை

அரசு அமைப்பது என்பது முதுகு சொறியவும், படிக்கல்லாகத் தேயவும், எச்சில் கனிக்காக ஏங்கிக் கிடப்பதையும் ஒக்கும். அரசோச்சுவது என்பது அதிகாரம் பெறுவது. முனைக்கல்லாக நிற்பது. தனித்துவத்தை நிலை நாட்டுவதற்கு ஒக்கும்.

## 311. எந்தப் படையும் வெல்லாது

இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?

## 312. சந்தனமும் சாக்கடையும்

சிலர் அந்தரங்கமான கோட்பாடுகளை வெளியே சொல்ல முடியாமல் வடிகால்கள் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இதில் சந்தனமும் இருக்கலாம். சாக்கடையும் இருக்கலாம்.

## 313. இருந்தே தீரும்

அறிவுக்கு ஒவ்வாத மூடக் கொள்கைகள், கண் மூடித்தனமான சிந்தாந்த மயக்கங்கள், பகுத்தறிவுக் கொவ்வாத சம்பிரதாயங்கள் இருக்கும். சுரண்டும் வர்க்கமும் சுண்டப்படுகின்ற வர்க்கமும் இருந்து கொண்டே இருக்கும்.

## 314. நிறத்திற் கேற்ற தன்மை

கருமை நிறம் ஒரு நாட்டின் இழிவைக் குறிக்கும். அறியாமையைக் காட்டும். சிவப்பு நிறம் அதை மாற்றும். புரட்சிச் சின்னம். இருளை நீக்கும் ஒளிப் பிழம்பாக உருவெடுக்கும்போது கருமை மறைந்து தனிச் சிவப்பாக, செந்நிறமாக உரு மாறும்.

## 315. இந்த நிலை ஏன்?

சுகயோகி சூழலையையும் சுக்காளையும் தவற விட்டுத் தத்தளிக்கிறான். அவன் தத்தளிப்பிற்கும், தத்தரிப்பிற்கும் பழக்கதோஷம்தான் அவனை இந் நிலைக்கு ஆளாக்கியது.

## 316. பாழாக்கி விடும்

யோகிக்கு புலனடக்கம்! ஞானிக்கு நாவடக்கம்! தேனீக்கு தித்திப்படக்கம்! பூவைக்கு நுண்கலையும் அடங்க வேண்டும். தவறின், இழிமரபென்னும் இலையான்கள் அகத்தையும் புறத்தையும் மொய்த்துப் பாழாக்கிவிடும்.

## 317. உயிர்த் துடிப்பானது

அடக்குமுறைக்கு எதிராகத் திரண்டெழுந்த சமுதாயத்தின் வரலாறு மட்டுமே உயிர்த்துடிப்பாக உள்ளது.

## 318. சீர்கேடுகள்

பொருந்தா மனத்தால் விளையும் சீர்கேடுகளே பாரிய குற்றங்களுக்கு அடித்தளமாக உள்ளது.

## 319. சீர்படுத்தும் அரண்

நாட்டுப் பற்றினையும், தேசிய நோக்கினையும் நெறி விளக்கக் கோட்பாட்டினையும், வலுப்படுத்தும் அரசு யாப்புக்கள் சமுதாயத்தைச் சீர்படுத்தும் அரணாகும்.

## 320. ஆத்திகர்கள் திருந்த வேண்டும்

நாங்கள் எடுத்துக் காட்டி விளக்குவது ஆபாசம் என்று கூறிக் கண்டிக்கும் ஆண்டவன் திருவிளை

யாடல்களும் எங்கள் கற்பனைகள் அல்லவே அல்ல! அவை அத்தனையும் பக்தர்கள் பக்தியோடு படித்துப் பாராயணம் செய்து வரும் புராணங்களில் காணப்படுபவைதான். ஆத்திகநண்பர்கள்உணர்ந்து திருந்த வேண்டுகிறேன்.

## 321. இப்படிக் கூறுவதை ஏற்க முடியுமா?

காவிய ரசம், நடையழகு, இவற்றுடன் நின்று விடாது; கருத்தழகையும் கவனிக்க வேண்டும் என்று கூறாதே, காலத்திற்கேற்ற கருத்தா? களங்கமற்ற கருத்தா? என்று கருத்தூன்றிக் கவனிக்காதே! கேள்விகள் கேட்காதே! கண்மூடிப் படி, பாராயணம் செய், பாராட்டு, பாடமாகக் கொள், அதன்வழி நட, என்று கூறுவதை எப்படி ஏற்க முடியும்?

## 322. பயமுறுத்துகின்றனர்

முற்காலப் புலவர்கள் என்ன, சாமான்யமான வர்களா? அகத்தியன் பரம்பரையில் வந்தவர்கள் அறியாமலா கூறியிருப்பர் என்று ஆர்ப்பரிப்பதும், வசிஷ்டர் வாக்கு வேதவாக்கு என்று போதனை செய்வதும், நம்பினவருக்குத்தான் மோட்சம், நம்பாதவருக்கெல்லாம் நரகம் என்று பயமுறுத்தியும் பண்டைய ஏடுகளையே திரும்பத்திரும்ப வலியுறுத்தி அவற்றையே கற்று, தமிழர்கள் இலக்கியத் துறையிலே முன்னேறாது, காலத்திற்கேற்ற கருத்தமைந்த இலக்கியங்களை, புதுப்புது இலக்கியங்களை உண்டாக்காது. பழமையில் மூழ்கித் தவிக்கின்றனர்.

## 323. நாகரிக வாழ்வு வேண்டும்

மனிதன், தான் வாழவேண்டும்; தன்னைப் போலவே, பிறரும் வாழவேண்டும்; மனிதர் எல்லோரும் மனிதராகவே வாழ்ந்திட வேண்டும்

என்ற மனப்பண்பைக் கொண்டவனாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான், மனித இனம் ஒன்று பட்டு; நாகரிக வாழ்வு வாழ முடியும்.

## 324. வேதாந்தம் பேசி வீணாக்காதீர்

நாட்டிலே, பரவிக்கிடக்கும் நானாவித கருத்துக் களையும் ஊன்றிக் கவனித்துப் பாருங்கள். மக்கள், தமது இல்லாமைக்கும் இழி நிலைக்கும் 'விதி' 'கர்மவினை', 'ஆண்டவன் விட்ட வழி', என்று வேதாந்தம் பேசி, 'ஏதோ இருப்பதைக் கொண்டு, திருப்தியடைய வேண்டும்' என்ற அளவிலே இருப்ப தைக் காணமுடியும்.

## 325. தடைக்கல்கள் எவை?

தமிழர், தாழ்ந்ததற்குக் காரணம், தமிழகத்தில் தமிழரது எண்ணங்களில் ஏற்பட்ட பக்தி, புராணம், மோட்சம், நரகம், மேலுலக வாழ்வு, கர்மம், வினை, விதி என்பன போன்ற கருத்துக்கள் மனிதனது சிந்தனைக்குத் தடை செய்திடும் கருத்துக்கள் புகுந்து ஆதிக்கம் செலுத்தினதுதான் என்பது நன்கு விளங்கும்.

## 326. தேவையற்ற கருத்துக்கள்

இடைக் காலத்தில் ஏற்பட்ட, தமிழரைத் தாழ்த்திய, தமிழருக்கு தேவையற்ற, கருத்துக்கள் தான் தமிழ் இலக்கியத்தில் ஏராளமாகக் காணப் பட்டு, அவையே பக்திப் பாட்டாக, புண்ணிய புராண ஏடுகளாக, வேத ஆகமங்களாக, ஆராய்ச்சி நூல் களாக, நீதிகளாக, மார்க்கண்டேய புராணமாக, மதக்கிரத்தங்களாக, வசிஷ்டர் வாக்குகளாக பகவான் திருவாய் மலர்ந்தருளிய மொழிகளாக,

முனிபுங்கவரும் தவசிரேஷ்டர்களும் கேட்டு, வழி வழியாகத் தமது சீடகோடிகளுக்குச் சொல்லப்பட்ட போதனைகளாக நாட்டிலே ஏடுகளாக நடமாடு கின்றன.

## 327. விதியை நம்பாதே

விதியை நம்பி, மதியைப் பறிகொடுத்து, பகுத்தறிவற்ற மனிதர்களாய் வாழ்வது மிக மிகக் கேடு, தீங்கு!

## 328. தன்னம்பிக்கை கொள்க

தமிழரைத் தட்டியெழுப்பும் தன்மான இலக்கியங்கள் தேவை. தன்னம்பிக்கையூட்டும் ஏடுகளே தேவை! மதியைப் பெருக்கி, விதியைத் தொலைத்திடும் விளக்க நூல்கள் ஏராளமாகத் தேவை.

## 329. குலத்துக்கு ஒரு நீதி கூடாது

மகேசுவரன் புகழ்பாடி, மதத்தை நம்பி, மதிகெட்ட மனிதனாக வாழ விடும் மத இலக்கியங்கள் தேவையே இல்லை. குலத்துக்கு ஒரு நீதி வகுத்து, மனிதனது சுயமரியாதையைப் போக்கி விடும் புராணங்கள், இலக்கிய வரிசையிலே, இருத்தல் கூடாது.

## 330. சிந்தித்து முடிவு கட்டுங்கள்

குலத்துக்கு ஒரு நீதியா? அதுவும் ஆண்டவன் பேரிலா? என்று யாரும் ஆத்திரமோ அன்றி ஆச்சரியமோ கொண்டிடவேண்டாம். கற்பனையல்ல, நான் கட்டிவிட்ட கட்டுக் கதையுமல்ல; புராணங்கள், திருவிளையாடல்கள் என்று போற்றப்

படும் புண்ணிய ஏடுகளில் கூறப்படுவதைத்தான், நான் எடுத்து காட்டிக் கேட்கிறேன். இவை தேவை தானா என்று; கொஞ்சம் நிதானத்தோடு நான் கூறுவதைக் கேட்டுச் சென்று புராணங்களையும் புரட்டிப் பார்த்துச் சரியா, தவறா என்று சிந்தித்துப் பின் முடிவு கட்டுங்கள்!

## 331. சமுதாய வளர்ச்சி தேவை

தனி மனிதனது தரம் மட்டும், பண்புமட்டும் வளர்ந்தால் போதுமா? உயர்ந்தால் முடிந்து விட்டதா? சமுதாய வளர்ச்சி, சமுதாயச் சிறப்பு தோன்றிட முடியுமா? தனி மனிதனது சிறப்பினால், உயர்வினால், பண்பட்ட தன்மையால் மட்டுமே!

## 332. சமுதாயம் சீர்பட்டதா?

தாயுமானார் 'தரம்' குறைந்தவரா? பட்டினத்தார் 'பண்பு' படைத்தவரல்லவா? இராமலிங்க அடிகள் இருந்த நிலை, தரமும் பண்பும் படைத்தது தானே! இராமகிருஷ்ணர், விவேகானந்தர், உத்தமர் காந்தியார் போன்றோருக்கு, தனி மனிதன் என்ற அளவிலே தரமும் பண்பும் இல்லாமலா போய்விட்டது? இருந்ததே! ஆனால்—? சமுதாயம் சீர்பட்டதா? இல்லையே! ஏன்? எதனால்?

## 333. என்ன பயன் கண்டோம்?

தனி மனிதரில் தரமும் பண்பும் மிக்க முனிபுங்கவர், தவசிரேஷ்டர்கள், அவதார புருடர்கள், அருளாளர்கள், அறநெறி உணர்ந்தோர், அன்பு வழி நடந்தோர், வாழ்ந்தோர் பலரைக் கண்டோம். கேட்டோம், பார்த்தோம், படித்தோம், பழகினோம்,

போற்றினோம், புகழ்ந்தோம் — அத்துடன் முடிந்தது.

## 334. தரமானவர்கள் எத்தனை பேர்?

தனிமனிதரில் எத்தனை பேர் தரமும் பண்பும் படைத்தவர்களைக் கண்டோம், இன்று வரை,

## 335. பல்கலைக் கழகத்திலே காண்க!

இதுவும் வேண்டாம் என்றால், அப்படியே அங்குள்ள பல்கலைக் கழகத்துக்குள் சென்று டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்களைப் பார்த்து, 'தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளின் அறைக்கு என்ன பெயரிட்டிருக்கிறீர்கள்' என்று கேளுங்கள். அதற்கு அவர், 'Government of Dravidian Language' என்று பதிலளிப்பார்.

## 336. காங்கிரஸ்காரர்கள் படிக்க வேண்டும்

'அகில இந்திய முடிசூடா மன்னர்' என்று புகழப்படுகிறாரே பண்டித ஜவகர்லால் நேரு அவர் சிறையிலிருந்தபோது, தமது மகள் இந்திராவுக்கு எழுதிய கடிதத்தில் விந்திய மலைக்குத் தெற்கே இருப்பதைத் 'திராவிடம்' என்றும் வடக்கே இருப்பதை 'ஆரியாவர்த்தம்' என்றும் குறிப்பிட்டிருக்கிறார். மேலும் அவர் அந்தக் கடிதத்தில் தெற்கே இருப்பவர்கள் 'திராவிடர்' என்றும் வடக்கே இருப்பவர்கள் ஆரியர் என்றும் இந்த இரு சாராரும் கலந்திருந்த போதிலும் 100-க்கு 90 பேர் திராவிடக் கலாசாரத்தையே இப்போது பின்பற்றி வருகிறார்கள் என்றும் எழுதியிருக்கிறார்கள். இந்தப் புத்தகம் காங்கிரஸ் படிப்பகங்களில் இருக்குமானால் படிக்கும்

பழக்கமுள்ள காங்கிரஸ்காரர்கள் வாங்கிப் படித்துப் பாருங்கள்.

## 337. ஆரிய மேதாவிகளின் அறிவீனம்

இசை, இன்பத்தைத் தரவேண்டுமானால், அதைக் கேட்போரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளவேண்டுமானால், யார் முன்னால் பாடல் பாடப்படுகிறதோ, அதை அவர்கள் புரிந்து கொள்ளக்கூடியதான மொழியில் இருக்க வேண்டும். இது அறிவுத் துறையில் அரிச்சுவடி! இதனை 'ஆரிய மேதாவிகள்' மறுக்கின்றனர்! என்ன அறிவீனம்!

## 338. புரிவதால் குழைவு

நீக்ரோவின் நடனத்தைக் காண்கிறோம், கண்டுவிட்டு நகைக்கிறோம். ஆனால், நீக்ரோவுக்கு நெஞ்சு இழைகிறது நீக்ரோ நடனத்தைக் கண்டு! ஏன் அதனைப் புரிந்து கொள்கிறான்

## 339. பார்ப்பனர்களின் எதிர்ப்பு

இசையில் ஆரியம் புகுந்து இழுக்கு செய்வதைத் தடுக்கத் தமிழ்நாடு, தமிழ்ப்பாடல் கேட்பதைத் தர, கொடைவள்ளல் ராஜா சர் அவர்கள் செய்த இந்தப் பேருதவிக்குப் பார்ப்பனர்கள் எதிர்ப்பு காட்டு கிறார்கள் தமிழரின் எண்ணம் ஈடேறச் செய்வது கண்டு சீறுகின்றனர். தெலுங்குக் கீர்த்தனங்களுக் கும், இந்துஸ்தானி துக்கடாக்களுக்கும் வக்காலத்து வாங்கிக்கொண்டு சீறுகின்றனர் தமிழர் மறுமலர்ச்சி கண்டு ஆத்திரமடைந்து ஆர்ப்பரிக்கின்றனர்.

## 340. இன்ப உணர்ச்சி

கடலைக் கண்டால் ஒரு பாடல்; கரியைக் கண்டால் ஒரு பாடல்; தளிரை கண்டு ஒரு பாடல்; தனது காதலியைக் கண்டு ஒரு பாடல் எனத் தமிழர் தமது இன்ப உணர்ச்சியை இசை வடிவில் எத்துணையோ சிறப்புடன் வெளிப்படுத்தி வாழ்ந்தனர். இன்று தியாகராயர் கிருதிகளைவிட வேறு இல்லை என்று அவர்கள் முன்னால் கூறப்படுகிறது.

## 341. ஆவன செய்தே தீர வேண்டும்

சூழ்நிலை செய்திடும் மனநிலைகளை, மாற்றங்களை, ஆக்கங்களை, அழிவுகளை, நன்மை தீமைகளைக் காண வேண்டும்— கண்டு சூழ்நிலை சரிவர, அமைய வேண்டியதின் அவசியத்தை அவசரத்தை உணர்ந்தாக வேண்டும்— உணர்ந்து ஆவன செய்தே தீரவேண்டும்.

## 342. மிருக நிலையே!

விடுவிக்க முடியாத வாழ்வுச் சிக்கல்களும், ஒன்றுக்கொன்று முரண்பட்ட கொள்கைகளும், மூட நம்பிக்கைகளும், சுய சிந்தனையற்ற, சலிப்பான சத்தற்ற வாழ்க்கை முறையுமேதான் இன்றைய வாழ்வை — மனித வாழ்வை — மிருக நிலைக்கே மீண்டும் கொண்டு செல்லுகின்றன!

## 343. சமத்துவமும் சன்மார்க்கமும்

மக்களிடையே மத மூட நம்பிக்கைகளைப் போக்கி சாதி, சமய பேதங்களை யகற்றி சமத்துவத்தையும், சன்மார்க்கத்தையும் ஏற்படுத்தி, அஞ்ஞானத்தை நீக்கி விஞ்ஞான உணர்வை ஊட்டி, தன்னம்பிக்கையையும், தளராத உழைப்பையும், ஊக்கத்தையும் உண்டாக்கித் தீரவேண்டும்.

## 344. வெற்றி கிடைப்பது உறுதி

ஆரம்பத்திலே ஏற்படும் எதிர்ப்பைக் கண்டு மருள வேண்டாம். தடைகள், தண்டனைகள், எதையும் பொருட்படுத்திட வேண்டாம். துணிவுடன் காரிய மாற்றுங்கள். வெற்றி நிச்சயம் கிடைத்தே தீரும் என்பது உறுதி, மிக மிக உறுதி.

## 345. வேதியன் வெங்கண்ணா

வஞ்சக வலை வீசி தம் வாழ்வை வளப்படுத்திக் கொண்ட வைதீக வெங்கண்ணாவின் வரலாற்றை ஏட்டிலே படம் பிடித்துக் காட்டுங்கள் தன்மானத்துடன் தன்நிகரற்று விளங்கிய தஞ்சைப் பேரரசு வேதியன் வெங்கண்ணா வழி சென்றதால், வீழ்ந்த பரிதாபத்தை — சூழ்நிலையை நாடகமாக நடித்துக் காட்டுங்கள். ஏன் செய்யக்கூடாது இவைகளையெல்லாம்?

## 346. 'தூர நில்' என்று ஏன் சொல்லக்கூடாது

5000 மைல்களுக்கு அப்பால் உள்ள வெள்ளையனை, தன் சாம்ராஜ்யத்தில் சூரியனே மறைவதில்லை என்று அகந்தை கொள்ளும் வெள்ளையனைத் 'தூர நில்' என்று கூற இந்தியரின் மனம் பண்பட்டதென்றால், தர்ப்பையை வைத்துக் கொண்டு, அதிலும் காய்ந்த தர்ப்பையை வைத்துக் கொண்டு, அதிலும் பஞ்ச கச்சத்தில் மறைத்து வைத்துக் கொண்டு வரும்படி கிடைக்கும் நேரங்களில் தவிர மற்றைய நேரங்களில் வெள்ளையனை வெளியே போகச் சொல்லும் ஆரியக் கூட்டத்தை நாம் ஏன் ''தூர நில்'' என்று சொல்லக் கூடாது.

## 347. காலத்திற்கேற்ற தீர்ப்பு

தீர்ப்பு என்றால் பலவிதம் உண்டு. ஆண்டவன் அடியார்க்கு அளிக்கும் தீர்ப்பு ஒரு விதம்; அரசன் குடிகளுக்கு அளிக்கும் தீர்ப்பு மற்றொரு விதம்; சட்டசபை தீர்ப்பு ஒரு தன்மையது. வலியோர் எளியோருக்கும், முதலாளிகள் தொழிலாளர் களுக்கும் தீர்ப்பு பிறிதொரு தன்மையது. இவை யாவும் நல்ல தீர்ப்பு என்றே அவரவர் நவிலுவர். ஆனால் தீர்ப்பு, காலத்திற்குத் தக்கவாறும் நிலை மைக்குத் தக்கவாறும் மாறும், மாறித்தான் தீரும், மாறித்தான் தீர வேண்டும். ஒரு காலத்தில் நல்ல தீர்ப்பாகப் பிறிதொரு காலத்திலே நல்ல தீர்ப்பு அல்ல என்று எள்ளி நகையாடப்படும்.

## 348. ஆராயும் அறிவு வேண்டும்

எத்தகைய கருத்துக்கும் நீங்கள் மனத்திலே இடம் தருவதோடு மட்டும் நின்றுவிடக் கூடாது. மாணவ மணிகளாகிய உங்களுக்கு ஆராயும் அறிவு வேண்டும். நீங்கள் அனைவரும் புத்துலகச் சிற்பி களாக வேண்டும். உங்களிடம் தீரமும் திறமும் இருந்தால் மட்டும் போதாது. இத்துடன் அறிவு, ஆராய்ச்சிகளும் தேவை. இதற்கான பண்பும் பயிற்சியும் மிக மிகத் தேவை. அறிவுத் தெளிவோடு ஆராய்ந்து இது சரி, இது தவறு என்று முடிவுகட்டும் மனப்பான்மை உங்களுக்கு வேண்டும். இதோடு திட்டவட்டமான கொள்கையும், பெருநோக்கும் உங்களுக்கு இருக்க வேண்டும்.

## 349. கெடுக்காது உயர்த்தும்

பகுத்தறிவுப் பிரச்சாரத்தைப் பரவவிட்டால், மாணவர்கள் கெட்டுவிடுவார்கள் என்று ஆசிரியர்கள் எண்ணினால், தாங்களே கொஞ்சம் தவறு செய்வ

தாகத்தான் ஆகும். பகுத்தறிவுப் பிரச்சாரம் மாணவர்களைக் கெடுப்பதற்குப் பதில், உயர்த்தும்; அவர்கள் மனப்பண்மை விரிவாக்கும். அவர்களை நற்கருத்துடையவர்களாக்கும். இதை அறிந்து கொள்ள ஆற்றல் இல்லாத ஆசிரியர்கள்தான் ''மாணவர்கள் கெட்டு விடுவார்கள்'' என்று கூறுவார்கள். எவரும்முற்றும் உணர்ந்தவர்கள் இல்லை. ஆசிரியர்களே பகுத்தறிவு கொண்டு பல விஷயங்களை ஆராய்ந்து தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில்தான் இருக்கிறார்கள்.

## 350. எதிலும் சந்தேகமா?

சிலருக்கு எதற்கெடுத்தாலும் சந்தேகம், சிலருக்குச்சந்தேகிப்பதே தவறானது என்றதவறான எண்ணம். சிலர் கண்களுக்குச் சந்தேகிப்பதே குற்றமாகத் தென்படுகிறது. அனைவரும் குற்றாளிக் கூண்டிலே நிற்கிறோம். சான்றாக ஒன்றிரண்டு சொல்லுகிறேன். சிலருக்கு நெற்றியிலே சிறிதாகக் குங்குமப் பொட்டு வைப்பது நல்லதா? அல்லது பெரிதாகக் குங்குமப் பொட்டு வைப்பது நல்லதா? என்று சந்தேகம் எழுகிறது.

## 351. பட்டை நாமம் போடுவார்

காஞ்சிபுரத்தில் அண்ணங்கராச்சாரியாரைப் பலர் நன்கு அறிவர். அவரிடம் ஆஸ்திகர்களுக்குப் பெருமதிப்பு உண்டு. அவரைக் கேட்டால், நாமம் பற்றிய விளக்கத்தை நன்கு உரைப்பார். பட்டை நாமமாகப் போடுவார். ஏனென்றால், தூரத்திலிருப்பர்களுக்கு நாமம் போட்டிருப்பது தென்கலையா? வடகலையா? என்பது நன்கு தெரிய வேண்டுமாம்.

## 352. ஆளுக்கு ஏற்ற பதில்

விபூதி அணியும் பழக்கம் உங்கள் நாட்டில் இன்னும் இருந்து வருகிறதா? என்று ஐரோப்பாவிலே கேட்டால், சர்.சி.பி. இராமசாமி ஐயர் சொல்லுவார். ''எங்கள் நாட்டிலே விபூதி அணிவது குறைந்திருக்கிறது'' என்று. இங்கே மதப்பற்று உள்ளவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்டால், இங்கு மதப்பற்று இன்னும் குறையவில்லை! விபூதி அணியும் வழக்கம் இருந்து வருகிறது என்பார்.

## 353. காலத்திற்கு ஏற்ற தீர்ப்பு

நம் நாட்டிலே பசுவின் கன்றைக் கொன்ற மகனை தேர்க்காலில் வைத்து மடித்தான் மனுநீதி கண்ட சோழன். இது அவனுக்கு, அவனது கருத்துக்கு அக்கால நிலைமைக்கு ஏற்றபடி நல்ல தீர்ப்பு. ஆனால், அவ்விதம் செய்ய, இக்காலத் தந்தையர்கள், தாய்மார்கள், சகோதர சகோதரிகள் ஒருப்படுவார்களா?

## 354. பகுத்தறிவை வளர்த்தவன்

கிரேக்க நாட்டிலே படுத்தறிவாளன் சாக்கரட்டீஸ், நாட்டிலே பகுத்தறிவை வளர்த்தான்; நாட்டின் சாதாரண மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் அழகு, சத்தியம், ஆண்டவன் முதலியவைகளைப் பற்றி, ஒருவித உணர்ச்சியை எழுப்பி, உண்மையை உள்ளபடி உணர ஊக்கினான் ஆனால், அக்கால உலகம் அவனுக்கு அளித்த தீர்ப்பு, அவனைச் சிறையிலே அடைத்துச் சிந்தனையைச் சிதைக்க முயன்றது. நஞ்சை நாவால் சுவைக்க வைத்து நமனுலகுக்கு அனுப்பியது.

## 355. நல்ல தீர்ப்பு எது?

சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் தீர்ப்பு எதுவானாலும், அதுதான் நல்ல தீர்ப்பு. நல்ல தீர்ப்பு நல்லவர்கள் செய்யும் தீர்ப்பாக என்றும் இருக்காது. நல்லவர்கள் தீர்ப்பு என்றும் இரக்கமுடையதாகவே இருக்கும்.

## 356 தீண்டாதார்களுக்குக் கொடுமை

நம் நாட்டுச் சமுதாயம் சாதி வேற்றுமையினாலும், செல்லரித்துக் கிடக்கிறது. மேலும், செல்லரித்துக் கொண்டே வருகிறது. தீண்டாதார் என்போரைச் சகல துறைகளிலும் சாதியின் பேரால் என்றென்றும் தீண்டாதாராக்கியுள்ளோம். அடிமைப்படுத்தியுள்ளோம். இது நல்ல தீர்ப்பா?

## 357. நீக்ரோகளுக்கு உள்ள உரிமை

அமெரிக்காவிலே நீக்ரோ இயற்கையிலே அழகற்று அமைக்கப்பட்டான் அதை மாற்ற முடியாது. ஆனால், நம்நாட்டுச் சகோதர் யாவரும் நம்மைப் போன்றவர்களே என்பதை எவராலும் மறுக்க முடியுமா? அமெரிக்காவிலே நீக்ரோவரோடு உண்ணல், உறவாடல் உண்டு; கலப்பு மணம் உண்டு. கல்விக்கலை உண்டு ஆனால் இங்கே?

## 358. இங்கே உள்ளவர்களின் நிலைமை

நம் நாட்டுத் தலைவர்கள் ஆப்பிரிக்காலே, ஆப்பிரிக்கா இடத்திலே வாழும் கடல் கடந்த கருப்பர் உரிமைக்காகப் போராடுவர் ஆனால், இந்த நாட்டிலே பிறந்து இந்த நாட்டிலே உழைத்து இனப்பற்று, உணவு உடை உறைவிடமற்று வறுமையால் வாடி நலிந்து மெலிந்து நசித்து,

இந்த நாட்டிலேயே என்றும் தீண்டாதவனாகவே மதிக்கும் தோழர்களைப் பற்றிக் கவனித்தது உண்டா?

### 359. அழுத்தம் திருத்தமாக கூறுகிறோம்

நாங்கள் ஒன்றும் எங்களை சகலகலா வல்லவர்கள் என்றோ, பண்டிதர்கள் என்றோ பறைசாற்றிக் கொள்ளவில்லை. அறிவுக்கு அறம் என்று பட்டதை அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறோம் அல்லாததை அடாதது என்று அறிவுறுத்துகிறோம்.

### 360. நாள்தோறும் பாடும் பாடல்

'திராவிட உத்கல வங்கா' என்று இரவீந்திர நாத் தாகூர் பாடிய பாடலைப் பாடித்தான் கொடியேற்ற வேண்டும் என்று அரசாங்க விதி இருக்கிறது. அதன்படி ஒவ்வொரு விழா நிகழ்ச்சியிலும் இந்தப் பாடலைப் பாடுகிறார்கள். இத்தனை ஆண்டுக் காலம் இந்தப் பாடலைப் பாடியும் திராவிட நாடு எங்கே இருக்கிறது என்று கேட்கிறார்கள். இந்தப் பாடலை நாள்தோறும் பாடுபவர்கள் அதிகமாகச் சம்பளம் வாங்காத பள்ளி ஆசிரியர்களும், பள்ளிப் பிள்ளைகளும்தான்.

### 361. எந்த மொழி?

'ஜன கண மன' என்னும் இந்தப் பாடல், வங்க மொழி என்பதே பலருக்குத் தெரியாது.

### 362. தெரியாமலா பாடினார்?

வங்கத்தில் பிறந்து, உலகம் மதிக்கத்தக்க மேதையாக விளங்கிய இரவீந்திரநாத் தாகூர் அறிவில்லாமல் இப்படிப் பாடவில்லை. ஒவ்வொரு

நாடாகப் பிரித்துப் பாடினார். சிந்து நதி பாயும் நாட்டைச் சிந்து என்றும், கங்கை நதி பாயும் நாட்டைக் கங்கா என்றும், யமுனை நதிபாயும் நாட்டை யமுனா என்றும், தமது தாயகத்தை வங்கம் என்றும், உ. பி., பீகார், ஒரிசா முதலிய மாநிலங்கள் உள்ள பகுதியை உத்கல என்றும் குறிப்பிட்டுப் பாடினார். ஆனால், தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம், கன்னடம் என்று பாடவில்லை. இந்த நான்கு பகுதிகளையும் சேர்த்து திராவிடம் என்றுதான் பாடினார். ஏன் இப்படிச் சொன்னார்? விவரம் தெரியாததால் சொன்னாரா?

## 363. திராவிடச் சிற்பக்கலை

'தாகூரின் கல்லறைக்கு எங்கே போவது? அதற்கு எங்களுக்கு நேரமில்லை' என்று சொல்லு வீர்களேயானால் பத்து ரூபாய் செலவு செய்யக் கூடியவர்களுக்கு நான் இன்னொரு யோசனை கூறு கிறேன். ஞாயிற்றுக் கிழமைகளில் மாமல்லபுரத் துக்கு அரசாங்கம் பஸ் விடுகிறது. அதில் ஒரு நாளைக்கு ஏறிப்போய்ப் பாருங்கள். மாமல்லபுரச் சிற்பங்களுக்கு அரசாங்கமே விளக்கம் தந்திருக் கிறது. அந்த விளக்கங்களில் எல்லாம் 'திராவிடக் கலாச்சாரம்' என்றும், **(Dravidian Culture)** 'திராவிடச் சிற்பக்கலை' **(Dravidian architecture)** என்றும் தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## 364. திராவிடக் கலாநிதி

'அவ்வளவு தொலைவு போக முடியாதே' என்றால் இன்னொரு யோசனை கூறுகிறேன். 'திராவிடம்' கிடையாது என்பவர்களே கல்லிலே 'திராவிடம்' என்று பொறித்து வைத்திருப்பதைக் காணலாம். திருவல்லிக்கேணிக் கடற்கரைக்குச்

செல்லுங்கள் 'பிரஸிடென்ஸி கல்லூரி எதிரில் டாக்டர் உ. வே. சாமிநாத (ஐயர்) சிலை இருக்கிறது அதைப் பாருங்கள்— எங்கே பெரியார் கோபித்துக்கொள்ளப் போகிறாரோ என்ற பயம் உங்களுக்கு வேண்டாம். ஏனென்றால், செத்துப் போன 'ஐயர்'களிடத்தில் பெரியாருக்குக் கோபம் கிடையாது. அந்தச் சிலைக்கு அடியில் 'திராவிடக் கலாநிதி' என்று கல்வெட்டில் பொறித்திருக்கிறார்கள்.

## 365. விரோதிகள் யார்?

தமிழர்கள் தமிழ்ப் பாடல்கள் வேண்டுமென்று கேட்பது பிற மொழியின்மீது வெறுப்பாகுமா? தமிழில் நல்ல பாடல்கள் இயற்ற முற்படுவது பிற மொழிக்குச் செய்யும் கெடுதியாகுமா? தமிழ்க் கலையை வளர்ப்பதற்குத் தமிழர்களும் தமிழன்பர்களும் செய்யும் முயற்சிக்குக் கூடவா தடை விளைவிக்க வேண்டும்? தமிழ்க்கலை வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுகிறவர்களை, தமிழ்ப் பகைவர்கள், தமிழ்க்கலை விரோதிகள், தமிழரின் எதிரிகள்' என்று கூறத் தொடங்கினால், அதை இல்லை என்று கூற முடியுமா?

## 366. இது குற்றமா?

முஸ்லீம்கள் தங்கள் கலைகளைக் காப்பாற்ற வேண்டும் என்று கூறவில்லையா? அவைகளின் தனித்தன்மையை அழியாமற் காப்பாற்ற வேண்டும் என்பதையும் ஒரு காரணமாகக் காட்டித்தானே அரசியலிலும் பாதுகாப்புக் கேட்கின்றனர். அவர்கள் தங்கள் கலைகளையும், அவற்றின் கருத்துக்களையும் காப்பாற்ற முயல்வதை, யாரேனும் குற்றமென்று கூறமுடியுமா? தடுக்க முடியுமா?

தமிழ்க் கலை வளர்ச்சிக்கு மாத்திரம் ஏன் முட்டுக் கட்டை போட வேண்டும்? ஏன் வகுப்பு வாதம் கற்பிக்க வேண்டும்?

### 367. வேறு எங்கும் காண முடியாது

தமிழ் நாட்டைப் போல் வேறு எந்த நாட்டின் மொழியல்லாத வேறு மொழியில் சங்கீதம் பாடுவதைக் கேட்க முடியாது, ஒவ்வொரு நாட்டினரும் தங்கள் தாய்மொழியிலேயே எல்லாக் கலைகளையும் புதிதாக ஆக்கி வருகின்றனர். தமிழரைப் போலத் தாய் மொழிக்கலை உணர்ச்சியற்றவர்களை எந்த நாட்டிலும் காணமுடியாது.

### 368. தமிழன் ஏங்குகிறான்

தமிழர் இசையை வளர்த்தது போல், வேறு இனத்தினர் வளர்க்கவுமில்லை; தமிழர் இசையை இழந்தது போல் வேறு யாரும் இழக்கவுமில்லை. தமிழனின் இன்றைய நிலை, இழந்த இன்பத்தைப் பற்றி ஏங்குவதாகவே இருக்கிறது.

### 369. கலங்காதீர்

வழிதவறி அலைந்தவன், நேர்வழி தெரிந்து நடக்க ஆரம்பிக்கும்போது, செந்நாய் சீறினாலும், சிறுத்தை உறுமினாலும், சிந்தை கலங்கத் தேவையில்லை. நமது பாதையை நாம்விட்டு அகலோம் என்ற உறுதி கொள்ள வேண்டும். மனம் இருக்க மார்க்கம் இல்லாது போகுமா?

### 370. கேட்கச் சொல்லுவது எது?

தமிழரின் மறுமலர்ச்சியே, 'தமிழில் ஏன் பிற மொழி கலக்க வேண்டும்' என்று கேட்கச் சொல்லிற்று.

## 371. கிளர்ச்சி ஏன்?

தமிழரின் மறுமலர்ச்சியே, தமிழகத்திலே 'இந்தி கட்டாயபாடமா?' என்று கிளர்ச்சி நடத்தச் சொல்லிற்று.

## 372. இக்காலத் தேவை

இலக்கியம் என்பது என்ன? இலக்கியம், மனதிற்கு நெகிழ்வு தருவது; நெகிழ்வினால் உண்டாவது எண்ணங்கள்; எண்ணங்களில் ஏற்படுவது எழுச்சி. அரசியல் அறிவோடு இயங்கச் செய்யும் இலக்கியந்தான் இக்காலற்திற்குத் தேவை. நம் நாட்டு இலக்கியங்களில் பல அப்படியில்லை.

## 373. வீர உணர்ச்சி தேவை

இலக்கியங்களில் உள்ளவற்றைப் படித்தால், வீரம் விளைய வேண்டும். இன்றைய கிரேக்கநாட்டு மக்கள் அலெக்சாந்தர் கிரிஸிலிருந்து பாஞ்சாலம் வரை படையெடுத்து வந்தான் என்பதை அறியும் போது, படிக்கும்போது, அவர்களை அறியாமல் ஒரு வீர உணர்ச்சி கிளம்புகின்றது. தங்களின் பண்டைய பெருமையை காண்கின்றனர். அதை இன்று புதுப்பிக்க விரும்புகின்றனர். செய்ய முயலுவார்கள்.

## 374. சரித்திரம் காட்டும் வீரம்

ஆங்கில சரித்திரத்தைப் படிக்கும் ஒரு ஆங்கிலேயன், நெப்பேலியன் என்ற பிரெஞ்சு வீரனையும் அவன் ஆற்றிய அரும் பெரும் தீரச் செயல்களையும் அறிகின்றான். அவ்வளவு பெரிய ஐரோப்பாக் கண்டத்தையே ஆட்டி வைத்த நெப்போலியன் அந்த அரசியல் மேதை, தீரன்

இணையற்ற வீரன் — வாட்டர்லூ சண்டையில் அதிலும் கேவலம் ஒருசிறிய சேனாதிபதியான நெல்சன் என்ற ஆங்கிலேயனால் தோற்கடிப்பட்டதையும், அந்த ஆங்கிலேயன் படிக்கின்றான். நெப்போலியன் வீரத்தினால் அவன் பலன் ஒன்றும் அடையவிட்டாலும், அவன் மனக்கண் முன் பண்டைய ஆங்கிலேயரின் வீரம்தான் உருவெடுத்து நிற்கும். அவன் நெல்சனைப் போற்றுகிறான்.

## 375. எதை எதிர்க்கிறோம்?

நாம் எதிர்ப்பது எதை? பார்ப்பனர் புரட்டை, அவர்கள் ஆதிக்கத்தை, பார்ப்பனீயத்தை, அவர்கள் பகை மூட்டிவிடும் பான்மையைத்தான் எதிர்க்கிறோம். திராவிடர் கழகத்தாராகிய நாங்கள் ஆரம்பத்திலிருந்து கண்டித்து வருவது பார்ப்பனர்களை அல்ல. பார்ப்பனீயர்களிடம் குடியேறி இருக்கும் பார்ப்பனீயத்தையே.

## 376. அவர்களால் நாடு கெடுகிறது

இன்றைய பார்ப்பனீயம் மடாதிபதிகளை ஆதரிக்கின்றது. நாம் சாட்டும் குற்றச்சாட்டுகளைப் பார்ப்பனீயம் மழுப்பி மறைக்க முயல்கிறது. இந்த மடாதிபதிகள் எல்லோரும் பார்ப்பனர்கள் அல்லர். ஆனால், மடாதிபதிகளின் தொடர்பால் பார்ப்பனீயம் வாழ்கிறது. தருமபுரி ஆதீனத்து மடாதிபதி பார்ப்பனர் அல்லர், திருவாடுதுறை ஆதீனத்து மடாதிபதியும் பார்ப்பனர் அல்லர். இவர்கள் பார்ப்பனர் அல்லாதார் என்ற காரணத்தால், இவர்களை நாங்கள் போற்றவில்லை. இந்த மடாதிபதிகள் பார்ப்பனரல்லாதாராக இருந்த போதிலும் இவர்களால் நாடு கெடுகிறது என்ச காரணத்தால் நாங்கள் கண்டிக்கத்தானே வ்ற

கிறோம்! அவர்களுக்காகப் பரிந்து நாங்கள் வாதாட வில்லையே!

## 377. நாட்டின் செல்வம்

நாட்டின் செல்வம் நாட்டினருக்குப் பயன்பட வேண்டும் என்று கூறுவதற்கு மற்றோர் கிளர்ச்சி.

## 378. சட்ட திட்டங்கள்

நாட்டுக்கு, நாட்டினருக்கேற்ற சட்டதிட்டங்கள் அமைய வேண்டும் என்று வலியுறுத்த ஓர் கிளர்ச்சி.

## 379. கிளர்ச்சிக்கு எதிர்ப்பு

இன்னோரன்ன பிற கிளர்ச்சிகள், பல சிற்றருவிகள் கூடி ஆறு ஆவது போல் தமிழர் மறுமலர்ச்சியும் பெரியதோர் இயக்கமாதலை, கூர்ந்து நோக்குவோர் காணக்கூடும். தமிழர் அதனைக் கூர்ந்து நோக்கவில்லை. ஆனால் எதிர்ப்பாளர்கள் கூர்ந்து நோக்கிப் பார்த்துத்தான் ஒவ்வொரு கிளர்ச்சிக்கும் எதிர்ப்பை உண்டாக்கிப் பார்க்கின்றனர்.

## 380. உணர்ச்சிகளின் அறிகுறி

மறுமலர்ச்சி, புத்துணர்ச்சி, தமிழுணர்ச்சி, தமிழின உணர்ச்சி பெருகியுள்ளது என்பதன் அறிகுறி, அறிவிப்பு, எடுத்துக் காட்டுகள் இவை என்பதன்றி வேறென்ன காரணம், வேறெந்தச் சூழ்நிலையைத் தெரிவிக்கின்றன இவையெல்லாம்

## 381. மாணவர்களின் போக்கு

தமிழ், தமிழ்மொழி, தமிழ்ப்பாடம், தமிழ் வகுப்பு, தமிழாசிரியர், தமிழாசிரியர் வகுப்பு

என்றால் எனது பள்ளி வாழ்க்கையிலே, எனது மாவணப் பருவத்திலே, மாணவருக்கு ஒரு வேடிக்கை நேரமாக, கேளிக்கைகூடமாக, பொழுது போக்கும்விளையாட்டு மண்டபமாக எண்ணியும்; எண்ணி நடந்தும் வந்தனர்,

## 382. இப்போது தோன்றியுள்ளது

தமிழார்வம், தமிழ்படிக்கும் ஆர்வம், தமிழ் கற்றேன் என்றால் தகுதியுடையோனாக மதிக்கப் படும் நிலை, இப்போதுதான், சில ஆண்டுகளாத் தான், தமிழ்நாட்டில் தோன்றியிருக்கிறது.

## 383. பேருக்கமும் உணர்வும்

மறைமலை அடிகளாரின் தமிழ்ப்பற்றும், தனித் தமிழ் உணர்ச்சியும், திரு.வி.க அவர்களின் தமிழார்வமும், தமிழ்ப்பண்பும் இருவரது தமிழ்த் தொண்டும், தமிழ் வளர்ச்சியில் அவர்களது பேருக்கமும் இடைவிடாத உணர்வும் உழைப்பும் தமிழ் இதயங்களில் இரண்டறக் கலந்து விட்டன.

## 384. முப்பிரிவுகள்

இயல், இசை, கூத்து! தமிழின் முப்பிரிவுகள்! தமிழின் தனிச் சிறப்பை, தனிப் பண்பை, உணர்த் திடும் பிரிவுகள்.

## 385. முத்தமிழும் முக்கனிகளும்

முத்தமிழ், முக்கனிகள்! மா, பலா, வாழை என்பவை, இயல், இசை, கூத்து தமிழ் மொழிக்கு!

## 386. பூரிப்பது ஏன்?

தோழியர் கே. பி. சுந்தராம்பாளின் இசைக்குத் தமிழர் தமது செவியையும் சிந்தனையையும் பரிசாக அளித்ததன் காரணமும் இதுவே. ''செந்தூர் வேலாண்டி...'' என்று பொருள் விளங்கப் பாடும் போது, இன்ன விஷயமாகப் பாடப்படுகிறது என்று புரிந்து கொண்டு பூரிக்கின்றனர்.

## 387 உணர்ச்சி உருக்குகிறது

தமிழ் இசைக்கு ஆதரவு இருக்குமா என்று கேட்கும் பேர்வழிகாள், இசையரசு தண்டபாணி தேசிகரின் தமிழ் இசை,மக்களை எவ்வளவு உருக்கு கிறது! பொருள் விளங்க உணர்ச்சி ததும்ப அவர் நமது தமிழில் நம்மிடம் பாடுவதால், மக்கள் உருகுவது இருக்கட்டும்; தேசிகரே உருகுவதைக் காணலாம்; தமிழ் இசை பாடும்போது!

## 388. நெஞ்சை அள்ளுகிறது

மதுரை மாரியப்ப சுவாமிகள், சிதம்பரம் ஜெய ராமன், திருவாரூர் நமச்சிவாயம் ஆகிய இசை மணிகளின் ஒலி, நமது தமிழாக இருப்பதால், நமது நெஞ்சை அள்ளுவதைக் கூறவேண்டுமா?

## 389. ஏன் தேடுகிறார்கள்?

சங்கீதம் எந்தப் பாஷையாக இருந்தாலென்ன? என்று கூறுபவர்கள், 'ராக இலட்சணமே முக்கியம்! சாகித்திய இலட்சணம் முக்கியமாகாது' என்று கூறுபவர்கள், திருவாவடுதுறை ராஜரத்தினம் அவர் களின் நாதஸ்வரமும், கும்பகோணம் ராஜமாணிக் கம் பிள்ளையின் பிடிலும் இருக்க, வாய்ப்பாட்டு வேறு ஏன் தேடுகிறார்கள்?

## 390. தமிழிலே இருப்பதே முறை

வாய்ப்பாட்டில் நாதமும், நெஞ்சை அள்ளும் சாகித்தியமும் இருக்கின்றது என்பதற்காகத்தான் நெஞ்சை அள்ளும் சாகித்தியம் தமிழர்களுக்குத் தமிழில் இருத்தலே முறை.

## 391. வயப்படுவது ஏன்?

இசை என்னும் சொல்லுக்கே, வயப்படுவது, இசைவிப்பது என்பது பொருள். இதனைத் தமிழர் நன்குணர்ந்து, பயன்படுத்தி வந்தனர். மகிழ்ந்தனர், மகிழ்வித்தனர்.

## 392. முரண்பட்டவர்கள்

எந்தப் பார்ப்பனர், மனு 4ம் அத்தியாயம் -15ம் விதிப்படி, இசை பயின்று பொருள் ஈட்டக்கூடாது என்று தடுக்கப்பட்டு இருந்தனரோ, அதே ஆரியர்களின் சொத்தாக இசை இன்று கருதப்பட்டு வரும் நிலைமை ஏற்பட்டது.

## 393. இதற்கு ஓர் கிளர்ச்சி

மொழியிலே கிளர்ச்சி வேண்டாம் என்று ஓர் கிளர்ச்சி.

## 394. யாவரும் ஒன்றே

நாட்டிலே யாவரும் ஒன்றெனும் எண்ணம் தோன்ற வேண்டும் என்பதற்கோர் எழுச்சி.

## 395. இனப்பற்று

இனத்திலே பற்றிருக்க வேண்டும் என்பதற்கோர் எழுச்சி.

## 396. நாட்டின் எல்லை

நாட்டு எல்லை குறிக்கப்பட வேண்டும் என்று ஓர் கிளர்ச்சி.

## 397. மணம் பரப்பும் தமிழ்க்கலை

பொன்னும் மணியும் பொலிவுடன் விளங்க, வீரமும் ஈரமும் கொண்டு ஆண்ட தமிழ் மன்னர்கள் மற்றைச் செல்வங்களை வளர்த்தது போல், கலைச் செல்வத்தையும் வளர்த்தே வந்தனர். தமிழகத்துச் சந்தனம் ரோம் சாம்ராஜ்யத்தில் வாடை வீசியது போல தமிழ்க் கலையின் மணம் எங்கும் பரவி இன்பம் ஊட்டிற்று. எங்கே அந்தக் கலை இன்று?

## 398. எல்லாமே தமிழில்தான்

சேர நன்னாட்டின் மங்கையர், வேழத்தை விரட்டிய தமது வீரக் காதலரை வாழ்த்திப் பாடியது தமிழில்தான். வெற்றிக் கொடி பறக்க எதிரியை விரட்டி அடித்துத் திரும்பிய சோழ மன்னர்களின் சிறப்பைத் தமிழில்தான் பாடினார் கள்.

## 399. மாதவி பாடி மகிழ்வித்தது

கதிரவன் காய்வதை அடக்கிக் கொண்டு மேனி சிவந்து மறையும் நேரத்தில் கடலோரத்தில் பட்டுக் கூடாரத்தினுள்ளே பக்கத்தில் இருந்த கோவலனின் உள்ளம் குழைய மாதவி பாடியது ''மாருபல்கா, கொன்னாவே ஏமிராவு''; ''சல்சல்ரே நவ்ஜவானு'' மல்ல! தமிழ்! இன்று தமிழ் இசை போதுமான அளவு இல்லை என்று கூறும் நிலை வந்தது. காரணம் என்ன?

## 400. ஏக்கம் அளிக்கிறது

தமிழர் இசையை வளர்த்தது போல், வேறு இனத்தவர் வளர்க்கவுமில்லை! தமிழர் இசையை இழந்ததுபோல் வேறு யாரும் இழக்கவுமில்லை. தமிழனின் இன்றைய நிலை, இழந்த இன்பத்தைப் பற்றி எண்ணி ஏங்குவதாகவே இருக்கிறது.

## 401. பிறமொழிக் கலப்பு

தமிழரின் மறுமலர்ச்சியே, தமிழில் ஏன் பிற மொழி கலக்க வேண்டும் என்று கேட்கச் சொல் கிறது.

## 402. இந்தி எதிர்ப்பு ஏன்?

தமிழரின் மறுமலர்ச்சியே, தமிழகத்திலே, 'இந்தி கட்டாயப்பாடமா?' என்று கிளர்ச்சி நடத்தச் சொல்லிற்று.

## 403. ஆரிய ஆபாசங்கள்

தமிழரின் மறுமலர்ச்சியே, தமிழகத்திலே, 'ஆரிய ஆபாசங்கள் கூடாது' என்று தைரியமாக எடுத்துக் கூறச் சொல்லிற்று. சமுதாயத் துறை யிலே, 'நீ உயர்ந்தவன் நான் தாழ்ந்தவன்' என்ற பேதம் கூடாது என்று கூறச் சொல்லிற்று.

## 404. களிப்படையச் செய்கிறது

தோழர் தியாகராஜபாகவதர் ''மாயப் பிரபஞ்சத் தில் ஆனந்தம் வேறில்லை'' என்று பாடினால், அது, வீட்டிலே, வெளியிலே, இரவிலே, பகலிலே, கிழவர், குழந்தை உள்பட பாடும் பாட்டாகி விடுகிறது. அழகும், அழுத்தந் திருத்தமும் பொருட்சுவையும் ததும்ப, ''உன்னைக் கண்டு

மயங்காத பேர்களுண்டோ?'' என்று பாகவதர் பாடினார். நாட்டினர் அதனைப் பாடுகின்றனர். காரணம் அவர் பாடுவது புரிகிறது. கேட்பவர் களிக்கின்றனர். அந்த இசை, கேட்போர் உள்ளத்திலே சென்று தங்குகிறது.

## 405. மலர்த்தோட்டத்திலே அரவம்!

புலி உறுமும் — அந்தச் சப்தம் கேட்டு கிலி பிறப்பினும் ஒரு படை திரட்டி விடவும், அதை வேட்டையாடிக் கொன்று போடவும் வழியும் கிடைக்கக்கூடும். ஆனால் முல்லை மலர் பறித்திட மலர்த்தோட்டம் சென்று, பச்சைப் பட்டோ என்று பரவசம் படத்தக்க பசும் புற்றரையில் நடந்து செல்லும்போது, அரவமின்றி ஊர்ந்து வந்து தீண்டிடும் அரவமாக— நாகமாக இருந்தால் என்ன செய்வது.

## 406. வாழ்த்துவான்

நந்தவனத்துக்குப் பூரா நாளும் நீர் பாய்ச்ச வேண்டும் என்று எண்ணிக் கொண்டு கிணற்றடி போகிறான். பெருமழை பெய்தால் என்ன கஷ்ட காலம்! நாம் நீர்பாய்ச்ச முடியாமல் போய்விட்டதே என்றா ஆயாசப்படுவான்! நமக்கு வேலை இல்லை. மழை வந்தது நல்லதாயிற்று 'மழையே வாழி' என்று வாழ்த்துவான்.

## 407. மகிழ்ச்சியுடன் வாழ வழி

உண்மையான தொண்டு தன்னலமற்றதாக இருத்தல் வேண்டும். பிறரையும் மகிழ்ச்சியுடன் வாழச் செய்தால்தான் நாம் மகிச்சியுடன் வாழ முடியும்.

## 408. திருவிழாவும் தோத்திரமும்

ஏழைகள் இதயத்திலே களிப்பூட்டும் பணி புரிதலே பகவானுக்குத் தேர் திருவிழா யாவும்! தூய உள்ளமே கோயில்! நலிந்தோரைத் தேற்று வதே தோத்திரம்!

## 409. சமுதாயமே நாசமாகலாம்

மக்களிடம் சகோதரத்துவம் மலரவேண்டும். அதற்கு அன்பு ஆட்சி செய்தல் வேண்டும். ஒருபகுதி மக்களைச் சேற்றிலும் சகதியிலும் நெளியும்படி விட்டுவிட்டு வைப்பது சமுதாயம் முழுவதையுமே நாசம் ஆக்கும்.

## 410. தீய குணம் மடிய வழி

தீயகுணம் எப்படி தன்னால் மடிந்து ஒழியும். கடவுள் அதனை ஒருநாள் ஒழித்தே தீருவார் என்று எண்ணிப் பயன் இல்லை. தீய குணத்தை ஒழித்திட நாம் தீவிரமாகப் பணியாற்றித் தீரவேண்டும்.

## 411. தொண்டுக்கு தூயமனம் தேவை

கடவுள் தீயசக்திகளை ஒழிப்பதில் வெற்றி பெறவில்லை. அவரை மூலைக்கு ஒதுக்கிவிட்டு, தீய சக்தி மணிமாடத்தில் கொலுவிருக்கிறது. எனவே கடவுளின் காரியத்தைச் செய்யத் தன்னலத்தை விட்டுப் பணிபுரிய வேண்டும். துறவிகள் வேண்டும் தூய மனதுடன் தொண்டு புரிய!

## 412. நமக்கு நாமே கேடு

நமக்கு யாரும் கேடு செய்திட முடியாது. நமக்கு நாமே கேட்டினைத் தேடிக் கொண்டால் தவிர, பிறர் எவரும் நமக்குக் கேடு விளைவித்திட மாட்டார்கள்.

## 413. நகை அணியும் வழக்கம்

மேல் நாடுகளிலே மாதர்கள் நகையணியும் வழக்கமில்லை! அவர்களிடம் பணம் சேர்ந்தால் அப்பணம் பாங்கில் இருக்கும் அல்லது நல்ல கம்பெனிகளிலே பங்குகள் ஆக இருக்கும். நம் நாட்டிலேதான் பெண்மணிகள் பணத்தை நகைகளாக்கி 6 ஜதை 7 ஜதை வளையல்கள், வைர அட்டிகைகள், காதில் தோடுகள் அவற்றோடு குண்டலங்கள், சடை பில்லைகள் என்றெல்லாம் அணிந்து கொள்கிறார்கள்.

## 414. கருத்துத் தெளிவு முக்கியம்

ஒவ்வொரு துறையிலும் கருத்துத் தெளிவற்ற முறையில் பிரசாரம் செய்கிறார்கள். எவை பேசப் பட்டாலும், கருத்துத்தெளிவுடன் இருக்கவேண்டும். அது எந்த வார்த்தையானாலும் சரி, எந்தக் காரணத்தினாலும் சரி, அது யார் பேசினாலும் சரி, பேசும் பொருளின் உட்கருத்தைக் கவனிக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் வேறொரு பொருளைப் பெறமுடியும். ஏன்? இழந்த பொருளை யும் நாம் பெறக்கூடும். இவை அனைத்துக்கும் கருத்துத் தெளிவுதான் மிகவும் அவசியம்.

## 415. பொருளிலே புரண்டவர்கள்

புராணத்திலே விசுவாமித்திரரைப் பற்றிய ஒரு கதை உண்டு, அவர் காமதேனுவைக் கட்டி வைத்து தேவ அரசர்களுடன் சண்டைக்குச் சென்றாராம். பிறகு அது மாடுபிடிச் சண்டையாக மாறியது. இராமாயணத்திலே முன்னோர்கள், முனிவர்கள், வேதாந்திகள், இவர்கள் அத்தனை பேரும் பொருளோடுதான் வாழ்ந்தார்கள். பொருளிடத்

திலே இச்சையில்லாமல் எந்த முனிசிரேஷ்டரும் வாழவில்லை. உலகம் மாயை — அநித்தியம்என்று பேசியவன்கூடப் பொருள்கள் தரும் போகத்திலே புரண்டுதான் வாழ்கிறான்.

## 416. பொருள் தரும் சுகம்

மேல் நாட்டினர் பொருளைத் தேடுவதிலும், அதனைச் சரியான முறையில் பயன்படுத்துவதிலும் காலம் கழித்தார்கள். ஆனால் நம்மவர்களோ பொருளை அநித்தியம் என்று கூறிக்கொண்டு, அதே பொருள் தரும் சுகத்தில் வாழ்ந்தவர்கள், வாழ்கின்றார்கள்.

## 417. இவ்வளவு சொத்துக்கள் ஏன்?

திருவாவடுதுறை ஆதீனத்துக்கு 2000 வெலி நிலங்கள் எதற்கு? தருமபுரம் ஆதீனத்துக்கு அத்தனை காணி நிலங்கள் ஏன்? திருப்பதி வேங்கடேசுவரனுக்குப் பல லட்சங்கள் பெறுமானமுள்ள கிரீடங்கள் எதற்காக? தீராத வல்வினையைத் தீர்த்தருளும் வைத்தீசுவரனுக்கு எதற்காக அத்தனை சொத்துக்கள்? எந்த ஆண்டவனும் மக்களுக்காக அத்தனை பொருள்களையும் திருப்பிக் கொடுத்ததாக இதுவரையிலும் இல்லை. அந்தக் காட்சிகள் எல்லாம் ஓர்புறம் என்றால், வயிறொட்டி, கண் குழிவிழுந்து, வாயுலர்ந்து, வரண்ட தலையனாய், வாடிய நெஞ்சனாய்க் காணப்படும் ஏழை மற்றொரு புறம்.

## 418. பிறருக்கு உபதேசம்

வேகமாக வருகின்ற பாட்டாளி முன்னால் நிறுத்தப்பட்டுள்ள தடையைப் பார்த்துப் பின்னால் போகின்றான். குறிப்பாக நம் நாட்டில் வேதாந்தம்

சொல்வதெல்லாம் ஏழைகளிடத்தில்தான். "பொருள்மேல் ஆசை வைக்காதே; பொருள் மாயை; அழிந்து விடக்கூடியது; அநித்தியம்; பொருள் மாத்திரம் என்ன? நீ கூடத்தான் அழியக் கூடியவன்— நீ மாத்திரம் என்ன? உன்னைப் படைத்த இவ்வுலகம்?" என்று இவ்வளவும் பேசி விட்டு ரிசர்வ் பாங்க், 'காத்ரஜ் சேப்', 'நேஷனல் பாண்டு'களாக வாங்கிப் பணம் சேமித்தல் முதலிய வற்றில் 100க்கு 20 பேர் ஈடுபடுகின்றனர். 100க்கு 80 பேர் ஏழைகளாக்கப்படுகின்றனர்.

## 419. அவதாரங்களால் குறை தீர்ந்ததா?

நம் நாட்டிற்கு வந்த அவதார புருஷர்களுக்கு குறைவே இல்லை. மற்ற நாட்டைவிட நம்முடைய நாட்டில்தான் கடவுள்கள் அவதாரம் எடுத்த வண்ணமாக இருந்தனர். பகவான் பத்து அவதாரம் எடுத்தார் என்று வேதம், புராணம், ஸ்மிருதிகள் கூறுகின்றன. பாவத்தைப் போக்குவதற்காக கடவுள் அடிக்கடி அவதரித்தார் என்று கூறப்படு கிறது. நம்முடைய வீட்டிற்கு டாக்டர் அடிக்கடி வந்து சென்றால் என்ன நினைக்க முடியும்? நோயாளிகள் அதிகம் — நோய் பரவுகிறது என்று தான் நினைக்க முடியும் — அதைப்போல் கடவுள் பத்து அவதாரங்கள் எடுத்தார் என்று கூறினால் என்ன நினைப்பது! அப்படியும் நம் குறை தீர்ந்த பாடில்லை.

## 420. கலைக்கு ஏற்படும் களங்கம்

முன்னேற்றப் பாதையிலே செல்லும் மாணவர்க ளாகிய நீங்கள் முதன்முதலாகச் செய்யவேண்டிய கடமை, மனிதத் தன்மைக்கு மாறான கருத்துக்கள் நாட்டிலே பரவ வொட்டாமல் தடுக்க வேண்டும்.

மனிதத் தன்மைக்கு மாறான கருத்துக்கள் இசையிலே புகுந்துள்ளன; நாடகக் கலையிலே புகுந்துள்ளன; இதிகாசங்களிலே புகுத்தப்பட்டிருக்கின்றன; புராணங்களாகப் புனையப்பட்டிருக்கின்றன; காவியங்களிலே நுழைக்கப்பட்டுள்ளன; ஓவியங்களிலே காணப்படுகின்றன. மனிதத் தன்மைக்கு மாறான கருத்துக்கள், கலையிலே புகுத்தப்பட்டால் கலைக்கே களங்கம் விளைவிப்பதாகும்.

## 421. அது தெரியும் இது தெரியாது

ரயிலிலே ஒருவன் சென்று கொண்டிருக்கிறான். சன்னல் வழியாக ஒரு மலை அவன் கண்ணுக்குத் தென்படும். அந்த மலைமீது ஒரு கோபுரம் தெரியும். உடனே அவன் பக்கத்தில் உள்ளவனைப் பார்த்து, அந்தக் கோயிலைக் கட்டியது யார் என்று கேட்பான். அதற்கு அவனும் பதில் சொல்லாமல் இருக்கமாட்டான். ஆனால், அவர்கள் இருவருக்கும் அவர்கள் செல்லுகின்ற ரயிலைக் கண்டு பிடித்தது யார் என்று தெரியாது. ஆனால் யாரோ கண்டுபிடித்த ரயிலில் பிரயாணம் செய்யலாம். எவ்வளவு நன்றிகெட்டதனம் பாருங்கள்! கண்டு பிடித்தவனுக்கு நன்றி செலுத்தினோமா?

## 422. உண்டாக்கியவர்களை மறந்தோம்

காளிதாசன் கவிகள் இயற்றினான். மிகவும் கடினமான செயல் என்று கூறலாம். காளியின் வரப்பிரசாதம்கூட இருந்தது. ஆனால் மின்சாரத்தைக் கண்டு பிடித்தவனோ, இரயிலைக் கண்டு பிடித்தவனோ எவ்வளவு கஷ்டப் பட்டிருப்பார்கள். தங்கள் வாழ்நாளில் இராப்பகலாகச் சிந்தித்துச் சிந்தித்து நித்திரையும் இல்லாமல், மக்களுடைய

தேவைக்காகப் பல பொருள்களை அவர்கள் உண்டாக்கினார்கள். அவர்களை நாம் மறந்தோம். ஆனால், நம் நாட்டில் எவருக்கும் அத்தகைய வரப் பிரசாதம் அளிக்காத ஆண்டவனை மாத்திரம் மறக்கவில்லை.

## 423. நாகரிக வளர்ச்சி எதனால்?

காட்டு மிரண்டியாக, காடுகளிலும் குகைகளிலும் வாழ்ந்து, இலைகளையும், தழைகளையும் உடுத்தி, கிடைத்த கிழங்கையும் கீரைகளையும், வேட்டையாடிய மிருகங்களின் பச்சை இறைச்சிகளையும் புசித்து வாழ்ந்த நிலையிலிருந்து, மனிதன் மாடமாளிகைகள், கூடகோபுரங்கள் அமைந்த அழகு நகரங்களைக் கட்டி, பட்டு, பருத்தி கம்பளிபோன்ற ஆடைகளை அணிந்து, அரிசி, கோதுமை, கம்பு, கேழ்வரகு முதலிய அறுசுவை ஆகாரங்களைப் புசித்திடும் இன்றைய நாகரிக நிலைக்கு வந்திருக்கிறான். இந்த வளர்ச்சிக்கு மனிதனிடமுள்ள மற்ற உயிரினங்களிடம் இல்லாத பகுத்தறிவு முதற்காரணம், மூல காரணமும் ஆகும், மனிதன் நாகரிக முதிர்ச்சி பெறப்பெற, இயற்கை வளத்தைப் பலவழிகளிலும் நன்கு உபயோகமான முறையில் பயன்படுத்திக் கொண்டே வரத் தலைப்பட்டான்.

## 424. மாறுதலுக்கு எது அடிப்படை?

கண்ட இடங்களிலே திரிந்து, கிடைத்தவற்றை கிடைத்த இடத்தில் புசித்து, இலை, தழைகளை அணிந்து, இருட்டிய நேரத்திலே இருக்கின்ற இடமே வீடெனத் தூங்கி வாழ்ந்த ஆரம்ப மனித வாழ்க்கை, இன்று நாடு, நகரங்களில், அறுசுவை ஆகார வகைகளோடு அலங்கார ஆடை அணிகள்

பூண்டு வாழும் நாகரிக நிலைக்கு உயர்ந்துவிட்டது படிப்படியாக. இந்த மாறுதலுக்கு, மனித வாழ்வின் மகத்தான மாறுதலுக்கு, மனிதனிடம் உள்ள அறிவே, பகுத்தறிவே அடிப்படை, ஆதாரம், வழி காட்டி!

## 425. முதல் அத்தியாயம் எது?

சிந்திக்கத் தொடங்கிய மனிதன், முதல் சிந்தனையாளன், இயற்கை வளத்தை, தனது வாழ்வு வசதியாக அமையும் வகைக்குப் பயன் படுத்த தொடங்கியதன் விளைவு, நாகரிக வாழ்வின் ஆரம்பக் கட்டம். முதல் அத்தியாயம்,

## 426. அறிவினால் அடைந்த முன்னேற்றம்

உணவைச் சேமித்து வைக்கத் தொடங்கி, மழை, வெயில் இவற்றிலிருந்து பாதுகாப்புடன் வாழ, குகைகளைக் கண்டுபிடித்து, குடிசைகள் கட்டி, வீடுகளை உண்டாக்கி, நாடுகள், நகரங்கள் வரை மனிதன் முன்னேறினான், தனது அறிவைக் கொண்டு.

## 427. முதல் சிந்தனையாளன்

சிந்திக்கத் தொடங்கிய முதல் சிந்தனையாளன் சுயநலமுள்ளவனாக, தன்னைப் பற்றிய எண்ணத்தை மட்டுமே கொண்டவனாக இருந்து விட்டிருந்தால், இன்றைய உலகம், நாகரிக உலகம் ஏற்பட்டிருக்க முடியாது.

## 428. தன்னைப் போலவே பிறரும்

மனிதன், தான் வாழ வேண்டும், தன்னைப் போலவே, பிறரும் வாழவேண்டும். மனிதர் எல்லோரும் மனிதராகவே வாழ்ந்திட வேண்டும்

என்ற மனப்பான்மைக் கொண்டவனாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான், மனித இனம் ஒன்றுபட்டு, நாகரிக வாழ்வு வாழமுடியும்.

## 429. பரிதாபமான காட்சி ஏன்?

ஒருவேளை உணவுக்கும் வழியற்றவர்கள், ஒட்டிய வயிறு படைத்தோர், பசியால் பரிதவித்துக் குழிவிழுந்த கண் படைத்தோர், காதடைத்தோர், உணவிற்றி உடல் மெலிந்து, உருமாறி வாடினோர் இல்லையா? உடுக்க உடையின்றித் தவித்திடுவோர், கிழிந்த கந்தலை உடுத்துபவர், அழுக்கு ஆடை அணிந்தோர் காணப்படவில்லையா தமிழ் நாட்டில்? இருக்க இடமின்றி, தெருவில் நின்று தவித்திடும் கூட்டம் கிடையாதா? வானமே கூரையாக, கையே தலையணையாக, பூமியே பஞ்சணையாக, வீசும் காற்றே போர்வையாக, உறங்கிடும் மனிதர்கள் ஏன், இல்லை?

## 430. இங்கே எது இல்லை?

இயற்கை வளமில்லையா? உழைக்க உடலுறுதி பெற்ற மக்கள் இல்லையா? இருக்கிறது, எல்லாம் இருக்கிறது! இருந்தும் பயன் என்ன?

## 431. ஆறுதலும் தேறுதலும்

'ஏதோ நாம் கொடுத்து வைத்தது இவ்வளவு தான்' 'நம்மாலாவது என்ன, என்ன, எல்லாம் விதிப்படிதானே நடக்கும்!' கொடுத்து வைத்தவன் வாழ்கிறான். கொடுத்து வைக்காதவன் வறுமையில் புரண்டுவாடி நெளிகிறான்!' புண்ணியம் செய்தவனப்பா, நன்றாக வாழ்கிறான். அனுபவிக்கிறான்!' என்றெல்லாம் நாட்டில், நிலைதவறிய, நிம்மதியற்ற ஏழை மக்கள், தாழ்ந்த மாந்தர், வாழ்க்கைத்

தரம் குன்றிய வறுமைக் கூட்டத்தினர் பேசுகின்ற னர் இந்த முறையிலே கஷ்டத்திற்குக் காரணம் கடவுள் துன்பத்திற்குக் காரணம் புண்ணியமற்ற பிறப்பு. இல்லாததற்குக் காரணம், கொடுத்து வைககாது. வேலை கிடைக்காது வாடுவது விதியின் செயல் என்றுதான் மக்கள் ஆறுதலடைகின்றனர். தமக்குத்தாமே தேறுதலும் அளித்துக் கொள் கின்றனர்.

## 432. ஏற்றமும் முன்னேற்றமும்

காட்டுமிராண்டிக் காலமல்ல, நாங்கள் குறிப் பிடும் பழங்காலம்; புராண காலம்தான் பழங்காலம். புண்ணிய புருடர்கள் தோன்றிய காலம்தான் பழங் காலம். இன்றுள்ள பழைய இலக்கியங்களில் காண்பவைதான் பழைய காலக்கருத்துக்கள். இன்றும் இனியும் தேவையான கருத்துக்கள் என்றா வது மாற்றிக் குறிப்பிட்டுவிட வேண்டும். வாதத் திற்காக இந்த முடிவை ஒப்புக் கொண்டாலும், மனிதனது முன்னேற்றம் அந்த அளவோடு நின்றிருந்தால்கூட, இன்றைய ஏற்றமும், பெரும் முன்னேற்றமும் மானிட வாழ்வில் ஏற்பட்டிருக்க முடியாது என்பது திண்ணம்.

## 433. இந்த நிலை மாற வேண்டாமா?

புதிய சாதனங்களால், பழைய கருத்துக்களைப் பரப்பிடப் பயன்படுத்திட தவறவில்லை. அதே நேரத்தில், புதுமைக் கருத்துக்களுக்கு வித்திடும் விவேக புத்தியைக் கையாண்டிட மறுத்திடும் நிலை! மூடநம்பிக்கையால் முற்போக்கு இலக்கியங்களுக்கு முட்டுக்கட்டை போடும் நிலை! இந்த நிலை மாற வேண்டாமா? மாற்றப்பட வேண்டாமா?

## 434. நல்ல சூழ்நிலை எப்படி உருவாகிறது?

'சூழ்நிலை!' காலவேகம், மனிதனது முன்னேற்றம், எண்ணப் புரட்சியின் வேகமான முன்னேற்றம், விஞ்ஞான அறிவு ஆராய்ச்சி, வாழ்க்கை முறையை, அதற்கான சுற்றுச்சார்பை, சூழ்ந்துள்ள தன்மைகளை, தரப்படுத்தி, வளப்படுத்தி, நல்ல 'சூழ்நிலை'யை உண்டாக்கித் தருகிறது.

## 435. வளர்ச்சி எப்படி ஏற்பட்டது?

சிற்பிகளின் சிந்தனைச் சிற்பங்களைச் செதுக்கிடும் அளவோடு நின்று, ஆண்டவன் ஆலயங்களை அழகுடன் அமைத்திடும் பணியோடு முடிந்திருந்தால் மாடமாளிகைகளையும், கூடகோபுரங்களையும், கோட்டைகளையும், கொத்தளங்களையும், சுற்றுச்சுவர்களையும், சூழ்ந்த மதில்களையும் மலையரண்களையும் கொண்ட மகத்தான மாபெரும் நகரங்களைக் கண்டிருக்க முடியுமா? நாடுகளைத்தான் பார்த்திருக்க முடியுமா?

## 436. திறனும் செயல் முறையும்

காட்டு வெள்ளத்தைக் கட்டுப்படுத்தி, நாட்டு வளத்தைப் பெருக்கிடப் பெரும் பெரும் அணைக்கட்டுகள், பேராறுகளைக் கடந்திடப் பெரும் பெரும் பாலங்கள் தோன்றியிருக்க முடியுமா? அறிவும் ஆராய்ச்சியும் சிந்தித்திடும் திறனும், செயல் முறையும் செயல்திறனும், பக்தியைப் பெருக்கி முக்தியைப் பெருக்கி முக்தியைத் தந்திடும் கோபுர வாயிற்படி அளவிலேயே எம்பெருமானார் திருக்கோயில்களின் அருட்சுவர்களுக்கிடையிலேயே அடங்கிவிட்டிருந்தால், அடக்கப்பட்டிருந்தால்!

## 437. புதுவாழ்வும், நல்வாழ்வும் வாழ

சாக்ரட்டீஸ், ரூலோ, வால்டேர் போன்ற ஆசிரியர்கள் அவ்வப்போது தீட்டிய மறுமலர்ச்சி ஏடுகள் எத்தனையோ மனமாற்றங்களை, எண்ணத் தெளிவுகளை ஏற்படுத்தின மக்களிடையே! மக்களிடம் மங்கிக் கிடந்த சிந்தனையைத் தட்டி யெழுப்பின இவர்களது புத்துணர்ச்சி ஏடுகள், மனிதன் முன்னேற, புதுமையைக் காண, புது வாழ்வு பெற்று, நல்வாழ்வு வாழ்ந்திடப் பெருந் துணை புரிந்தன. அதைப் போலவே, இங்கும் இத் தமிழ் திருநாட்டிலும் மறுமலர்ச்சி நூல்கள் ஏராளமாகத் தேவை.

## 438. அந்தக் காலம் மாறிவிட்டது

தமிழ், தமிழ்ப் பேச்சு, தமிழ் எழுத்து, தமிழ்ப் புலவர், தமிழ்ப் புத்தகங்கள், என்றால் ஏதோ வேறு வழியற்றவன், விதியற்றவன், தமிழைக் கட்டியழுகிறான் என்றிருந்த காலம் மாறி, இன்று தமிழன், தமிழ்மொழி, தமிழினம், தமிழகம், தமிழ்த்திருநாடு, என்றெல்லாம் பேசப்படும் நிலை, தமிழினம் தமிழைப் போற்றிடும் நிலை, தன்மானம் கொண்டுள்ள நிலை, உண்டாக்கித் தானே இருக்கிறது.

## 439. பல வழிகளில் முட்டுக்கட்டைகள்

மத மூட நம்பிக்கைகளின் பேரால், ஆண்டவன் பக்தி, பாராயணம், பழங் கருத்து, பராசரர் வாக்கு, இதிகாசம், எம்பெருமான் திருவாக்கு, அருள் வாக்கு, விதி, மோட்சம், நரகம் என்பதின் மேலுள்ள பற்று, பாசம், பயம் முதலான பலப்பல வழிகளிலே, முட்டுக் கட்டைகள் முத்தமிழ் குறித்து மட்டுமல்ல, எங்கும், எதற்கும், எந்த நாட்டிலும், எந்தக் காலத்திலும் ஏற்பட்டேதான் இருக்கின்றன.

## 440. எளிதில் ஏற்பட்டு விடவில்லை

வரலாற்றைக் கவனித்துப் பாருங்கள். உலகின் பற்பல நாடுகளிலும், பலப்பல நூற்றாண்டுகளாக மனித வாழ்வின், வாழ்க்கை முறைகளும், மன மாறுதல்களும் சுலபத்தில் ஏற்பட்டு விடவில்லை.

## 441. மகத்தான எதிர்பார்ப்பும் ஏளனமும்

சிறு சிறு மாறுதல்களும், ஏன்? மிக மிகச் சாதாரண மாறுதலும் கூட, மகத்தான எதிர் பார்ப்புக்கும், ஏளனத்திற்கும் ஆளான பின்னரே, ஆரம்பத்தில் எதிர்க்கப் பட்ட பின்னரேதான் மக்கள் மனதில் தோன்ற ஆர்ம்பித்தன மேலும், எண்ணத் தெளிவை ஏற்படுத்திக் கொள்ளத்தான் வேண்டும். என்ற எண்ணத்தை, எண்ண மாறுதலை, எண்ண முன்னேற்றத்தை ஏற்படுத்திடும் நிலை, சூழ்நிலை ஏற்பட்டது.

## 442. மக்களின் மருட்சி

மாறுதலைக் கண்டு மக்கள் மருண்டனர். மாறு தலே தேவை இல்லை என்றும் கூட எண்ணினர். மனித வாழ்வில் மாறுதலுக்கான அறிகுறி ஆரம்பம் ஆரம்பித்த நேரத்திலே!

## 443. வழி வழியாக வந்த எண்ணம்

உலகம் தட்டை என்று உலகமே எண்ணியிருந்த நேரத்திலே நம்பியும் இருந்த காலத்திலே கடவுள் கதைகள் எல்லாம் இதே கருத்தை வலியுறுத்தி, வலியுறுத்தி வழங்கி வந்த வழி வழி எண்ணத்தை சாதரணமாகவா மாற்ற முடிந்தது.

## 444. விஞ்ஞானி பட்ட பாடு

உலகம் தட்டையல்ல! நீண்ட சதுர வடிவமானதல்ல! தட்டை போலத்தான் கண்ணுக்குத் தோன்றுகிறது ஆனால், கருத்தூன்றிக் கவனித்தால் உலகம் ஒரு உருண்டை. உருண்டை வடிவமானது என்று முதன் முதலில் கூறிய கலீலியோ கல்லடி பட்டார். கசடன் — கடவுள் தன்மைக்கே விரோதி என்ற தூற்றுதல் மொழிகளுக் கெல்லாம் ஆளானான்.

## 445 உலகம் தட்டையா? உருண்டையா?

கேலிக்கும், கண்டனத்திற்கும், கல்லடிக்கும், சொல்லடிக்கும் கலங்கிடாது, எதிர்ப்புக்கும் ஏளனத்திற்கும் அஞ்சாது, எண்ணத் தெளிவோடு தனது சிந்தனையின் முடிவை, உலகம் தட்டையல்ல. உருண்டை என்ற உண்மையை உலகினர்க்கு உணர்த்திடத் தயங்கிடவில்லை. அந்தக் கலீலியோ அந்தக் காலத்திலே! உலகம் உருண்டை என்ற உண்மை, இன்று உலகம் முழுவதும் ஒப்பிய உண்மையாக உலவிடக் காண்கிறோம்! உபயோகமும் இருக்கிறது இந்த உண்மையால் உலகிற்கே!

## 446. மாறுதலும் முன்னேற்றமும்

எந்தத் துறையிலும், எந்தவிதக் கருத்து மாறுதல்களுக்கும் ஆரம்பத்திலேயே ஆதரவு கிடைத்து விடாது என்ற எண்ணத்தைக் கொண்டு எதிர்ப்பு, ஏளனம், தடை, தண்டனை இவற்றைக் கண்டு இதற்கெல்லாம் மனித இனம் கட்டுப்பட்டு நின்று விட்டால்—நின்று விட்டிருந்தால் மனித வாழ்வில், எத்தகைய மாறுதல்களும், முன்னேற்றமும் ஏற்பட முடியாது. ஏற்பட்டிருக்கவும் முடியாது

என்பதை மீண்டும் வலியுறுத்தி குறிப்பிட விரும்புகிறேன்.

## 447. களமும் விளை நிலமும்

நல்ல மாந்தோப்பு அமைய—நல்ல களம்—விளைநிலம் எப்படிமுக்கியமாகிறதோ மூலமுமாகிறதோ அப்படியே அப்படியே தான் மனிதன் தரமும், பண்பும் படைத்தவனாக நல்ல வாழ்வு—நாகரிக வாழ்வு வாழ வேண்டுமானால், மனிதன் வாழ்ந்திடும் களம். நிலம், சமுதாயம், சமுதாயத்தின் நிலை, சூழ்நிலை முக்கியமாகிறது—மூலமும் ஆகிறது.

## 448. முதல் தேவை முக்கிய தேவை

தட்ப வெட்ப வறண்ட நில வளம், இயற்கையின் திடீர் மாறுதல்களின் விளைவு ஆகிய சூழ்நிலையின் காரணமாக முதல் தேவைகள், தேவையான அளவு, தேவையான நேரத்தில் கிடைக்காத—கிடைக்க முடியாத திருப்தியற்ற நிலையில் ஏற்கெனவே அறிவையும் ஆராய்ச்சியையும், சூழ்நிலையையும் தெரிந்து — தெளிந்து — புரிந்து சேமித்து வைத்த மனிதனது தேவைக்கு மேற்பட்ட தேவையில்—முதல் தேவையில் முக்கியமான உணவு உடைகளை—தெரிந்தோ தெரியாமலோ தேவையான அளவு எடுத்துக் கொள்கிறான்.

## 449. வாழ்வில் இவ்வளவும் புகுந்தன

(இந்த நிலையில்) ஏய்ப்பவனும் ஏய்க்கப்படுபவனும் — எத்தனும், ஏமாளியும் — சுரண்டுபவனும், சுரண்டப்படுபவனும்—உழைப்பவனும், உழையாது பிறர் உழைப்பை உறிஞ்சி உண்டு கொழுத்திடுவோனும்—நன்மையும், தீமையும்—பொய்யும், புரட்டும் புகுந்தன மனித வாழ்வில்!

## 450. எத்தனையோ மனப் போராட்டங்கள்

மனித வாழ்வு—இன்றைய மனித வாழ்வு எத்தனையோ மனப் போராட்டங்களிடையேயும் சுருங்கக் கூறுமிடத்து, வசதியையும் வாய்ப்பையும் - சமயத்தையும், சந்தர்ப்பத்தையும் — அறிவையும் ஆற்றலையும்—அறியாமையையும், அஞ்ஞானத்தையும் பெருமளவு விஞ்ஞானத்தைத் துணைகொண்டு நடத்திடும் நிலையில் இருக்கிறது.

## 451. பாடிவிட்டால் தீருமா?

''மனிதர் உணவை மனிதர் பறித்திடும் வழக்கம் இனி உண்டோ'' என்று பாடிவிட்டால் மட்டுமே போதுமா? போதாதே! மனிதன் உணவை இன்னொரு மனிதன் பறிக்கிறான்! ஏன்? எந்தச் சூழ்நிலையில்?

## 452. சிக்கிச் சீரழிந்த நிலை

மனிதர் உணவை மனிதர் பறிப்பது மட்டுமல்ல, மனிதனை மதிக்காக மனப்பான்மை, நிறுத்துப் பார்த்திடும் நேர்மையற்ற நிலை—மதம், சாதி, ஆண்டவன் தூதன், ஆண்டான் அடிமை, பிறப்பால் உயர்ந்தோன், பிறப்பால் தாழ்ந்தோன், ஏழை பணக்காரன் இன்னும் எத்தனை எத்தனையோ முரண்பட்ட கொள்கையினிடையே சிக்கிச் சீரழியவில்லையா, இன்றைய மனித வாழ்க்கை!

## 453. ஒருவனை ஒருவன் சுரண்டுதல்

எத்தனையோ சிக்கல்களுக்கிடையே முரண் பட்ட மூடநம்பிக்கைகளுக்கிடையே — அறிவாளி அறிவற்றவனையும் — இருப்பவன் இல்லாதவனையும்—பலமுள்ளவன் பலமற்றவனையும் — சுரண்டிச்

சுகபோகியாக வாழ்ந்திட வாய்ப்பும் வசதியும் அமைந்ததாகத்தானே இன்றைய சமுதாயம் இருக்கிறது.

## 454. சுயமான சிந்தனை மாறுதல்

வாழ்வுச் சிக்கல்களைச் சீர்படுத்தி, செப்பனிட்டு முரண்பட்ட கொள்கைகளிலே தெளிவடைந்து. மூட நம்பிக்கைகளை முறியடித்துச் சுய சிந்தனையாளனாக மனிதன் மாறிடவேண்டாமா?

## 455. சிக்கல்கள் ஒழிய வேண்டாமா?

வாழ்வில் ஏன் சிக்கல்கள் ஏற்படுகின்றன? எத்தகைய முரண்பட்ட கொள்கைகள் நீக்கப்பட வேண்டும்? மூடநம்பிக்கைகள் எவை எவை? என்றெல்லாம் மனிதன் சிந்தித்துச் சிந்தனைத் தெளிவு பெற்றுத் தெளிந்த வாழ்வு — திருப்தியான வாழ்வு — மனிதனை மனிதாக வாழ வைத்திடும் வாழ்வு — நாகரிக வாழ்வு — நல்ல வாழ்வு வாழ வேண்டாமா மக்கள்!

## 456. இன்றையப் பணி என்ன?

நாகரிக வாழ்வு — நல்வாழ்வு வாழ்ந்திட• மக்களைத் தயார் செய்திடுவதே இன்றைய பணி — முதற்பணி—முக்கிய பணி — மக்கட் பணி மனிதாபிமானம் படைத்த எவரும் இந்தமுயற்சியில் ஈடுபடத் தயங்கிடவோ — மயங்கிடவோ — மருண்டிடவோ கூடாது! கூடாது!

## 457 மொழியே முதற் கருவி

மக்களிடையே எத்தகைய மனமாற்றமும், எண்ணத்தெளிவும், கருத்துக்களும் பரவிட, எளிதில் பரவிட மொழி, முதற் கருவியாக விளங்குகிறது

## 458. கருத்துக்கள் பரவுதல் எப்படி?

மொழி வழியேதான் எத்தகைய கருத்துக்களும் பரவுகின்றன முதலில்.

## 459. வாழ்வின் மாறுதலை ஏற்படுத்துவது

தமிழ் மொழி மூலம், முத்தமிழ் மூலம், தமிழரது வாழ்வின் மாறுதலை உண்டாக்கிட முடியும் நிச்சயமாக.

## 460. தன்மான முன்னோராக வழி

தமிழர், தம்மின மொழியை, தமிழ் மொழியைப் பெரிதென மதித்துப் போற்றி, புகழ்ந்து, பரப்பிடும் நிலைமை, மறுமலர்ச்சி, தமிழின் மறுமலர்ச்சி பூத்துக்குலுங்கி வரும் இந்த நேரத்திலேதான், இந்தச் சூழ்நிலையில்தான், தமிழரை, தன்மான முன்னோராக, நாகரிக மாந்தராக, நல்ல வாழ்வு நடத்திடும் மனிதராக மாற்ற முடியும்.

## 461. பயன்பெருகத் தாம் உயரும்

பயன் தரும் எந்தக் காரியமும் தரமுள்ளவை யாகத்தான் இருந்திட வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. துவக்கத்திலே. பயன் பெரிதாகவும் தரம் சிறிதாகவும் இருக்கலாம். பயன் பெருகப் பெருக, தரத்தைத்தானே உயர்த்திப் பண்படுத்திட முடியுமே!

## 462. எந்த விதத்தில் நடமாடின?

தேசியகவி பாரதியின் பாடல்கள்தான் மக்களிடையே எந்த விதத்தில் நடமாட ஆரம்பித்தன? தரம் கருதியா, முதலில் மக்கள் மனதில் பதிந்தன. இல்லையே?

## 463. மக்களை தட்டி எழுப்பின

பாரதியின் பாட்டும் ஒருபாட்டா? என்று எத்தனை புலவர்கள் பரிகசித்தனர் பாரதியின் பாட்டை, ஆரம்பத்தில் ஆனால்...? பயன் வெள்ளையனை விரட்டிட மக்களிடையே வீராவேச உணர்ச்சியைத் தட்டி எழுப்பின பாரதியின் பாடல்கள். அந்தக் காலத்தில்

## 464. வீர உணர்ச்சியை எழுப்பியது

''அச்சமில்லை! அச்சமில்லை! உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை! அச்சமில்லை!'' என்று மக்கள் வெள்ளையனை எதிர்த்து ஆர்ப்பரிக்கும் அளவுக்கு வீர உணர்ச்சியைத் தட்டுயெழுப்பியதே பாரதியின் பாடல்கள் அன்று

## 465. நாசகாரியங்களை அறியவில்லை

தமிழினிடையே தமிழர் பற்றுக் கொள்ளாததற்குக்காரணம், தமிழ்நாடு என்றால், அது குறுகிய மனப்பான்மை என்றும், தமிழ் மொழி என்றால். அது உத்தியோகத்துக்கு லாயக்கானதல்ல என்றும், தமிழ்ப் படித்த ஒரு சில வட்டாரங்களிலே உலவி வந்ததும் தமிழ் நாட்டின் எல்லையைக் குறிக்க வந்தால், தமிழினுடைய மேன்மையைப் பண்பைக் குறித்தால். தமிழனுடைய தனித் தன்மையைக் குறித்தால், நாம் நாட்டுக்குச் செய்கின்ற நாசகாரியங்கள் என்று தவறாகத் தெரியாமல், பாமரர்களும், படித்தவர்களும் கருதினதும்தான் ஆகும். தெரிந்து பாமரர்களுக்குப் பரிந்து பேசுவது போல, நடிக்கும் நயவஞ்சகர்கள் நாட்டிலே உண்டாக, எத்தர்களும் ஏமாளிகளும் ஏற்பட்டனர். ஏமாற்றி

வாழ்பவன் எத்தன்; ஏமாறுபவன் ஏமாளி, தன்னுணர்வு அற்ற மக்களால் தமிழும் தமிழ் அறிஞர்களும் போற்றப் படாமல் மூலை முடுக்குகளிலே தூங்கிக் கிடந்தனர்.

## 466. நாவலர்களும், பாவலர்களும் செய்தவை

நாவலர்களும் பாவலர்களும் சங்க இலக்கியங்களைச் சுற்றி நாலு பக்கமும் வேலி அமைத்து, இங்கு எட்டாத அளவுக்கு எட்டடி உயரத்தில் எழுப்புச் சுவரை எழுப்பி வைத்துக் கொண்டு, "'உள்ளே ஆடுது காளி, வேடிக்கை பார்க்க வாடி'' என்பது போலத் 'தொல்காப்பியத்'தைப்பார்? அதன் தொன்மையைக் காணீர் என்றால் அதனிடம் யார் அனுகுவார்?

## 467. இலக்கிய பூங்காவுக்கு வழி

சங்க இலக்கியங்களை வீட்டை விட்டு வெளியேற்றி, நாட்டிலே நடமாட விடவேண்டும் நடன சுந்தரிகளாகச் சிறு சிறு பிரதிகள் மூலம் தொல்காப்பியக் கருத்துக்களைத் தொகுத்து வெளியிட்டால் தான், தொல் காப்பியம் சிறு சிறு குழந்தைகளாக ஒவ்வொருவருடைய மடியிலேயும் மனதிலேயும் தவழும். ஒவ்வோர் இல்லமும் இலக்கியப் பூங்காவாகக் காட்சியளிக்கும்.

## 468. புலவர்கள் உழவர்களாதல் வேண்டும்

இன்றையப் புலவர்கள், உண்மையிலேயே இனிமையாயும் எளிமையாயும் சங்க இலக்கியத்துடன்சேர்ந்து மக்களுக்கு ஊட்டியிருப்பார்களானால், சங்க காலப் புலவர்களைப் போற்ற வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்குமானால், அவர்கள் ஒவ்வோர் இல்லத்தையும் இலக்கியப்

பூங்காவாக்கும் உழவர்களாக இருந்திருக்க வேண்டும்!

## 469. மறைக்கப் பட்டது எப்படி?

புலவர்கள் தாங்கள் நன்மை செய்வதாய்க் கருதிக்கொண்டு, ஒரு சில புலவர்களையும் கவி களையுமே பொது மக்களின் பாராட்டுக்கு, அந்த ஒரு சிலரே அருகதையானவர்கள் என்று சொல்லி யும் வருகின்றார்கள். அதன் மூலம் உண்மைக் கவிகள், உயிர்க் கவிகள், சங்ககாலப் புலவர்கள் மறைக்கப் படுகிறார்கள் என்பதை மறந்து விடுகிறார்கள்.

## 470. கம்பனையே புகழ்ந்தனர்

கம்பனை எந்த அளவுக்குப் பொதுமக்களுக்கு அறிமுகப் படுத்தினார்களோ, அந்த அளவுக்குச் சங்க காலப் புலவர்களை அறிமுகப்படுத்தவில்லை. கம்பனைத் தெரிந்த பொதுமக்கள்தான். அதிகம் இருப்பவர்களே தவிர, இளங்கோவைப் பற்றித் தெரிந்தவர்கள் கொஞ்சமாகத்தான் இருப்பார்கள். வேண்டுமென்றால், தில்லையில் ஒரு ஓட்டுப் பெட்டியை வைத்து, பிரச்சாரம் இல்லாமல், அப்படி இருந்தால் இரு பக்கமும் நடந்தி, கம்பனுக் டிம் இளங்கோவுக்கும் ஓட்டுப் போடச் சொன்னால், தேர்தலில் கம்பன்தான் வெற்றி பெறுவான்.

## 471. காணாதபடி திரையிட்டார்கள்

அகநானூற்றையும், புறநானூற்றையும் மக்கள் மறக்க நேர்ந்தது. கற்றறிந்தோர் ஏற்றும் கலித் தொகையைக் கற்றறிந்தோரிடம் காண்பதே அரி தாகி விட்டது. பரிபாடலைப் பார்க்கவே முடிய வில்லை. ஆகவே, சங்க இலக்கியங்கள் மங்கி,

மக்களுடைய மனத்தைப் பெறாமல் போனதற்குக் காரணம் அந்தச் சங்க இலக்கியக் கர்த்தாக்களைக் காணமுடியாதபடி நமது கண்முன் திரை போட்டு விட்டார்கள்.

## 472. எதை விரும்புவார்கள்?

மேன்செஸ்டர், கிளாஸ்கோ முதலிய இடங்களிலிருந்து மெல்லிய துணிகள் வருகின்றன என்றால், லாங்கிளாத்துச்கு அவ்வளவு கிராக்கி இருக்காது என்பது மட்டுமல்ல; சேலம் ஆறு, ஏழு முழ வேட்டிகளுக்கும் மதிப்பு இருக்காது. ஆமதாபாத் புடவைகள் அமோகமாகக் கிடைக்கின்றன என்றால், ஆரணங்குகள் பெங்களூர்ப் புடவையை எப்படி விரும்புவர்?

## 473. புலவர்களின் இயல்பு

ஒருவர் எழுதின புத்தகத்திற்கு மறுப்போ அல்லது அதில்ஏதாவது குறையோ காணாவிட்டால் சில புலவர்களுக்குத் தூக்கம் வராது. திருவிளையாடற் புராணத்திற்கு விளக்கவுரை என்று. திரு.வி. கலியாண சுந்தரனாரால் ஒரு புத்தகம் பிரசுரிக்கப்படும். அந்தப் புத்தகம் அச்சில் இருக்கின்ற அதே நேரத்தில,அதே அச்சுக்கூடத்திலேயே திரு வி.க. வுக்குச் சில கேள்விகள் என்று ஓர் துண்டுப் பிரசுரம் வெளியாகும். ஒருவர் போட்ட புத்தகத்திற்கு இன்னொருவர் மறுப்பு எழுதாவிட்டால் அவருக்கு நிம்மதி ஏற்படாது. காரணம் அவர்களிடம் மூலதனம் குறைவு.

## 474. நெற்றிக் கண்ணே போதுமா?

நான் ஒரு புலவரைப் பார்த்து, "தோழரே! அணுகுண்டு கண்டு பிடித்தது எவ்வளவு ஆச்சரியம்!

அதன் அழிவு சக்தியைக் கேட்பீரா?" என்றால், அது என்னப்பா பெரிது; ஆச்சரியம்! அதன் அழிவு சக்தியைக் கேட்பீரா?" என்றால், அது என்னப்பா பெரிது; ஆங்கிலேயனோ, அமெரிக்கனோ தான் அழிவு சக்தியை ஏற்படுத்த அந்த ஆயுதத்தைக் கையிலேந்த வேண்டும். நம் பரமசிவம் நெற்றிக் கண்ணைத் திறந்தால் போதும். கண்ணிலிருந்து நெருப்பு ஜ்வாலைகள் பறக்கும். எதிரிலே உள்ள அத்தனைப் பொருள்களும் சாய்பலாகி விடும்" என்று பதில் சொல்லுவார்.

## 475. காலத்தின் கண்ணாடி

பாரதிதாசன், மேல்நாட்டுக் கவிகளைப்போல் கலையைக் காலத்தின் கண்ணாடியாக்குகிறார். கால்த்தையே சிருஷ்டிக்கிறார் காலத்தையே சிருஷ்டிக்கிறார் என்பது மாத்திரமல்ல, காலத்தை மாற்றுகிறார்; காலத்தை மாற்றுகிறார் என்பது மாத்திரம் அல்ல மாறிய காலத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறார் அழைத்துச் செல்கிறார் என்பது மாத்திரம் அல்ல; சமயம் கிடைத்தால் முன்னேயும் பிடித்துத் தள்ளுகிறார். தென்றல் வளரும்; நிலவு வளரும்; செல்வம் வளரும் அவை போல, அவரது கவிதைகளும் வளரவேண்டும்.

## 476. கம்பராமாயணப் புலம்பல்

மீனாட்சி சுந்தரனார்களும் சிதம்பரனார்களும் புத்தம் புதுக் கருத்துக்களை காவியங்களை இயற்றித்தரத்தானே இருக்கிறார்கள். சேரன் செங்குட்டுவனின் வீரத்தைப் பற்றி ஒரு பாட்டு பாடுங்கள் என்று மீனாட்சி சுந்தரனார்களைக் கேளுங்கள். 'ஏன்? வீரம் சேரன் செங்குட்டுவனிடம் தான் இருக்கிதா? கம்பராமாயணத்திலே வீரம் செறிந்திருக்கிறதே' என்பார்கள்.

## 477. சீர்திருத்தத் திருமண விருப்பம்

எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் பார்ப்பனர்களுக்கு அடுத்த சாதி நாங்கள்தான் என்று பெருமை பேசிடும் முதலியார் வகுப்பைச் சார்ந்தவர்களாக இருப்பினும் அல்லது செட்டியார், நாயுடு, சத்திரியர் என்று கூறிக் கொள்ளும் எந்த வகுப்பைச் சார்ந்தவர்களாக இருப்பினும், அந்தந்த வகுப்பிலுள்ள பெரும்பாலான வாலிபத் தோழர்கள் அனைவரும் இப்படிப் பட்ட சீர்திருத்தத் திருமணங்கள் செய்து கொள்ளுவதிலே பெரிதும் அக்கறை காட்டுகின்றனர்.

## 478. முன்னேற விரும்புகின்றனர்

இன்று எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களானாலும் உலக நிகழ்ச்சிகளைக் கொண்டு முன்னேற விரும்புகிறார்கள். தெளிந்த அறிவு காட்டும் நல்ல போக்கின்படி நடக்கத் துணிவு கொண்டுள்ளனர். எனவேதான் நாள் தோறும் இப்படிப்பட்ட சீர்திருத்தத் திருமணங்கள் நடைபெற்று வரும் நல்ல நிலைமை ஏற்பட்டுள்ளது.

## 479. எதிர்ப்பே இல்லை எனக் கூற இயலாது

எவ்வளவு சீர்திருத்தத் திருமணங்கள் நடைபெற்றாலும், இன்னமும் சாதாரண மக்களிடையே இப்படிப்பட்ட மணமுறைகளைப்பற்றிய தவறான கருத்துக்களும் பொருத்தமற்ற சந்தேகங்களும் தோன்றாது அடியோடு மறைந்து விடவில்லை. எதிர்ப்புகள் அன்று போல அதிக அளவிலே இருக்கிறதே தவிர எதிர்ப்பே இல்லை என்று ஏற்பட்டு விடவில்லை என்பதை நாம் உணரத்தான் வேண்டும்.

## 480. ஒருவரை ஒருவர் அறிதல்

ஆணும் பெண்ணும் சரி முன்னதாகவே ஒருவரைப் பற்றி மற்றவர் நன்றாக அறிந்து தெரிந்து கொண்ட பின்னர்தானே திருமணம் நடைபெற வேண்டும் என்று நாங்கள் கூறுகிறோம், செய்கிறோம்.

## 481. வாழ்க்கைத் துணைவர்கள்

திருமணம் செய்து கொள்ளும் மணமக்கள் தங்கள் வாழ்க்கையில் ஒருவருக்கு ஒருவர் துணைவர்களாகிறோம் என்று எடுத்துக்கொள்ளும்உறுதிக்குச் சாட்சிகளாகத் தான் வருகிறோம். இங்கே கூடியுள்ள உற்றார் உறவினர் உட்படவும் அதற்காகத்தானே வந்துள்ளனர்.

## 482. சந்தேகமும் எதிர்ப்பும் ஏன்?

மணம் செய்து கொள்வதற்குச் சாட்சிகளாக இருக்கவும், மணமக்களை வாழ்த்தவும் புத்திமதிகளைக் கூறவுந்தான் நாம் அனைவரும் அங்கே கூடுகிறோம். இதைத்தான் நாம் செய்கிறோம். இதைக் கண்டு ஏன் சிலர் சந்தேகப்பட வேண்டும்? எதற்காக எதிர்ப்புக் காட்ட வேண்டும்?

## 483. எவரும் மறுத்துப் பேசவில்லை

சங்கராச் சாரியாரிலிருந்து சாதாரணச் சாமியார் வரை, படித்த பார்ப்பனர்களிலிருந்து படிக்காத பாமரர் வரை, அவர்கள் யாராக இருப்பினும் இதுவரை, சீர்திருத்தமுறையில்தான் திருமணங்கள் நிகழவேண்டும், நடத்தப்படவேண்டும் என்பதற்காகச் சுயமரியாதைக் காரர்களாகிய நாங்கள் கூறிவரும் காரணங்களை ஒருவரும் மறுத்துப் பேசியது கிடையாதே.

## 484. காதலிக்குத் தேவை யார்?

தான் வேட்டையாடிக் கொன்ற புலியின் நகத்தையும் பல்லையும் காதலியிடம் காட்டி, "பெண்ணே! இதோ பார்! நான் வேட்டையாடிய புலியின் நகம். இதுதான் அதனுடைய பல்! என் வீரத்தைக் கண்டாயா! இவற்றை என் வெற்றிச் சின்னமாக உனக்குத் தருகிறேன். இவற்றைக் கயிற்றில் கோர்த்துக் கழுத்தில் தாலியாகக் கட்டுகிறேன்" என்று கூறுவதானால், எத்தனை பெண்கள் 'சரி' என்று ஏற்பர்! ஏற்கும் சூழ்நிலை இன்று இருக்கிறதா? இல்லையே!

## 485. காதலியின் அச்சமும் நடுக்கமும்

"புலியைக் கொன்றேன். இதோ அதன்பல், அதன் அளவைப்பார்! நகத்தின் கூர்மையைப் பார்!" என்று கூறும் காதலனின் வீரத்தையா இந்தக் காலத்துப் பெண் எண்ணிப் பெருமைப்பட முடியும்? காதலனிடம் சிக்கிய காட்டுப்புலிக்கே இந்தக்கதி ஏற்பட்டு விட்டதே! இப்படிப்பட்டவனிடம் நாம் சிக்கி விட்டால் என்ன பாடுபட வேண்டியிருக்குமோ என்று தானே அஞ்சி நடுநடுங்குவாள்.

## 486. வீரத்தைப் பெரிதாக மதிப்பதில்லை

இந்தக் காலத்துப் பெண்கள், தங்கள் கணவன்மாரிடம் புலிவேட்டையாடும் அளவுக்கு உள்ள வீரத்தை எதிர்பார்க்கவில்லை. எந்தக் கணவனும் 'புலி' என்றவுடனே கிலி கொண்டிடும் நிலையில் தானே இருக்கிறார்கள். பெண்கள் இன்று தங்கள் கணவன்மார்களின் கட்டற்ற வீரத்தை மட்டுமே பெரிதாகக் கருதவில்லை.

## 487. கணவன் எப்படி இருக்க வேண்டும்?

தங்களுக்கு வரப்போகும் கணவன் அழகாக இருக்க வேண்டும். அதோடு அன்புடையவனாக நடந்து கொள்ள வேண்டும். நல்ல குணவானாக, பண்புள்ளம் படைத்தவனாக விளங்க வேண்டும். குடும்பத்தில் அக்கறையுடையவனாகத் திகழ வேண்டும் என்றுதான் விரும்புகிறார்கள்.

## 488. அவதிப்படும் மனைவியர்

எத்தனையோ குடும்பங்களில் நாம், கணவனால் கவனிக்கப்படாத மனைவியரைக் காண்கிறோம், குடிகாரக் கணவனிடம் அடிக்கும் உதைக்கும் தினம் தினம் ஆளாகி அவதியுறும் மனைவிமாரின் கண்ணீரைக் காண்கிறோம். கட்டிய மனைவியைத் கண்ணெடுத்தும் பாராது விலை மாதரிடமே திரிந்து வரும் வீணர்களால் மனம் வெதும்பித் துடித்திடும் பெண்களையும் நாம் பார்க்கிறோம்.

## 489. பிரிந்து செல்லும் உரிமை

(ஆகவேதான்) கணவனால் கொடுமைப் படுத்தப்படும் மனைவியும் சரி அல்லது மனைவியினால் தொல்லைக்கு ஆளாகும் கணவனும் சரி, தங்களுக்குள் பிடித்தமில்லாதபோது விவாகரத்து செய்து கொள்ளும் உரிமை பெற்றாக வேண்டும் என்று வலியுறுத்தி வந்தோம்.

## 490. கணவனுக்கும் மனைவிக்கும் விடுதலை

விவாகரத்து உரிமை வழங்கும் சட்டம் அமுலாக்கப் பட்டு விட்டால், கண்டபடி திரியும்

கணவனை மனைவி தட்டிக் கேட்டு, திருந்தாவிடில், விவாக விடுதலை பெற்றுக் கொள்ள முடியும். குடிகாரக் கணவனின் கொடுமைக்கு நாளெல்லாம் ஆளாகி அவதியுறும் மனைவி அவனிடமிருந்து விடுதலை பெற வழி பிறக்கும்.

## 491. திருத்திக் கொள்ள வழி

விவாகரத்து உரிமை இருந்தால், பொருத்த மற்ற மணங்கள் தவறுதலாக நடந்து விட்டாலும் பின்னர் அதைத் திருத்திக் கொள்ள வழிவகை பிறக்க முடியும். பிடித்த மற்றவர்கள், காலமெல் லாம் கூடி வாழ்வது என்பது நடவாத காரியம் தானே! எனவே பிடித்த மற்றவர்கள் விவாகரத்து கோரி விடுதலை பெறும் உரிமையைப் பெறுவது நன்மைதானே!

## 492. துன்பத்திலிருந்து மீள வழி

மனைவியைக் கவனியாது பிற பெண்கள் மீது நாட்டம் செலுத்தும் கணவனிடமிருந்து விடுதலை பெற மனைவி கோர்ட்டில் வழக்குத் தொடர முடியும். என் கணவன் வீட்டுக்கு இரவில் வெகு நேரம் கழித்தே வருகிறார். வந்தாலும் என்னிடம் பேசுவதில்லை. சம்பாதிக்கும் பணத்தையும் செலவுக்குக் கூடத் தருவதில்லை. தூக்கத்தில் சாந்தா, காந்தா என்று கனவு கண்டு வாய் பிதற்று கிறார். இவருக்கு என்மீது பிரியமில்லை. வேறு பெண்களிடம் தொடர்பு கொண்டிருக்கிறார் என்று தெரிகிறது. ஆகவே, நான் இவரிடமிருந்து விவாகரத்து கோருகிறேன் என்று மனைவி கோர்ட்டில் கூற முடியும்.

## 493. அவசியமானால் விடுதலை கிடைக்கும்

கோர்ட்டாருக்கு இதைத் தீர விசாரித்து, கேள்விக்கு மேல் கேள்விகள் கேட்டு, ஒழுங்கான வாழ்க்கை நடத்த கணவன் லாயக்குள்ளவன்தானா என்பதை ஆராய்ந்து பார்த்து, அவசியமாயின் அந்த மனைவிக்கு விவாகரத்து உரிமை தருவார்.

## 494. பாராட்டும் வாழ்த்தும்

சுயமரியாதைத் திருமணங்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் நடக்கத் தொடங்கி விட்டால், நாட்டிலே பரவிக் கிடக்கும் மூடக் கொள்கைகள் தாமாகவே சீந்துவாரற்றுப்போய் விடுமே. ஆகவே தான் இப்படிப் பட்ட மணம் செய்து கொள்ளும் மணமக்களை நான் பெரிதும் பாராட்டு கிறேன். மனதார வாழ்த்துகிறேன்.

## 492. பொது நன்மையை விரும்புகிறார்களா?

மக்கள் வாழ வேண்டும். உலகம் உருப்பட வேண்டும். வறுமை ஒழிய வேண்டும் என எந்த முனிவராவது, எந்த பக்தனாவது, நாயன்மாராவது கேட்டிருக்கிறார்களா? இல்லையே! பொது நன்மைக்காகக் கடவுளை வரம் கேட்ட பக்தர்கள் யாராவது காட்ட முடியுமா? ஒருவரும் கிடைக்க மாட்டார்கள்.

## 496. சுக போகத்தையே தேடுகின்றனர்

எல்லாரும் தங்கள் சுய நலத்தைத்தானே பெரியதாகக் கருதியிருக்கிறார்கள். எனக்கு இந்திர பதவியைக் கொடு என்றொரு முனிவர் கேட்பார். எனக்குக் காமதேனு வேண்டும். கற்பக விருட்சம் தேவை என்று மற்றொரு தவசி கேட்டிருக்

கிறார். மேனகை, ரம்பை, திலோத்தமை, ஊர்வசி போன்ற தேவலோகத்து நடனமாதர்களின் சுகத்தை அனுபவிக்க சொர்க்க வாசம் தேவையென்று ஒரு நாயன்மார் கேட்டார்.

## 497. திருமணத்தில் அவை தேவையா?

வைகுந்த பதவியையும் சிவலோக பதவியையும் தங்களுக்குக் கேட்ட அந்த முனிவர்களையும் அவர்கள் பாடிய பாடல்களையும், திருமணத்தில் அழைப்பதும், பாடுவதும் பொருத்த மற்றதுதானே. அங்கே வந்தாலும் அவர்கள் தங்களுக்காகத்தான் எதையாவது கேட்பார்களே தவிர, நமக்காக ஒன்றும் பேசமாட்டார்கள். கேட்க மாட்டார்களே! ஆகவேதான் எந்தப் பக்தரையும் சரி, அய்யரையும் சரி நாங்கள் அழைக்கவில்லை. அழைப்பதுமில்லை. அதைப் போலவே நமக்காக எழுதப்படாத, பாடப்படாத எந்த பாடலையும் பாடுவதில்லை. பாடவும் விடுவதில்லை.

மறைமலையடிகள் நூல் நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1

48938

## ஆசிரியரின் பிற நூல்கள்

- ☐ அறிஞர்கள் உதிர்த்த முத்துக்கள்
- ☐ பிரமுகர்கள் உதிர்த்த முத்துக்கள்
- ☐ பெரியார் உதிர்த்த முத்துக்கள்
- ☐ அண்ணா உதிர்த்த முத்துக்கள்
- ☐ ராஜாஜி உதிர்த்த முத்துக்கள்
- ☐ திருக்குறள் முத்துக்கள்
- ☐ திருக்குறள் கூறும் குடும்ப வாழ்க்கை
- ☐ தமிழர் திருமணம்
- ☐ பெண்ணின் வாழ்க்கை
- ☐ அன்னா கரினீனா
- ☐ அம்மா
- ☐ மனம் போல் வாழ்வு
- ☐ மேடம் பவாரி
- ☐ வாடா மல்லிகை
- ☐ குற்றமும் தண்டனையும்
- ☐ ஐந்து சகோதரிகள்
- ☐ நா நா
- ☐ நான்கு நண்பர்கள்
- ☐ ஈசாப் நீதிக் கதைகள்
- ☐ ஈசாப் அறிவுக் கதைகள்
- ☐ ஈசாப் சின்னஞ்சிறு கதைகள்
- ☐ சித்திரபுத்திரர் கதை

## ஆசிரியரின் பிற நூல்கள் :

- அறிஞர்கள் உதிர்த்த முத்துக்கள்
- பிரமுகர்கள் உதிர்த்த முத்துக்கள்
- பெரியார் உதிர்த்த முத்துக்கள்
- அண்ணா உதிர்த்த முத்துக்கள்
- ராஜாஜி உதிர்த்த முத்துக்கள்
- பாரதியார் உதிர்த்த முத்துக்கள்
- நாமக்கல் கவிஞர் உதிர்த்த முத்துக்கள்
- அண்ணாவின் அறிவுக் கனிகள்
- திருக்குறள் முத்துக்கள்
- திருக்குறள் கூறும் குடும்ப வாழ்க்கை
- தமிழர் திருமணம்
- சித்திரபுத்திரர் கதை
- ஈசாப் சின்னஞ் சிறு கதைகள்
- ஈசாப் அறிவுக் கதைகள்
- ஈசாப் நீதிக்கதைகள்
- மனம் போல் வாழ்வு

## உலகப் புகழ் பெற்ற நாவல் வரிசை :

- அம்மா
- பெண்ணின் வாழ்க்கை
- வாடா மல்லிகை
- குற்றமும் தண்டனையும்
- மேடம் பவாரி
- அன்னாகரினீனா
- நா நா
- ஐந்து சகோதரிகள்
- நான்கு நண்பர்கள்

208